இது
# நம்தேசம்

'Registered in the department of posts of Srilanka under No.QD/173/News/2014'

பார்வை-02 | ஏப்ரல், 22.2015 | வியூகம்-11 | பக்கங்கள்-24 | விலை-ரூ.30.00

Web - www.ithunamthesam.com
Email - ithunamthesam@gmail.com




# யாரை ஏமாற்றுகிறார் சம்பந்தன்

தேசத்தின் உண்மைக் குரல்

# மலையக மக்களுக்கு 16 பாராளுமன்ற பிரதிநிதித்துவம் தேவை

இலங்கையில் மலையக மக்கள் 15 லட்சம் பேர் வரை வாழ்கின்றனர். விகிதாசாரப்படி பார்த்தால் 16 மலையகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். ஆனால் 7 உறுப்பினர்களே தெரிவு செய்யப்படுகின்றனர். 1947 ஆம் ஆண்டு தேர்தலின்போது பாராளுமன்றத்தில் மொத்தம் 95 தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இருந்தனர். அப்போது மலையகப்பிரதிநிதிகளாக 8 பேர் தெரிவு செய்யப்பட்டனர். தற்போது 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ள நிலையில் 7உறுப்பினர்களே தெரிவு செய்யப்படுகின்றனர். அதிலும் இருவர் தேசியப்பட்டியல் உறுப்பினர்கள்.

நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி மாவட்டங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யக் கூடிய வகையில் மலையக மக்கள் செறிவாக வாழ்கின்ற போதும் கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது நுவரெலியா மாவட்டத்திலிருந்து மட்டும் ஐவர் தெரிவாகி இருந்தனர். 1989 க்குப் பின்னர் கண்டி மாவட்டத்திலிருந்து பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை.

தொகுதிவாரித் தேர்தல் முறை வந்தால் மலையகப் பிரதிநிதித்துவம் மேலும் குறையலாம். நுவரெலியா, மஸ்கெலியா என்கின்ற 3 அங்கத்தவர் தொகுதி மட்டும் தற்போது மலையக மக்களுக்கென உள்ளது. இதில் இருவர் தெரிவாகலாம். ஏனைய இடங்களில் மலையக மக்களை மையமாக வைத்து தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்படவில்லை.

எனவே தொகுதிவாரித் தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதாக இருந்தால் மலையக மக்களுக்கென தேர்தல் தொகுதிகளை உருவாக்கிவிட்டே அறிமுகப்படுத்த வேண்டும். நுவரெலியா, கண்டி, பதுளை, இரத்தினபுரி மாவட்டங்களில் இவ்வாறான தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும். அப்பிரதேசங்களில் சிங்கள மக்களும் வாழ்வார்களாக இருந்தால் இரட்டை அங்கத்தவர் தொகுதிகள் உருவாக்கப்படல் வேண்டும். வரலாற்று ரீதியாக பேரினவாத சக்திகள் உள்ளதையும் பறித்தெடுத்தார்களே தவிர புதிதாக எதையும் கொடுக்கவில்லை என்பதை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

இனப்பிரச்சினை உள்ளதொரு நாட்டில் இனங்களுக்கிடையே நியாயமான வகையில் அதிகாரங்களைப் பங்கிடும் போதுதான் ஒடுக்கப்படும் இனங்களின் அரசியல் அபிலாசைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு மலையக மக்களும் விதிவிலக்கல்ல. வெறுமனவே பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் மட்டும் அபிலாசைகளை தீர்க்க போதுமானதல்ல. இப்பிரதிநிதித்துவம் மலையக அரசியலை அரசியல் அரங்குகளில் பேசுபொருளாக்க மட்டுமே உதவும். அதனைக்கூட மலையகப்பிரதிநிதிகள் சரிவரச்செய்தார்கள் எனக் கூறிவிட முடியாது.

ஓரளவு அதிகாரமுடைய உள்ளூராட்சி சபைகள் கூட மலையக மக்களுக்குப் போதுமானளவு இல்லை. 225 பிரதேச சபைகளில் இரண்டு பிரதேச சபைகள் மட்டுமே உண்டு. 43 நகர சபைகளில் மலையக மக்களுக்கு ஒன்று மட்டும் தான். மாநகர சபைகள் எதுவும் இல்லை. இங்கும் கூட தமிழ் மொழியில் நிர்வாக அலுவல்கள் நடாத் தப்படுவதில்லை.

மலையக சக்திகள் இனிவரும் காலங்களில் புதிதாகச் சிந்திப்பது நல்லது.

## புதிய கட்சி ஆரம்பிக்கும் சோமவன்ச



ஜே.வி.பி யின் முன்னாள் தலைவர் சோமவன்ச சமரசிங்க ஜே.வி.பியிலிருந்து விலகி புதிய கட்சியை அமைக்கப் போவதாக அறிவித்துள்ளார். ஜே.வி.பி மக்கள் அபிலாசைகளை இனங்காணத் தவறிவிட்டதாகவும், ஜே.வி.பியின் தற்போதைய கொள்கை சமூகத்திற்கு ஏற்றதாக இல்லை என்றும் கூறியே விலகியிருக்கின்றார். ஜே.வி.பியின் தற்போதைய கொள்கை என அவர்கள் கூறியிருப்பது மைத்திரி அரசாங்கத்தை ஆதரிக்கும் கொள்கையே ஆகும்.

ஜே.வி.பிக்குள் இருப்பவர்களில் மூத்தஉறுப்பினர் இவரேயாவார். 1969 ஆம் ஆண்டு ஜே.வி.பியில் சேர்ந்தவர். 25 வருடங்களுக்கு மேலாக ஜே.வி.பிக்கு அவர் தலைமை தாங்கியவர். ஜே.வி.பியின் இரண்டு புரட்சிகளின் போதும் உடனிருந்தவர். இரண்டாவது புரட்சியின் போது மத்திய குழு உறுப்பினர்கள் அனைவரும் கொலை செய்யப்பட்ட இவர் மட்டுமே தப்பியிருந்தார். கண்டியில் தலைமறைவாக இருந்த இவர் அப்போது அமைச்சராக இருந்த இவரது மைத்துனர் சிறிசேனாகுரேயின் உதவியுடன் லண்டனுக்கு தப்பிச் சென்றார்.

லண்டனில்இருந்து ஜே.வி.பிக்கு தலைமை கொடுத்த சோமவன்ச 2001 இல் இலங்கை திரும்பினார். 2014 இல் அவர் தலைமைப் பொறுப்பை அனுரகுமார திஸாநாயக்கவிடம் கையளித்தார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பைப் பதிவு செய்தல் தற்போதைக்கு இடம் பெறாது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தற்போது பதிவு செய்யப் போவதில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கை மட்டும் கட்சிகளிடையே கைச்சாத்திடப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி மத்திய குழுக்கூட்டத்தில் தமிழரசுக்கட்சிக்கு 51 வீதம் ஏனைய கட்சிகளுக்கு 49 வீதமும் வழங்கப்படல் வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வீதாசாரத்தை சுரேஷ் பிரேமச்சந்திரன் கடுமையாகக் கண்டித்திருக்கின்றார். கூட்டமைப்பில் இணைந்துள்ள கட்சிகளுக்கிடையே சமத்துவம் பேணப்படல் வேண்டும் என்று கூறியிருக்கின்றார். ஆனந்த சங்கரி ஒருபடி மேலே சென்று கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போதிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் ஈழவிடுதலை இயக்கம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மட்டும் கூட்டமைப்பில் இருக்க வேண்டும். ஏனையவை நீக்கப்படல் வேண்டும் எனக் கூறியிருக்கின்றார். தமிழரசுக் கட்சி கூட்டமைப்பில் உரிமை கோர முடியாது என்பதையே அவர் வற்புறுத்தியிருக்கின்றார். சித்தார்த்தன் தன்னை விட்டுச் சென்ற கோபத்தில் அவரது கட்சியையும் ஆனந்த சங்கரி கழட்டிவிட்டிருக்கின்றார்.

ஆனந்தசங்கரி இவ்வாறு பிதற்றினாலும் அவரது கருத்தை கணக்கெடுக்க யாரும் இல்லை. சுரேசின் கருத்தைக்கூடக் கேட்பதற்கு ஆட்கள் இருக்கின்றார்கள். ஆனந்த சங்கரி இவ்வாறு தான் ஒதுக்கப்படுவேன் என நினைத்திருந்தார். புலிகளுடன் முரண்படுவதைக் கூட சிலவேளை தவிர்த்திருப்பார்.

தமிழரசுக்கட்சியின் ஆதிக்கத்தை எதிர்த்து சுரேஷ்தான் அடிக்கடி புறுபுறுக்கின்றாரே தவிர ரெலோவோ, புளோட்டோ மூச்சுக்கூட விடுவதில்லை. அவற்றைப் பொறுத்தவரை சம்பந்தன் தனது தாழ்வாரத்தில் ஒதுங்க விட்டாலே பெரிய விடயம் தான்.

இந்தத் தடவை யாழ்ப்பாண மாவட்டத்தில் கொழும்பிலிருந்து தமிழ்மாறன், தவராஜா என்போரை களமிறக்க இருப்பதால் சுரேஷிற்கு மட்டும் ஒரு ஆசனத்தை வழங்கிவிட்டு ஏனையவற்றை தமிழரசுக் கட்சியே அபகரிக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இது பற்றியும் ஏனைய கட்சிகளின் குரலைக் காணவில்லை.

இதைவிட மாகாணசபை உறுப்பினர்கள் எவரையும் பாராளுமன்றத் தேர்தலில் இறக்குவதில்லை என்று சம்பந்தன் உறுதியாகக் கூறியிருப்பதாகத் தகவல். இது சித்தார்த்தன், அனந்தி, சிவாஜிலிங்கம், ஆகியோரை வெட்டிவிடுவதற்கான தந்திரம் தான். மட்டக்களப்பில் துரைரட்ணத்தை வெட்டிவிடுவ தும் இடம் பெறலாம். அங்கு துரைரட்ணம் போட்டியிட்டால் அவரே முதலாவதாகத் தெரிவு செய்யப்படுவார்.

சம்பந்தனின் தனித்த ஓட்டத்திற்குத் தடையாக இருக்கும் என்பதனாலும், தமிழரசுக்கட்சியின் ஆதிக்கம் நலிந்துவிடும் என்பதனாலும், வெளியிலிருந்து கோடிக் கணக்கில் வரும் நிதிக்குக் கணக்குக் காட்ட வேண்டும் என்பதனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு போதும் பதிவு செய்யப்படப் போவதில்லை. இதனை இது நம்தேசம் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தது.

விடுதலைக்காக ஆரம்பிக்கப்பட்ட தமிழர் அரசியல் இன்று பதவிகளுக்காக அடிபடும் அளவிற்கு பரிணாம வளர்ச்சி பெறறிருக்கின்றது.

## அந்நியர்களை வெறுக்குந்தென்னாபிரிக்கா


அந்நிய நாட்டவர்களை வெறுத்தல் என்பது பல நாடுகளில் நிகழ்கின்ற ஒன்றுதான். இங்கு வளர்ச்சியடைந்த நாடுகள் அடையாத நாடுகள் என்ற விதிவிலக்குக் கிடையாது. பிரிட்டன், அவுஸ்ரேலியா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளிலும் இடம் பெறுகின்றது. இந்தியா போன்ற வளர்ச்சியடையாத நாடுகளிலும் இடம்பெறுகின்றது. மண்ணின் மைந்தர்களின் வளங்களை அந்நியர்கள் பறிக்கின்றனர் என்பது தான் இதற்குக் காரணம்.

அவுஸ்ரேலியா, பிரிட்டன் போன்ற நாடுகளில் இதனை மையமாக வைத்து கட்சிகளே உருவாக்கப்பட்டிருந்தன. இந்தியாவில் அஷாம் மாநிலத்தில் பங்களாதேஸ் அகதிகளுக்கு எதிரான வன்முறைகள் அனைவரும்அறிந்ததே.

ஆபிரிக்க நாடுகளில் தென்னாபிரிக்கா பொருளாதார ரீதியாக வளம் பொருந்தியதும் அரசியல் ரீதியாக உறுதியாக உள்ளதுமான நாடாகும். தங்கச் சுரங்கங்கள் பொருளாதார வளத்தினை தென்னாபிரிக்காவிற்குக் கொடுக்கின்றது. நெல்சன் மண்டேலாவின் மரபு அரசியல் உறுதியைக் கொடுக்கின்றது.

இந்த வளங்கள் காரணமாக உள்நாட்டு மோதல்களினால் பாதிப்படையும் தென்னாபிரிக்காவின் அயல்நாடுகளான கொங்கோ, எதியோப்பியா, மாலாவி, மொஷாம்பிக், நைஜீரியா, சோமாலியா, சிம்பாவே போன்றவற்றைச் சேர்ந்தவர்கள் அகதிகளாக தென்னாபிரிக்காவில் தஞ்சம் அடைகின்றனர். அவரகளுக்கென பல முகாம்களும் இருக்கின்றன.

சென்றவாரம் ஆயுதமேந்திய வன்முறையாளர்கள் படைவீரர்களின் கடுங்காவல் இருக்கத்தக்கதாகவே அகதி முகாமைத் தாக்கியிருக்கின்றார்கள். வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த சிம்பாவே நாட்டைச் சேர்ந்த குடும்பம் ஒன்றின் மீது மோசமான தாக்குதலை கும்பலொன்று மேற்கொண்டது.



அவர்களின் உடமைகளும் கொள்ளையடிக்கப்பட்டன. வெளிநாட்டவர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்டன. வீடுகள் கொளுத்தப்பட்டன.

இந்த வன்முறையில் ஐந்து பேர் பலியானார்கள். பலர் காயமடைந்துள்ளனர்.

இந்த வன்முறையை அடக்குவதற்கு அரசாங்கம் பெரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. வெறுமனே பார்த்துக் கொண்டிருந்த படையினர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அரசாங்கமும் பெரிதாக இதனைப்பற்றிக் கூறவில்லை. சில அரசியல் தலைவர்கள் சிறிய கண்டனங்களுடன் தமது கருத்துக்களை நிறுத்திக் கொண்டனர். இதனைப் பெரிதாக்கி சொந்த மக்களின் ஆதரவினை அவர்கள் இழக்க விரும்பவில்லை போலத் தெரிகின்றது.

தென்னாபிரிக்காவில் 20 லட்சம் முதல் 50 லட்சம் வரை அயல் நாட்டு அகதிகள் வாழலாமென மதிப்பிடப்படுகின்றது. இதனை விட பல நூற்றாண்டுகளுக்கு மேலாக வெள்ளையினத்தவர், இந்தியர்களும் வாழ்கின்றனர்.

அயல் நாட்டு கறுப்பினத்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைகள் எதிர்காலத்தில் அவர்களுக்கெதிராக முன்னெடுக்கப்படலாம் என்ற அச்சமும் நிலவுகின்றது.

அகதிகளாக வாழும் வெளிநாட்டவர்களை சர்வதேச சமூகம் பொறுப்பெடுப்பதே இதற்குத் தீர்வாக அமைய முடியும்.

# சம்பூர் அனல் மின்நிலைய நிர்மாணத்தை அரசு மீள் பரிசீலனை செய்யவேண்டும்

## திருகோணமலை தமிழர் அபிவிருத்தி ஒன்றியம்

சம்பூர் அனல் மின்நிலைய நிர்மாணத்தை அரசு மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என திருகோணமலை தமிழர் அபிவிருத்தி ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கோரியுள்ளது. குறித்த ஒன்றியத்தின் தலைவர் வண.பிதா நோயல் இம்மானுவேல், இணைச் செயலாளர்களான க.ஜெயப்பிரகாஸ், ஒ.குலேந்திரன் ஆகியோர் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 9 வருடங்களிற்கு மேலாக சம்பூரிலிருந்து இடம் பெயர்ந்து அகதி முகாம் களில் தங்கியிருக்கும் மக்களை அவர்கள் சொந்த மண்ணில் மீளக்குடியேற்றுவதென அரசாங்கம் எடுத்திருக்கும் தீர் மானத்தை நாம் வரவேற்கின்றோம்.

அதன் முதற்கட்ட நடவடிக்கையாக 818 ஏக்கர் நிலத்தையும் முதலீட்டு வலய அபிவிருத்தியிலிருந்து மீளப்பெற்று மக்களை குடியேற்றுவதெனவும் இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக கடற்படை உயர்பாது காப்பு வலயமாகவும் பயிற்சி தளமாகவும் பயன்படுத்தப்பட்டு வரும் 237 ஏக்கர் நிலத்திலும் மக்களைக் குடியேற்ற அரசு எடுத்த முடிவை பாராட்டுவதுடன் நன்றியும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இதற்கான முயற்சிகளை மேற்கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேவேளை சம்பூரில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் 500 மெகாவோர்ட்ஸ் நிலக்கரியால் இயக்கப்படும் அனல் மின்நிலைய நிர்மாணத்தால் திருகோணமலை மாவட்டத்திற்கும் அது சார்ந்திருக் கும் மாவட்டங்களிற்கும் ஏற்படக் கூடிய பாதிப்புக்களையும் பேரழிவுகளையும் தடுக்க வேண்டுமென்ற தார்மீக எண்ணத்தை எமது அமைப்பு கொண்டிருக்கின்றது.

இந்த அனல் மின் நிலையத்தால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் என்ற வகையில் சுற்றுப் புறச்சூழல் பாதிப்பு, தொழிற்சாலை களிலிருந்து பாதரச கழிவு வெளியேற்றம், ஆசானிக் மற்றும் ஈயம் கதிர் வீச்சு மூலமாக யூரேனியம், பாரிய உலோகங் கள் ஆகியன அனல் மின் நிலைய உலையால் வெளி யேற்றப்படும்.

அவ்வாறு வெளியேற்றப்படும் போது மனித குலத்துக்குக் கூறமுடியாத பாதிப்புக்களை உண்டு பண்ணுமென பாதிப்புக் களை அடையாளப்படுத்தி ஆய்வாளர்களால் காட்டப்பட்டுள்ளது.

இவை மின் நேரடித் தாக்கத்தினால் ஆயுட்குறைவு, மாரடைப்பு, புற்றுநோய், சுவாச வியாதிகள், கருச்சிதைவு, ஊனப் பிறவிகள், சிறுவர் நுண்ணறிவு குறைதல், தொய்வு நோய், நரம்பு மண்டலம் பாதிக்கப்படுதல் போன்ற பல்வேறு நோய்களிற்கு மனித குலம் ஆளாக வேண்டிவரும்.

ஆலையில் வெளியேற்றப்படும் சாம்பல் மற்றும் கழிவுகள் காரணமாக ஏற்படும் இரசாயன பதார்த்தங்கள் மழை நீரிலும் கடலிலும் கரைந்து நிலத்தின் கீழ் உள்ள நீரிலும் மேற்பரப்பு நீரிலும் நீரை மாசு படுத்துவதுடன் நீரில் வாழும் வளங்கள் உயிரினங்கள் தமது இயற்கையான பரம்பரைப் பெருக்கத்தை இல்லாத நிலைக்கு கொண்டு சென்று விடுமென பல்வேறு ஆய்வாளர்களும், சமூகவாதி களும், சூழல் அறிஞர்களும்குறிப்பிட்டுக் காட்டும் நிலையில் இந்த அனல் மின் நிலைய நிர்மாணத்தை இலங்கை அர சாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டு மென மாவட்ட மக்கள் சமூகம் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

அதுவுமின்றி பிந்திய செய்திகளின்படி இந்திய அனல் மின் நிலைய அமைப்புக்கு மேலதிகமாக ஜப்பான் நாட்டு நிறுவனமொன்றும் அனல் மின் நிலைய அமைப் பில் ஈடுபடவிருப்பதாக கேள்வியுறும் நிலையில் இம்மாவட்டத்தில் வாழும் அனைத்து இன மக்களும் இது விடயமாக கவலை கொண்டுள்ளார்கள். அக் கவலை யில் எமது அமைப்பும் கவனம் செலுத்து கின்றது. எனவே மக்கள் பாதிப்பை அரசு மனங் கொண்டு தீர்மானம் எடுப்பது சிறந்ததாக இருக்கும். இவையெல்லாவற் றுடனும் இம்மாத இறுதிக்குள் சம்பூர் மக்கள் குடியேற்றப்படுவார்கள் என்ற அரசாங் கத்தின் வாக்குறுதிகள் எம்மை மன நிம்மதி அடைய வைக்கிறது என மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மூதூர் மல்லிகைத்தீவு பெருவெளி இளைஞர் கழகத்தின் புதுவருட விளையாட்டுப் போட்டி

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு திருகோணமலை மூதூர் மல்லிகைத்தீவு பெருவெளி இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் விளையாட்டுப்போட்டிகள் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் இடம்பெற்ற போட்டிகளில் கிரிக்கெட், கால் பந்தாட்டம், சைக்கிளோட்டம், மரதன், மற்றும் உள்ளூர் விளை யாட்டுப் போட்டிகள் எனப் பல இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோண மலை மாவட்ட அமைப்பாளர் இராஜக்கோன் ஹரிகரன் கலந்து கொண்டு வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

குறித்த பகுதியிலுள்ளவர்களினால் வாழ்வாதார உதவிகள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் குறித்த கழகத்தின் மைதானப் புனரமைப்பு தொடர் பான கோரிக்கைகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளரிடம் முன்வைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அத்துமீறிய விவசாய நடவடிக்கையை கண்டித்து கங்குவேலியில் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை கங்குவேலி படுகாட்டுப் பகுதியிலுள்ள 80 ஏக்கர் காணியில் அத்துமீறிய விவசாய நடவடிக்கை யில் சிங்கள விவசாயிகள் ஈடுபட் டமையைக் கண்டித்தும் குறித்த பிரச்சினை தொடர்பாக பொலிஸ் மற்றும் பிரதேசசெயலக அதிகாரிகளின் பொறுப்பற்ற நடவடிக்கையை கண்டித்தும் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் பாதிக்கப்பட்ட கங்கு வேலி படுகாட்டுப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளினால் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காணி உரிமையாளர்கள் வயல்நிலங்களை பதப்படுத்தும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது அப்பகுதியைச் சேர்ந்த பௌத்த மத குரு தலைமையில் சிங்கள விவசாயிகள் அவ்விடத்திற்குச் சென்று வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன் பின்னர் தடிகள் பொல்லுகளுடன் தமிழ் விவசாயிகள் மீது தாக்கவும் முற்பட்டுள்ளனர்.

இதனையடுத்து தமிழ் விவசாயிகள் நேற்று காலை 9 மணியளவில் சிங்களவிவசாயிகள் தாக்க முற்பட்டமை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைத் பதிவு செய்யச் சென்றனர். இதன் போது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறித்த பிரச்சினை தொடர்பில் தம்மால் தீர்வு காண முடியாது எனவும் பிரதேச செயலக அதிகாரிகளிடம் சென்று தெரிவிக்குமாறு கூறியுள்ளார்.

பிரதேச செயலரிடம் குறித்த பிரச்சினை தொடர்பில் பலமுறை தெரியப்படுத்தியதன் தொடர்ச்சியாக 30 தமிழ் விவசாயிகள் பிரதேச செயலகத்திற்கு சென்று தமது பிரச்சினை தொடர்பில் தெரியப் படுத்தினர். இதன்போது பிரதேச செயலர் குறித்த பிரச்சினைக்கு தம்மால் தீர்வு வழங்க முடியாது எனத் தெரிவித்துள்ளார். அத்துடன் பௌத்த மதகுருவை பிரதேச செயலகத்திற்கு அழைத்து சமரச முயற்சியில் ஈடுபடவும் முனைந்துள்ளார்.

இதனையடுத்து தமிழ் விவசாயிகள் பிரதேச சபை கதவினை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தம்மிடம் காணிகள் தொடர்பில் உரிய ஆவணங்கள் உள்ள நிலையில் பொலிஸ் அதிகாரிகளும் பிரதேச செயலகமும் சிங்கள விவசாயிகளுக்கு ஆதரவாக செயற்படுவதாகவும் இதன்பின்னணியில் பௌத்த மத குரு வழிகாட்டல் உள்ளதாகவும் அதில் கலந்துகொண்டவர்களினால் கோசங்கள் எழுப்பட்டன.

மேலும் குறித்த காணிப்பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை குறித்த பகுதியிலிருந்து வெளியேறப் போவதில்லை எனக் கூறி ஆர்ப்பாட்டத்தினை தொடர்ந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் என 60 க்கும் மேற்பட்டோர் ஒன்றுகூடி கோசங்களை எழுப்பிக்கொண்டிருந்தனர்.


இதனையடுத்து மூதூர் பிரதேச செயலர் ஆர்ப்பாட்டக்காரர் முன் வந்து குறித்த காணிப்பிரச்சினை தொடர்பில் 7 நாட்களுக்கள் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர்வு பெற்றுத் தருவதாகவும் குறித்த போராட்டத்தை கைவிடுமாறும் கோரியுள்ளார். அத்தடன் குறித்த காணியில் சிங்கள விவசாயிகள் அத்துமிறி விவசாயநடவடிக்கையில் ஈடுபட்டால் அவர்களை கைது செய்யுமாறும் பொலிஸாருக்கு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

பல வருடங்களாக இழுபடும் இந்தப்பிரச்சினைகளை அதிகாரிகள் தட்டிக்கழித்து வருவதாகவும் இதற்கு 7 நாட்களில் சரியான தீர்வு கிடைக்காமல் போனால் அதன் பின்னர் தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தமிழ் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கங்குவேலிப் பிரதேசத்திலுள்ள படுகாடு கிராமத்தில் தமிழர்களுக்கு உரித்துடைய 300 ஏக்கர் காணியில் 80 ஏக்கர் காணியினை 1997 ஆண்டு முதல் அத்துமீறி விவசாயநடவடிக்கையில் சிங்கள விவசாயிகள் ஈடுபட்டு வருவதுடன் குறித்த பிரச்சினை தொடர்பில் பல அதிகாரிகளுக்கும் பாதிக்கப்பட்ட விவசாயிகளினால் உரிய ஆவணங்களுடன் தெரியப்படுத்திய நிலையிலும் இது வரை தீர்வு எட்டப்படாமல் சிங்கள விவசாயிகள் அத்துமீறிய விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழில் சுற்று நிருபம் அனுப்ப முடியாத கிழக்கு மாகாணசபை

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பதில் செயலாளர் தனிச் சிங்களத்தில் சுற்று நிரூபம் ஒன்றை அனுப்பியுள்ளார். 01.2015 என இலக்கமிடப்படும். 10.04.2015 எனத் திகதியிடப் படும் இச் சுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் கீழுள்ள சகல திணைக்களங்கள், பிரதித் தலைவர்கள், வலயக் கல்விப்பணிப்பாளர்கள், பிரிவுத் தலைவர்கள் என்போருக்கு "பொது நிர்வாகம் தொடர்பான ஆலோசனையும் உத்தரவும்" எனக் குறிப் பிடப்பட்டே இது அனுப பப்பட்டுள்ளது.




சுற்று நிருபங்கள் சட்டங்களுக்குச் சமமானவை. கிழக்கு மாகாணத்தில் 80 வீதமானவர்கள் தமிழ் பேசும் மக்கள், கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தமிழர். அதுவும் முன்னாள் கல்விப் பணிப்பாளர். ஆயினும் சுற்று நிரூபம் தனிச் சிங்களத்தில் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடு மூன்று கேள்விகளை எழுப்புகின்றது. ஒன்று சிறிலங்கா அரசின் தமிழ் மொழி அமுலாக்கத்தின் நிலை இதுதானா? அதுவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்காளியாக இருக்கும் அரசாங்கத்தின் நிலை இது தானா? இரண்டாவது ஒரு சுற்று நிருபத்தை தமிழில் அனுப்பும் அதிகாரம் கூட கிழக்கு மாகாண சபைக்கு இல்லையா? மூன்றாவது கேள்வி அதிகாரமில்லாத மாகாண சபை நிர்வாகத்தை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவதால் என்ன பயன்?

அம்பாறை மாவட்டத்தில் பெரும் பான்மையோர் தமிழ் பேசும் மக்களே! ஆனால் அம்பாறை மாவட்டத்தின் தலைநகரமாக அம்பாறை நகரமே உள்ளது. அங்கு நிர்வாக அலுவல்கள் அனைத்தும் தனிச்சிங்களத்திலேயே இடம்பெறுகின்றன. மாவட்டத்தின் பெயரும் "திகாமடுல்ல" எனச் சிங்களப் பெயராக மாற்றப்பட்டுள்ளது.

எல்லாவற்றிற்கும் தமிழ்த் தரப்போடு மல்லுக்கட்டும் முஸ்லீம் தலைவர்கள் இது பற்றி மூச்சே விடாதது கவலைக்குரியது.

முத்தர் அம்மான்



# ஒருத்தருக்கும் சொல்லாதைங்கோ

சுன்னாகம் கழிவு ஓயில் விசயத்தை மட்டும் கட்டி அழுகின்றதால அமைச்சர்கள் மட்டத்தில மற்றையதொன்றும் நடக்குதில்லையெண்டு உள்வீட்டுக்குள்ள கிசுகிசுக்கினம்.பேப்பரில யார் என்ன எழுதுகினமெண்டு வேவு பார்க்கவே ஒரு பிரிவை வைச்சிருக்கின்றதாகவும் கேள்வி. அந்தப் பிரிவு போட்டுக்கொடுக்க பிறகு மேல்மட்ட டீலீங்கோட அப்பிராணி பேப்பர்காரர் பந்தாடப்படுகின்றதாகவும் கேள்வி. எல்லாம் அந்த ஐங்கரத்தானுக்குத்தான் வெளிச்சம்.

இதுவும் கழிவு ஓயில் தண்ணீர் பற்றின கதைதான்.தியேட்டர் அமைச்சர் தனக்கு பழக்கமான பேப்பர்காரரிடம் குறித்த மின்னுற்பத்தி நிலையத்தின் பங்காளரெண்டு கூட்டமைப்பு தலையொன்றை நோக்கி கைநீட்டுறார்.அவர் சொல்லுறது எவ்வளவு உண்மையென்றதிற்கப்பால் அவர் காட்டிவாற மௌனம் சந்தேகத்தை தரு கின்றது.அதிலும் அந்த பவர் நிறுவனத்தைக் காப்பாற்ற அனைத்து மட்டங்களிலும் முயற்சிக்கப்படுகின்றதும் அதை வலுப்படுத்துறதாக இருக்குது. பாவம் சனம் மாறி மாறி புள்ளடி குத்தி அனுப்பினதைத் தவிர என்ன பாவம் செய்தது பாருங்கோ. அண்மையில சுவிஸில நடந்த சந்திப்பொன்றில கூத்தமைப்பை பதிவு செய்வது பற்றி வலியுறுத்தியதாக தெரியவருகின்றது. ஆனால் ஊரில போய் முடிவு சொல்லிறதாக தப்பித்து வந்து தளபதிக்கு தலையிடியென்று யாழ்ப்பாணக்கூட்டத்தை பிற்போட்டது தான் மிச்சம். அணில் ஏற விட்ட ஏதோ கணக்கில கொட்டாவி விட்டதுதான் மிச்சமெண்டு பங்காளிகள் புறுபுறுக்கினம்.

மாமனிதர் தராகி சிவராமின்ர 10 வது ஆண்டு நினைவேந்தலை அவர் பிறந்த மண்ணான மட்டக்களப்பில நடத்த ஏற்பாடாகியிருக்காம். பாராட்டப்படவேண்டிய தொரு முயற்சி.போதாக்குறைக்கு தெற்கு பத்திரிகை அமைப்புக்களும் முழு ஆதரவை வெளிப்படுத்தியிருக்கினமாம். முற்று முழுதாக வடக்கு-கிழக்கு ஊடக அமைப்புக்கள் ஒன்றிணைந்து முதலில களம் அமைக்கினம். மனதார அனைத்து தரப்புக்களும் வாழ்த்துக்களை அள்ளி வைச்சிருக்கினம்.

முன்னாள் முதலமைச்சர் வரதராசப்பெருமாள் பழையபடி ஊர்ப்பக்கம் திரும்பியி ருக்கின்றாராம். இந்நாள் முதலமைச்சர் முதல் பலரையும் சந்திக்கின்றதாக கேள்வி. ஏற் பாடுகளை செய்து வழங்கினது தாடியற்ற பினாமிகள் எண்டும் கதை அடிபடுகின்றது. போதாக்குறைக்கு பக்கத்துநாட்டு தூதுவராலயமும் பின்னால இருந்து செயற்படுவதாக தகவல். ஒரிசாவுக்கு தப்பியோடினவருக்கு மீண்டும் கனவு வந்திட்டுதோ என்னவோ.

வலி.வடக்கில விடுறதை முதலில வாங்குவமெண்டு இப்பவும் முன்னாள் தியேட்டர் அமைச்சர் இணக்க(அடிமை) அரசியல் கதைக்கின்றார். மற்றப்பக்கம் கூத்தமைப்புக் காரரோ அந்தக் காணிகள் தங்கட முயற்சியால விடுபட்டதுபோலவும், அந்த மக்கள மீள்குடியமர்த்த அயராமல் உழைச்சவை போலவும் மாறி மாறி அறிக்கைவிட்டுக் கொண்டிருக்கினம். ஆனால் அந்தக் காணி விடுவிப்பு விவகாரம் டேவிட்கமரூன் யாழ்ப்பாணம் வந்து் நேரடியாக சபாபதிப்பிள்ளை முகாமுக்குப் போய் பார்த்த பிறகு அரசுக்கு கொடுத்த அழுத்தத்தின்ர விளைவாகவும், அண்மையில லண்டனுக்கு போன மைத்திரிக்கு குடுத்த குழுசையாலயும்தான் நடந்தது எண்ட உண்மை முன் னணி காரருக்கும் மட்டும்தான் தெரியும். அவர்வரும்போது மாவையின்ர தலை மையில மாவிட்டபுரத்தில ஒழிச்சு நிண்டவை எல்லாம் காணிவிடுவிச்சதுக்கு தாங் கள்தான் காரணம் எண்டு தெருவில் தேங்காயை எடுத்து வழியில் பிள்ளையாருக்கு உடைச்சு வாக்குவரம் பெற வாய் ஓயாமல் அறிக்கை விடுகினம். எங்கட மாவையர் சந்திரிகாவிற்கு இப்பவும் கடிதமெழுதுகிறன் எண்டு பேசிக்கொண்டிருக்கிறார். ஆனால் சத்தமில்லாமல் ஆமிக்காம்ப்களிற்கு இடையில சனத்தை இருத்தி பாரிய பாதுகாப்பு வலய மொன்றை உருவாக்குகினமென்றதுதான் இப்போதைக்கு உண்மை பாருங்கோ.

## புதிய கட்சி ஆரம்பிக்கும்......

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பின்னர் ஜே.வி.பியின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருந்தார். தற்போது பத்தரமுல்லயில் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் புதிய கட்சி அறிவிப்பை விடுத்திருக்கின்றார்.

ஜே.வி. பியின் இந்த உடைவும் இலங் கையை மையப்படுத்திய புவிசார் அரசிய லின் விளைவு என்றே கூறப்படுகின்றது. சீனாவின் செல்வாக்குக் காரணமாகத்தான் விலகினார் என்றும் பேசப்படுகின்றது. தனது செல்வாக்கு இழக்கப்படுவதைப் பார்த்து சீனா மௌனமாக இருக்கப் போவதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான்.

சோமவன்சவின் விலகுகை இலங்கை அரசியலில் பெரிதாக தாக்கத்தை கொடுக் கும் எனக் கூற முடியாது. ஆனால் ஜே.வி.பியின் வளர்ச்சியில் நிச்சயம் தாக்கத்தைச் செலுத்தும். அடுத்தடுத்து ஏற்பட்ட உடைவுகளினால் ஜே.வி. பி பலவீனப்பட்டுள்ளது. முதலில் விமல் வீரவன்ச குழு விலகியது. பின்னர் குமார் ரட்ணம் குழு விலகியது. முன்னிலை சோசலிசக் கட்சியை உருவாக்கியது. தற்போது சோமவன்ச விலகுகின்றார்.

அனுரகுமாரதிஸாநாயக்க தலைமைப் பொறுப்பை ஏற்றதைத் தொடர்ந்து ஜே.வி.பி சிறிய முன்னேற்றத்தைக் காட்டியது. அதன் வாக்கு வங்கியும் சற்று அதிகரித்திருந்தது. தற்போது மீண்டும் வீழ்ந்திருக்கின்றது. அதுவும் பாராளுமன்றத் தேர்தல் நெருங்கு கின்ற சமயத்தில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சி ஜே.வி.பி க்கு சகிக்க முடியாததாகத்தான் இருக்கும்.

# அமுத வாக்கு



கருத்துச் சுதந்திரம் தொடர்பாக தாராளமயமான பதிவொன்றை உயர்நீதிமன்றம் கொண்டிருக்க வில்லை. பெருமளவு சந்தர்ப்பங்களில் சர்வதேச நியமங்களைப் பொறுத்தவரையில் அதன் தீர்ப்புக்கள் பின்னோக்கியதாகவும் இணக்கமற்றதாகவும் விளங்கின.

**கலாநிதி அசங்க வெலிகல**




இலங்கையின் அரசியல் கலாசாரத்திற்கு அமைய நாம் அனைத்துக் குற்றவாளிகளையும் புலனாய்வு செய்தால் அரசியலில் ஈடுபட்டுள்ள 95 வீதமானவரை சிறைகளில் அடைக்க வேண்டிவரும்.

**காமினி வியங்கொட**
**சிரேஷ்ட ஊடகவியலாளர்.**



சுயாதீனமான விசாரணைகளும், குற்றவாளிகளை சட்டத்திற்கு முன் நிறுத்துவதற்குமான அரசியல் திடசங் கற்பத்தின் குறைபாடும் தண்டனையிலிருந்து விலக்களிக்கும் இலங்கையின் கலாச்சாரத்திற்கு பாரிய பங்களிப்புச் செய்துள்ளது.

**சட்டத்தரணி**
**பவானி பொன்சேகா**



அரசிற்கு நல்லாட்சி மற்றும் ஜனநாயக ஆடைகளை அணிவிப்பதன் மூலம் மாத்திரம் பிரச்சினைகள் தீரமாட்டாது. அனைத்து தேசிய இனங்களையும் அரசுடன் ஒன்றிணைக்க வேண்டும்.

**பேராசிரியர் ஜயந்த செனிவரத்தின**

மகிந்தவை திரும்ப அரசியலுக்குக் கொண்டு வருவோம் என்று அறைகூவல் விடுக்கும் பேரணிகள் நடாத்தப்படுகின்றன. "எமக்கு வேண்டியவர் ஒரு அரசனே ஆவார். ஒரு கைப் பொம்மையன்று" என்ற சுலோக அட்டைகளை இந்தப் பேரணிகளில் தூக்கிப்பிடிக்கிறார்கள். இவர்களிடம் காணப்படும் ஆர்வமும் ஈடுபாடும் எதிரணிகளிடம் இல்லை.

**திஸ்ஸணி குணசேகர**



இரு துருவ அல்லது பல்துருவ மயமானதாகத் தோன்று கின்ற ஒரு அரசியல் சூழமைவில் தனித்துருவ ஆட்சி முறை ஒன்றையே மஹிந்த ராஜபக்ஷ விரும்பினார். எதி ரணி விடயத்தில் வெகுமதியையும் தண்டனையையும் வழங்குகின்ற ஒரு வகை அணுகுமுறையைக் கடைப்பிடித் தார். இடைக்கிடை எதிர்க்கட்சித் தலைவருடன் ஒன்றாக அமர்ந்திருந்து காப்பி அருந்தவும் தவறுவதில்லை.

**பேராசிரியர் சுமணசிறிலியனகே**



அர்விந் கெஜ்ரிவாலின் அரசியல் முற்றிலும் நேர் கோட்டிலிருந்தது. அவர் பதவியை உதறிச் சென்றது டெல்லி மக்கள் மத்தியில் எந்த வெறுப்பையும் ஏற்படுத்தவில்லை. அவர்கள் அவரை ஒரு கலகக்காரனாகவே பார்த்தார்கள். முதலமைச்சராக இருந்தாலும் தங்களுக்காக தெருவில் இறங்கிப் போராடுகிற ஒரு மனிதராக அவரைக் கண்டார்கள்.

**மனுஷ்ய புத்திரன்**
**"உயிர்மை ஆசிரியர்"**



விருதுகளுக்காகவும், புகழுக்காகவும் ஆளும் பேரின வாத அரசாங்கங்களிடம் மண்டியிட்டு அதன் அநீதிச் செயற் பாடுகளுக்கு மௌனமாயும், ஒப்புதல் அளித்தும் ஆதரவளிப்பவர்கள் எழுதுதலை ஒரு புகழுக்கான செயற்பாடாகவே கருதுவர் என்பதை நான் புரிந்து கொள்கிறேன்.

**தீபச்செல்வன்**

இது நம்தேசம்

தொடர்புகளுக்கான முகவரி : இல 43, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com

இணையம் : ithunamthesam.com தொ.பே.இ: 021 2223739

## வரலாற்றின் தீர்க்கமான கட்டம்

வரலாற்றின் தீர்க்கமான கட்டத்தில் தமிழ்த் தேசிய அரசியல் வந்து நிற்கின்றது. அதனை முன்னோக்கி நகர்த்துவதா? பின்னோக்கி நகர்த்தி அழிவதா? எனத் தீர்க்கமாக முடிவெடுக்க வேண்டிய கட்டாயத்தில் தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

2009 ஆம் ஆண்டு ஆயுதப் போர் மௌனிக்கப்பட்டதைத் தொடர்ந்து பிராந்திய, சர்வதேச சக்திகளினாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலும் பின் நோக்கி இழுத்துச் செல்லப்பட்டது. புவிசார் அரசியல் சூழல் எமக்குச் சாதகமாக இருந்தபோதும் தமிழ்த் தேசிய கோரிக்கைகள் கைவிடப்பட்டு, தமிழ்த் தேசிய உணர்வுகள் சிதைக்கப்படல் வேண்டும் என்ற பிராந்திய சர்வதேச சக்திகளின் விருப்பத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் துணை போனார்கள். இதற்குச் சம்பந்தன் தலைமைதான் காரணம் எனக்கூறி ஏனையவர்கள் தப்பிவிட முடியாது கூட்டமைப்பிலுள்ள அனைவரும் அதற்குப் பொறுப்பு.

ஆயுதப் போராட்டம் முடிந்த கையுடன் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்கின்ற அடிப்படைகளைக் கூட்டமைப்பினர் கைவிட்டனர். தொடர்ந்து பின்நோக்கி இழுத்துச் சென்றனர். தமிழ் மக்களை அழித்த ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடியேற்றியமை, 13 ஆவது திருத்தத்தைத் தீர்வாக ஏற்றுக் கொண்டமை, வடக்குக்- கிழக்கு பிரிக்கப்பட்ட மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட்டமை, ஜனாதிபதி தேர்தலில் பேரம் பேசுவதற்குச் சந்தர்ப்பம் இருந்தும் எந்தவித நிபந்தனையும் இல்லாமல் மைத்திரியை ஆதரித்தமை, சுதந்திர தினத்தில் கலந்த கொண்டமை. என்பவற்றினூடாக வளர்ந்து ஸ்ரீலங்கா அரசின் தேசிய நிறைவேற்றுச் சபையில் அங்கத்துவராகச் சேர்ந்ததுடன் இது உச்சநிலைக்குச் சென்றது.

இன்று தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு எந்தவித உத்தரவாதமும் இல்லாத நிலையில்கூட இணக்க அரசியல் என்ற பெயரில் சரணாகதி அரசியலை மேற்கொள்கின்றது. சரணாகதி அரசியலுக்குள் மக்களையும் சேர்க்க முயற்சிக்கின்றது. அதற்காக ஒடுக்கும் ஸ்ரீலங்கா அரசினைப் புகழ்பாடி வருகின்றது. கூட்டமைப்பின் எஜமான்களான பிராந்திய வல்லரசும் சர்வதேச வல்லரசுகளும் ஆட்சிமாற்றத்தைப் பாதுகாக்குமாறு வற்புறுத்துகின்றன.

தமிழ்த் தேசிய அரசியலை முன்னோக்கி நகர்த்தும் தகைமையை கூட்டமைப்பு இழந்துவிட்டது. அதனிடம் இது தொடர்பான விருப்பமும் இல்லை. இயலுமையும் இல்லை. சொந்த நிகழ்சி நிரலோ சொந்தப் பலமோ இல்லாமல் பிராந்திய வல்லரசின் கட்டளைக்கிணங்க செயற்படும் ஒரு அமைப்பினால் நேர்மையான வழியில் தமிழ் அரசியலை முன்னெடுத்துச் செல்ல முடியாது.


மறுபக்கத்தில் தமிழ்த் தேசிய அரசியலின் மைய விடயம் தமிழ்த் தேசத்தின் நர்ன்கு தூண்களான நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம் என்பவற்றைப் பாதுகாப்பதுதான் தமிழ்த் தேசத்தை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கு இந்தத் தூண்களைப் பாதுகாத்தேயாகவேண்டும். சரணாகதி அரசியலுக்குச் செல்வதன் மூலம் இந்தப் பாதுகாப்பை ஒருபோதும் மேற்கொள்ள முடியாது.

ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் தமிழ்த் தேசிய அரசியல் தோற்கடிக்கப்படவில்லை. அது தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். இலங்கைத் தீவினை மையப்படுத்திய புவிசார் அரசியலில் தமிழ் மக்களுக்கு எப்போதும் ஒரு இடம் இருப்பதால் தமிழ்த் தேசிய அரசியலை முன்நகர்வதற்குரிய பிராந்திய, சர்வதேச சூழல் தொடர்ந்தும் இருந்துகொண்டே இருக்கும்.

மாற்று அரசியல் இயக்கம் ஒன்றினைக் கட்டியெழுப்பி முன்நோக்கி நகர்வதன் மூலமே தமிழ்மக்களினால் தமது இலக்கினை அடைய முடியும்.

# சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக வரவிரும்புவதில் நியாயம் இருக்கின்றது

**-கஜேந்திரகுமார்**



சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக வரவிரும்புவதில் நியாயம் இருக்கின்றது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார். அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

நாங்கள் முன்னர் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இப்ப இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இப்போ இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக வர விரும்புவது நியாயம். ஏனென்றால் சிறிலங்கா அரசு இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தம் தீர்வாக ஏற்றுக் கொள்ளலாம். உள்ளக விசாரணை சரி, சிங்கக் கொடியைப் பிடிப்பது, சுதந்திர தினத்தில் கலந்துகொள்வது "எங்கட அரசாங்கம்", அதை முற்றுமுழுதாக நம்புகின்றோம். எல்லோரும் நம்ப வேண்டும், நம்பிக்கையோடு வாழ வேண்டும் என்று சொல்லுகின்ற கட்சியினுடைய தலைமை எதிர்க்கட்சித் தலைவராக வருவது அவருடைய உரிமை. பதவி தான் இப்ப அரசு.

> **சிறிலங்கா அரசு இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தம் தீர்வாக ஏற்றுக் கொள்ளலாம். உள்ளக விசாரணை சரி, சிங்கக் கொடியைப் பிடிப்பது, சுதந்திர தினத்தில் கலந்துகொள்வது "எங்கட அரசாங்கம்", அதை முற்றுமுழுதாக நம்புகின்றோம். எல்லோரும் நம்ப வேண்டும், நம்பிக்கையோடு வாழவேண்டும் என்று சொல்லுகின்ற கட்சியினுடைய தலைமை எதிர்க்கட்சித் தலைவராக வருவது அவருடைய உரிமை. பதவி தான் இப்ப அரசு.**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையே நடக்கின்ற போட்டிகள் மாதிரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அந்தப் பதவிக்கு அடிபடுகிறது. கிழக்கு மாகாண சபையில் எங்களுக்கு அமைச்சுப் பதவிகள் வேணும் என்று அடிபட்டிது. வடமாகாண சபையில் முழுக்க முழுக்க ஒவ்வொருத்தரும் தங்களுக்கு என்ன தேவை என்ற அடிப்படையில செயற்படுகின்றமை எல்லாம் கட்சி அரசியல்தான். அவர்களைப் பொறுத்த வரையிலே புலிகள்தான் பிரச்சினை மாறாக இது ஒரு இனப்பிரச்சினை இல்லை. தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்ததோடு எல்லாம் சரி. இனி ஒத்துத்தான் போக வேண்டும். அதில் என்ன? இப்போ டக்ளஸ் தேவானந்தாவுக்கும் சம்பந்தன் ஐயாவுக்கும் இடையே போட்டி. தமிழ்த் தரப்பில் யாருக்குப் பதவி வரப்போகிறது.

இப்போ இன்னுமொன்று இருக்கிறது. வரப்போகின்ற பாராளுமன்றத்தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடும் என்று நாங்கள் பகிரங்கமாக அறிவிக்கின்றோம். வடகிழக்கு முழுவதிலும் நாங்கள் போட்டியிடப் போகின்றோம். ஆகவே புதுக்கதையொன்று தொடங்கியிருக்கிறார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிட்டால் தமிழ்த் தேசிய வாக்குகள் இரண்டாகப் பிரியப் போகிறது். இரண்டாகப் பிரியப் போவதனூடாக ஐ.தே.க. வரப்பார்க்கும். ஏற்கனவே டக்ளஸ்சுக்கு இடமிருக்கிறதாம். இப்போ யுஎன்பியும் நுழையப் போகிறதாம். ஆகவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனியாகப் போட்டியிடுவதனூடாக யுஎன்பியை இந்த மண்ணிலே நிலை நாட்டப் போகிறது என்ற குற்றச்சாட்டை முன்வைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியை மே தினத்திற்குக் கூட்டிவந்து சிங்கக் கொடியைப்பிடித்தது யார்? யுஎன்பி அரசாங்கத்தைக் கொண்டு வரவேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்று நிபந்தனை இல்லாத ஆதரவு கொடுத்து இது எங்கட அரசாங்கம் என்று சொன்னது யார்? ரணிலை அழைத்துவந்து தமிழ் தாய் ஒருவரை அவரின் காலில் விழ வைத்தது யார்? எல்லாத்தையும் செய்தவர்கள் இந்த கூட்டமைப்பினர்தான்.


இவர்கள் கூறுகின்ற "எங்கட அரசாங்கம்" வந்தும் ஒரு மாற்றமும் இல்லை. அரசாங்கம் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு அநியாயம் செய்கின்றது. ராஜபக்ஷ காலம்தான் தொடர்ந்தும் நீடிக்கின்றது.

நாங்கள்தான் ஐக்கிய தேசியக் கட்சியை வடக்குக்குக் கொண்டு வர இருக்கின்றோம் எனக் கூறுகின்றனர். நாங்கள் கொண்டு வரவில்லை. இவர்கள்தான் ஏற்கனவே அழைத்து வந்திருக்கின்றனர்.

இது நாங்கள் விரும்பிக் கொண்டு வந்த அரசாங்கம். தமிழ் மக்கள் விரும்பி தாயகத்துக்கு வாக்களித்துக் கொண்டு வந்த அரசாங்கம். ஆகவே நீங்கள் தயவு செய்து போராட்டங்களைக் கைவிடுங்கள் என்று கூறுகின்ற அளவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றது.

# யாரை ஏமாற்றுகிறார் சம்பந்தன்

■ முத்துக்குமார்



**ஆட்சிமாற்றத்திற்குக் காரணமாக இருந்த பிராந்திய வல்லரசும்,சர்வதேச வல்லரசுகளும் தாம் உருவாக்கிய ஆட்சியை பாதுகாப்பதிலேயே கவனமாக இருக்கின்றன. ஒப்பீட்டளவில் பலவீனமான ஆட்சியாக இருப்பதனால் தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகள் எதுவும் ஆட்சியைக் குழப்பி விடக்கூடாது என்பதிலும் அக்கறையாக உள்ளன.**

சர்வதேசமும் ஆட்சியில் உள்ள அரசாங்கமும் சாதகமாக எமக்கு இருக்கின்ற சூழ்நிலையில் அச்சந்தர்ப்பங்களை நாம் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நல்லதொரு தீர்வு காணப்படவேண்டும் என அக்கறை கொண்டிருக்கும் இந்த அரசாங்கம் அளித்திருக்கும் வாய்ப்பை நாம் தவற விடக்கூடாது. தமிழ் மக்கள் மத்தியில் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டிருக்கின்றது என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறியிருக்கின்றார். திருகோணமலையில் ஜனாதிபதி செயலணி தொடர்பாக நடைபெற்ற கூட்டமொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார்.

சம்பந்தனின் இந்த கருத்துகள் அரசியல் ஆய்வாளர்களிடையே பல கேள்விகளை எழுப்பியிருக்கின்றது. அந்தக் கேள்விகளுக்கான விடைகளைக் காண வேண்டியது இன்றைய காலகட்டத்தில் மிக அவசியமாகும்.

தற்போதுள்ள சர்வதேசம் எமக்குச் சார்பாக இருக்கின்றதா? தற்போதைய ஆட்சியாளர் எமக்கு சாதகமானவர்களா? அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு காணவேண்டுமென உண்மையில் அக்கறையுடன் இருக்கின்றதா? ஜனாதிபதி செயலணி தமிழ் மக்களுக்கு பயன்படக் கூடியதா? என்பவையே அக்கேள்விகள்.

முதலாவது கேள்வியைப் பார்ப்போம். தற்போதுள்ள சர்வதேசம் எமக்குச் சார்பாக இருக்கின்றதா? தமிழ் மக்களைப் பொறுத்தவரை சர்வதேசம் என்பது பிராந்திய வல்லரசான இந்தியாவும், அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமும் தான். இந்த வல்லரசுகள் சர்வதேச மட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும் தமது எதிரணியான சீனாவுடன் பனிப்போரில் இறங்கியிருக்கின்றன. தென்னாசிய மட்டத்தில் இலங்கைத் தீவினை மையமாக வைத்து ஒரு புவிசார் அரசியல் போட்டியில் இறங்கியுள்ளன. இந்தப்போட்டியில் தமிழ் மக்களை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதால் தமிழ் மக்களின் முக்கியத்துவமும் அதிகரித்துள்ளது.

2009 போரிற்குப்பின்னர் இந்தப்புவிசார் அரசியல் போட்டியே தமிழ் அரசியலை உயிர்ப்புடன் வைத்திருந்தது. சர்வதேச விசாரணையும் இதன் காரணமாகவே தோற்றம் பெற்றிருந்தது. சர்வதேச அளவில் பல்வேறு மட்டங்களிலும் எமது விவகாரம் பேசுபொருளாகியிருந்தது. ஆனாலும் பிராந்திய வல்லரசும் சர்வதேச வல்லரசும் ஆட்சி மாற்றம் ஒன்றிலேயே கவனமாக இருந்தன. அதில் நம்பிக்கையோடும் இருந்தன. தமது ஆட்சிமாற்ற இலக்கிற்கேற்ப தமிழர் விவகாரத்தை கூட்டிக்குறைக்கும் கைங்கரியங்களிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தன. தமிழ் அரசியலின் செயற்பாட்டஎவினை தாமே தீர்மானித்தார்களே தவிர தமிழ் மக்களிடம் அதை விட்டுவிடவில்லை.

இந்த நிலையில் அவர்களது நிகழ்ச்சி நிரலுக்குள் தமிழ் மக்களின் விவகாரங்களைச் சேர்க்கும் பொறுப்பு தமிழ் அரசியல் தலைமையிடமே இருந்தது. அவை அந்தப் பணியைச் செய்யவில்லை. மாறாக அவற்றிற்குப் பின்னால் இழுபட்டே சென்றன. பேரம் பேசுதலிற்கான உச்ச நிலை அச்சமயத்தில் இருந்தது தமிழ் மக்களின் வாக்குகள் தான். ஆட்சிமாற்றத்தை தீர்மானிக்க இருந்த நிலையில் வலுவான பேரம்பேசலை நடாத்தி இருக்கலாம். ஆனால் தமிழ் அரசியல் தலைமை அந்தச் சந்தர்ப்பத்தை அநியாயமாகத் தவறவிட்டது.

தற்போது பிராந்திய வல்லரசும் சர்வதேச வல்லரசுகளும் விரும்பியது போல ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் தமிழ் மக்களுக்கான நலன்கள் தொடர்பில் எந்த உத்தரவாதமும் வழங்கப்படவில்லை. தங்களுடைய நலன்களில் எந்தவித உத்தரவாதமும் இல்லாமலே தமிழ் மக்கள் ஆட்சி மாற்றத்தை கொண்டு வந்துள்ளனர்.

ஆட்சிமாற்றத்திற்குக் காரணமாக இருந்த பிராந்திய வல்லரசும், சர்வதேச வல்லரசுகளும் தாம் உருவாக்கிய ஆட்சியை பாதுகாப்பதிலேயே கவனமாக இருக்கின்றன. ஒப்பீட்டளவில் பலவீனமான ஆட்சியாக இருப்பதனால் தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகள் எதுவும் ஆட்சியைக்குழப்பி விடக்கூடாது என்பதிலும் அக்கறையாக உள்ளன. இதனால் தமிழ் மக்களை மௌனமாக இருக்கும் படி தொடர்ச்சியாக வற்புறுத்துகின்றன. போதனை செய்கின்றன.

இலங்கைக்கு வரும் மேற்குலக இராஜதந்திரிகளில் எவருமே இந்தப் போதனைகளைச் செய்யத் தவறவில்லை. மறுபக்கத்தில் இந்தியப்பிரதமர் அரசாங்கத்திற்கு கரைச்சல் கொடுக்க வேண்டாம் என புத்திமதி கூறி விட்டுச் சென்றிருக்கின்றார்.

இந்நிலையில் தமிழ்மக்களுக்காக பிராந்திய வல்லரசும், சர்வதேச வல்லரசுகளும் எதுவும் செய்யப்போவதில்லை. தமிழ் மக்களையும் எதையும் செய்யவிடப் போவதில்லை இதுவே தற்போதைய யதார்த்தம். நிலைமை இவ்வாறு இருக்கையில் சர்வதேச சமூகம் எமக்குச் சார்பாக இருக்கின்றது என எம்மால் எவ்வாறு கூறமுடியும்.

இரண்டாவது கேள்வி தற்போதைய ஆட்சியாளர்கள் நமக்குச் சாதகமானவர்களா? அதனுடன் சேர்த்து அவர்கள் நல்லதொரு தீர்வினைத் தருவார்களா? என்பதே அதுவாகும். இதற்கு எமக்கான அரசியல் தீர்வு எது? அந்த அரசியல் தீர்வினை ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்கின்றார்களா? ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொண்டாலும் அதனை நடைமுறைப் படுத்தக்கூடிய இயலுமை அவர்களுக்கு இருக்கின்றதா? என்கின்ற விடயங்களையும் நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இலங்கையின் இனப்பிரச்சினை என்பது ஒரு இனத்தின் அடையாளங்களை அழிக்க முற்பட்டவர்களுக்கும் அதனைப்பாதுகாக்க முற்படுபவர்களுக்கும் இடையிலான பிரச்சினைத் தமிழ் மக்களை ஒரு தேசமாக அங்கீகரிப்பதன் மூலமே இப்பிரச்சினையை தீர்க்க முடியும். இலங்கை என்ற அரச அதிகாரக் கட்டமைப்புக்குள் தீர்ப்பதென்றால் தமிழ்த் தேசமும் சிங்களத் தேசமும் இணைந்து இலங்கை என்கின்ற ஒரு நாட்டை உருவாக்குவதாக இருக்க வேண் டும். அதன் நடைமுறை வடிவம் ஒரு சமஸ்டி வடிவமாக இருக்கலாம். தேசத்தை அங்கீகரித்த சமஸ்டி முறைகள் கனடாவிலும், பெல்ஜியத்திலும், சுவிஸ்லாந்திலும் இருக்கின்றன.

இந்தத் தீர்வை புதிய ஆட்சியாளர்கள் அங்கீகரிக்கின்றார்களா? அவர்கள் தேர்தலின் போதும் சரி அதன் பின்னரும் சரி அரசியல் தீர்வு பற்றி மூச்சே விடவில்லை. அவ்வாறானவர்கள் தீர்வு தொடர் பாக அக்கறையாக உள்ளனர் என எவ்வாறு கூறமுடியும்.

இதைவிட இன்னோர் விடயத்தையும் இங்கு கவனிக்க வேண்டும். சிங்கள சமூக உருவாக்கம் என்பது வரலாறு, ஐதீகம் என்பவற்றினால் உருவாக்கப்பட்டது. இந்தச் சமூக உருவாக்கத்திலிருந்துதான் இலங்கையரசுருவாக்கம் இடம் பெற்றது. இதன்படி இலங்கை என்பது சிங்கள பௌத்தர்களுக்குரிய நாடு. ஏனையவர்கள் இலங்கையில் வாழ்ந்துவிட்டுப் போகலாம். ஆனால் உரிமைகள் எதுவும் கேட்க முடியாது. ஆட்சிக்கு வருபவர்கள் அனைவரும் இந்த அரசுருவாக்கச் சிந்தனையை நடைமுறைப்படுத்துவதற்காகவே வருகின்றனர். சந்திரிக்கா தொடக்கம் ரணில் ஊடாக மைத்திரி வரை எவரும் இதற்கு விதிவிலக்காக இல்லை.

இந்த நிலையில் அரசியல் தீர்வு தொடர்பாக ஏதாவது முயற்சிகள் இடம்பெறுவதாக இருந்தால் சர்வதேச அழுத்தங்கள் மூலமே அதனைச் சாத்தியமாக்க முடியும். ஆனால் இன்று அழுத்தங்கள் கொடுப்பதற்கு சர்வதேச சக்திகளும் தயாரில்லை என்பதையே அவற்றினது அண்மைக்கால நகர்வுகள் காட்டுகின்றன.

இதற்கப்பால் தென்னிலங்கை அரசியல் நிலைமையும் அரசியல் தீர்வுக்கேற்றதாக இல்லை. அங்கு தமிழர் நலன் பற்றிக் கதைத்தாலே மகிந்தர் எழுச்சியடைந்து விடுவார் என்ற நிலையே காணப்படுகின்றது. தமிழ்த் தேசிய அரசியலை ஆதரித்த சிங்கள முற்போக்கு பிரிவினர் கூட தாம் உருவாக்கிய ஆட்சிக்குப் பாதிப்பு வந்துவிடும் என்பதற்காக தமிழர் விவகாரம் தொடர்பாக மூச்சுவிடவே பின் நிற்கின்றனர். சிங்கள தரப்புடன் நெருக்கமாகவுள்ள தென்னிலங்கை முக்கியஸ்தர் ஒருவர் இதனை மிகவும் கவலையுடன் தெரிவித்தார். ஆட்சியைப் பாதுகாப்பதற்காக தமிழ் மக்களை அவர்கள் கைவிடத் தயாராக இருக்கின்றனர் எனக் கூறியிருந்தார்.

*(23 ஆம் பக்கம் பார்க்க)*

# இணக்க அரசியல் என்று சொல்லுகினம்

**வணக்கம், வணக்கம்,**
**நான் கல்வயல் கனகசிங்கம்.**
**எப்படி உங்கட பாடு?**
**ஏதோ என்ர பாடும் போகுது**

இப்பவெல்லாம் யாழ்ப்பாணத்தில காணுகின்ற இடமெல்லாம் சுன்னாகம் நிலத்தடி நீர் பற்றித்தான் பேச்சாகக் கிடக்குது. அதிலையும் தமிழரசுக் கட்சியின்ர தலைகள் சர்ச்சைக்குரிய மின் உற்பத்தி நிறுவனத்தை காப்பாற்ற ஆலாய் பறக்கிறது தான் சந்தேகத்தை ஏற்படுத்துது. மூத்த தலைகள் சில மூச்சுக்கூட விடாமல் பொம்மிக் கொண்டு இருக்கின்றது ஏனெண்டு, அவையளின்ர ஆட்களுக்குள்ளேயே குசுகுசுக்கினம். கம்பனியில அவருக்கு பங்கிருக்கு, இவரை கவனிச்சுப் போட்டாங்களென்று ஏறுக்கு மாறாக கதைகள் உலாவுது. உண்மைகள் என்னவென்று மேலே இருக்கிறவனுக்குத்தான் தெரியும்.

ஆனாலும் ஒன்று, நஞ்சூட்டப்பட்ட குடிநீரை, குடிக்க அவையள் ஒருத்தரின்ர குடும்பமும் இஞ்சையில்லை. அவையளும் கூட போத்திலில அடைச்சுவாற மினரல் தண்ணீர்தான் குடிக்கிறவை. சுன்னாகம் நிலத்தடி நீரில அபாயமில்லையெண்டு வாதிடுறவையையும், கிணற்றைக் கலக்கி இறைச்சால் சரியென்றவையையும் ஒரு மாதம் அந்தத் தண்ணீரைக் குடிக்கவைச்சால் போதும்.

சனம் கேட்கிறது ஒரு சொல்லில விடையளிக்கக் கூடிய விசயம் பாருங்கோ. தண்ணீரைக் குடிக்கலாமோ? கூடாதோ? வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பதிலைதான் எல்லோரும் எதிர்பார்க்கினம். ஆனால் அதுக்குப் பதிலளிக்காமல் புரியாத சொல்லுக்களால




வித்தை காட்டுகினம் பாருங்கோ. கடைசியில இப்ப மத்திய அமைச்சர் ரவூப்ஹறக்கீம், தண்ணீரைக் குடிக்கக் கூடாதென்று நாடாளுமன்றத்தில சொல்லிப்போட்டார்.

வடமாகாணசபைக்கு அதிகாரத்தைத் தாங்கோ, தாங்கோவெண்டு கத்திறம். கடைசியில தமிழரைத் தமிழரே நிர்வகிக்கிற மாகாணசபை என்று அடையாளப்படுத்தினம். இப்ப கடைசியில மத்திய அரசின் பிரதிநிதியான ஆளுனர், அமைச்சர்மார் சொல்லுறதுதான் சரியெண்டு சனத்தை நம்பவைச்சிட்டம்.

எல்லாவற்றிற்கும் உண்மையான காரணம் வினைத்திறனற்ற அமைச்சரவை தானெண்டு அவையின்ற கட்சிக்காரரே திட்டித் தீர்க்கினம். ஓய்வுக்காரர் ஓய்வு தேடுகினம். இன்னொரு பக்கம் வெள்ளை வேட்டி, பிரபல்யம் என்று இன்னொரு சாரார் திரியினம். இடையில பிழைப்பைப் பார்த்துக் கொள்வதாக சிலரைப்பற்றி குற்றம் சொல்லுகினம்.

இது ஒரு பக்கமிருக்க, முன்னாள் தியேட்டர் கார அமைச்சர் தன்ர அரசியல் சந்தையை இதுக்குள்ள விரிச்சிருக்கிறதாகவும் கேள்வி. ஆள் பேப்பர்காரரோட கதைக்கேக்க, அந்த சர்ச்சைக்குரிய மின் உற்பத்தி நிலையத்தின்ர பங்காளர் அவர்தானெண்டு மூத்த தலைவர், ஒருத்தரை குற்றஞ் சொல்லியிருக்கிறார். இதில யாருடைய பக்கம் உண்மை இருக்கு தெண்டது தெரியாது. ஆனாலும் அந்த மூத்த தலைவர், பிரச்சினைக்குரிய பகுதியிலிருந்து வீழ்ந்த வோட்டுக்களால் வென்றவர் என்ற கதை எல்லோருக்கும் தெரியும். ஆனால் அவரோ இதைப் பற்றி பேச்சுமூச்சில்லாமல் இருக்கிறதுதான் சந்தேகத்தைத் தருகுது.

இந்த சர்ச்சைகளுக்குள்ள பழையபடி காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை ஓட வைக்கிற முயற்சிகள் மும்முரமடைந்திருக்குது. அடிச்சு விரட்டப்பட்ட அந்த இடத்து சனம் இன்னும் சொந்த ஊர் திரும்பயில்லை. அதுக்குள்ள அதுகளின்ர காணிகளுக்குள்ள இருந்து மிஞ்சிக்கிடக்கிற கற்களையும் சுரண்டத் திட்டம் போடுறாங்கள்.

யாழ்ப்பாணம் சுண்ணக்கல் படுகைகள் மேலே இருக்கிற இடம். முந்தி, சீமெந்து தொழிற்சாலைக்குக் கல் அகழுறதாகச் சொல்லி, தோண்டியெடுத்த பாரிய குழிகளை, கீரிமலைக்குப் போகேக்கை கண்ணால பார்க்கலாம். மீண்டுமொரு சுனாமி அனர்த்தம் மாதிரி எதுவும் நடந்தால் கடல் அப்படியே உள்ளுக்குள்ள வந்திடும். அதனால்தான் இனிமேல் சுன்னாம்புக் கற்களைச் சுரண்டுற சீமெந்து தொழிற்சாலை வேண்டாமென்று சனம் குரல் எழுப்பினது.

இப்ப என்னனென்றால் இந்தியக் கம்பனிகளோடு கூட்டுச் சேர்ந்து, மீண்டும் தொழிற்சாலையை ஆரம்பிக்கிறது பற்றி பேச்சுக்கள் தொடங்கியிருக்குது. இந்தியாக்காரன் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை இலக்கு வைத்துத்தான் பக்கத்தில இருக்கிற, காங்கேசன்துறை துறைமுகத்தை அவசர அவசரமாகப் புனரமைச்சவன். அப்பு அடிக்கடி சொல்லுறவர் "வடக்கத்தியான் புத்தி எப்பவும் குறுக்காலதான் போகுமெண்டு" அது உண்மை தான் எண்டாகிப் போட்டுது. ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புத் தருவினமாம். இருக்க இடமில்ல அதுக்குள்ள உவங்கள் தாற வேலையை கட்டிப்பிடிச்சுக் கொண்டு என்ன செய்யிறதெண்டு, சனம் கேள்வி கேட்குது.

உண்மையில நிலவிடுவிப்பு என்ற பெயரில அரசு சர்வதேசத்தின்ர காதில பூவைக்கிற வேலையைத்தான் செய்யுது. விடுவிச்சதாக அவங்கள் சொன்னது ஆயிரம் ஏக்கர். ஆனால் அதுக்குள்ளே நூறு ஏக்கரில இரண்டு படைமுகாம். கிணறு ஆமியின்ர கட்டுப்பாட்டில. வீடுகளில்லாத வெறுங்காணி சனத்திட்ட. இப்படி அரைகுறையுமாக விடுவிச்சுப் போட்டு புத்தாண்டு வாழ்த்துச் சொல்லிறாங்கள்.

இதுகளை அம்பலப்படுத்த வேண்டிய தமிழ்த் தரப்புக்கள், வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கினம். கொழும்பில கூடிகுலாவுகினம். அவையளில கன பேருக்கு ஊரில வீடோ, காணியோ இல்லையென்றதும், அதை வித்துப்போட்டு, குடும்பம், குட்டிகளை வெளியில அனுப்பிப் போட்டு இஞ்சின அரசியல் செய்கினம். இன்னும் சிலர் ஒவ்வொரு தேர்தல் காலத்திலயும் கொழும்பில புதுசு புதுசா வீடுகளை வாங்கிக் கொண்டிருக்கினம். கேட்டால் இணக்க அரசியல் எண்டு சொல்லுகினம்.

எது எப்படியென்றாலும், ஆட்சிமாற்றத்தின் பின்னராக வடக்கினில் வசந்தம் வீசுகின்றதாக சொல்லப்படுகின்ற நிலையினில், யாழில் ஊடகவியலாளர்களிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட, இரு நடவடிக்கைகள் உண்மையை அம்பலப் படுத்திப் போட்டுது. பொலிஸைப்பற்றி எழுதிய செய்தி ஒன்றிற்காக ஊடகவியலாளர் ஒருவர் சிறை போயிருக்கிறார். அதேபோல நல்லூரில் வைத்து மூன்று ஊடகவியலாளர்கள் மிரட்டப்பட்ட சம்பவமும் நடந்திருக்குது.

உண்மையில இலங்கைப் பொலிஸாரையோ, அல்லது முப்படைகளையோ பொறுத்தவரையினில், ஆட்சி மாறினாலென்ன மாறாவிட்டாலென்ன அவர்களது மனோ நிலையினில் மாற்றமெதுவும் இல்லை என்பதே உண்மையாகும். அதன் வெளிப்பாடுகளே ஒரு ஊடகவியலாளரை சிறையினில் அடைக்கவோ, மிரட்டவோ முடியுமென்பதை வெளிக்காட்டி நிற்கின்றது. மகிந்தவென்ன மைத்திரியென எவர்வந்தாலும் தெற்கின் மனநிலை ஒன்றுதான் பாருங்கோ.

# நையாண்டியார் பதில்கள்



த. கோபிகா
சுன்னாகம

கேள்வி:- நிலத்தடி நீர் விவகாரம் யாரை நம்புவது?

பதில்:- அனைவரதும் கேள்வி நன்றாகவே உள்ளது. நிலத்தடி நீரைக் குடிக்கலாமா? இல்லையா? ஆம் அல்லது இல்லை என்பதற்கு அப்பால் அடுத்து என்ன செய்வதென்பதே. ஆனால்மாகாணசபை கையாலாகாதவொன்று என்பது மட்டும் அம்பலப் பட்டுள்ளதென்பது மட்டும் உண்மை.

ச.சிவகரன்
தாழ்வுப்பாடு, மன்னார்

கேள்வி:- மகிந்த மீண்டும் ஆட்சிக்கதிரை ஏறுவாரா?

பதில்:- மகிந்தர் ஏறுகின்றாரோ இல்லையோ, அவரை விட அதிதீவிரமான சிங்கள பௌத்த தேசியவாதிகள் ஆட்சிப்பீடம் ஏறுவார்கள் என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். தெற்கினில் யார் ஆட்சிக்கதிரை ஏறுவதென்பதைத் தீர்மானிப்பதாக சர்வதேச சக்திகளே உள்ளன. மகிந்த வோ அன்றி அவரை விட தீவிரமான பௌத்த தேசியவாதிகள் கதிரையேறவேண்டும் என்பது சீனாவின் விருப்பமாக உள்ளபோதும் அண்டை நாட்டினதும், மேற்குலகின் விருப்பமும் நேர்மறையாகவேயுள்ளது. அதனால் அவர் மீண்டெழுவதென்பது கேள்விக் குறியே.

சிவகடாட்சம்
தும்பளை, பருத்தித்துறை

கேள்வி:- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு- தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இணக்கப்பாடு சாத்தியமா?

பதில் :- தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற நிலைப்பாட்டை தமது கட்சி ஒருபோதும் கைவிடாதென்றும், தமிழ் மக்களின் நலன்தான் தமக்கு முக்கியம் என்றும் தெளிவாக பதிலளித்து விட்டார். மறுபக்கத்தில் சம்பந்தன் கொம்பனியோ அக்கொள்கைகளை ஒருபோதும் கையில் எடுக்கமாட்டோம் என்றும் தமக்கு தமிழ் மக்களின்ர நலன் முக்கியமில்ல இந்திய நலன்தான் முக்கியம் என்றும் பிடிவாதமா நிக்குது. அப்பிடி எண்டால் இணக்கப்பாடு ஒருபோதும் சாத்தியமில்லை பாருங்கோ.

த.புருசோத்தமன்
கண்டாவளை

கேள்வி:- கூட்டமைப்புப் பதிவு விவகாரம் முடிவு கிடைக்குமா?

பதில்:- வடமாகாண முதலமைச்சரது அரசியல் ரீதியான வளர்ச்சி சிங்கக்கொடிகாத்த வீரனை அச்சமூட்ட வைத்திருக்கின்றதாம். அதனால் தான் தூண்டில் போடப்படும் இரைபோல பங்காளிகளுக்கு இனிப்பு காட்டப்படுகின்றதாம். ஒட்டுமொத்தத்தினில் 'அல்வா' கொடுப்பதில் வல்லவர் யாரென்பது விரைவில் தெரியவரும்.

ப.துஷ்யந்தினி
சம்பூர், திருகோணமலை

கேள்வி:- அப்பட்டமாக நடக்கும் எமது நிலப்பறிப்பு பற்றி தமிழ்த் தரப்புக்கள் கூட கண்டு கொள்ள மறுக்கின்றனவே?

பதில்:- அவர்களது டெல்லி எஜமானர்களும் அக்கதைகளின் பின்னால் இருப்பதால் அடக்கியே வாசிப்பார்கள். கிள்ளித் தெளிப்பதை பற்றிக் கொள்ள ஆலோசனை சொல்வார்கள். ஆனால் வீதிக்கு இறங்கிப் போராட அழையுங்கள். இந்தியாவிலோ, கொழும்பிலோ பதுங்கிக் கொள்வார்கள்.




# அகவை 25ல் தமிழ் ஆலயம்

■ கவிமகன்

நேரம் மதியம் ஒரு மணி என்று காட்டி கொண்டு சிரித்தது எனது கைக் கடிகாரம். மனதில்எரிச்சலும் வெளியிலே கொட்டி கொண்டிருந்த வெண் பனியின் குளிர்மையும் மனதுக்கு மட்டுமல்ல உடலுக்கும் பலத்த விருப்பின்மையை உணர்த்திக் கொண்டிருந்தது. "சீ இந்த பஸ்காரன் என்ன இண்டைக்கு லேட்டா வாரான்" மனது சலிப்படைந்த போது நேரம் தவறியமைக்காக நேரப்பலகை மன்னிப்புக் கேட்டு கொண்டிருந்தது.

குறித்த பேருந்து வந்து சேர்ந்தது. ஆனந்தம் பொங்கி வழிகிறது. உள்ளே செல்கிறேன். அங்கே சுமார் பதினைந்து வயது மதிக்கக் கூடிய ஒரு தமிழ் சிறுமி கைபேசியில் தனது சிரத்தைகள்ள வைத்து கொண்டு இருப்பதைக் கண்டு. மனம் நெகிழ்கிறது. "எத்தின நாட்கள் தமிழ் மக்களை கண்டு எப்பிடி என்றாலும் இவளுடன் பேசணும் " மனதில் எழுந்த சந்தோஷ அலைகளுடன், HI> Guten tag. ich bin kavi. und wie heißen sie? (என் பெயர் கவி உனது பெயர் என்ன? - ஜேர்மன் மொழியின் தமிழாக்கம்) தமிழ் மொழியில் பேச அவளுக்கு புரியாது என்ற நினைப்பில் நான் ஜேர்மன் மொழியிலே உரையாடு கிறேன். ஆனால் அவள் எனக்கு எந்த பதிலையும் தரவில்லை. மாறாக கோவம் கலந்த விழிகளோடு என்னைப் பார்க்கிறாள்.

நீங்க தமிழ் தானே...? ஏன் தமிழ் பேச வராதோ? தமிழரை கண்டால் தமிழில பேசுங்க... எதுக்கு அந்நிய மொழி பிரயோகம் எமக்கிடையே...? அந்த வார்த்தைகள் என் உள்ளங்கால் முதல் உச்சி வரை எதிரொலித்துக் கொண்டே இருந்தது. மன்னிக்கணும் சகோதரி... இங்கே பலர் எமது மொழி பேசுவதில் ஆர்வம் இல்லாது ஆங்கிலம் அல்லது ஜேர்மனிய மொழியையே அதிகம் பேசுகின்றனர் அதுவும் இளையவர்கள் முற்று முழுதாக இந்த நிலையிலையே இருக்கின்றனர் அதனால் தான் நான் அப்படிக் கேட்டேன்.

அப்படியா? ஆனால் நாம் அப்பிடி இல்லை மாமா நாம் தமிழ் பள்ளிக்கு செல்கிறோம் தமிழ் கலாச்சார விழுமியங்களை தமிழ் மொழியை காப்பதற்கான பல வழிகளை நாம் கற்றுத் தேர்ந்துள்ளோம். சிலர் எம் மொழி மீதான பற்றுதல் இல்லாது இருந்தாலும், எமது மொழி மீதான பற்றுதல் குறையாத 80% மக்கள் இங்கே வாழ்கிறோம் என்பதை மறவாதீர்கள். அவள் கூறியவை மீண்டும் மீண்டும் எனது எண்ணங்களில் தோன்றி மறைந்து கொண்டே இருந்தது.

அடுத்த நிறுத்தத்தில் இறங்கத் தயாராகிய அவள் மாமா இப்ப கூட நான் தமிழ் ஆலயம் தான் செல்கிறேன் புலத்தில் தமிழ் வளர்ச்சி எப்படி என்பதை அறிய வேண்டும் எனில் இந்த முகவரிக்கு வாருங்கள். அங்கே எமது தமிழாலைய பணிகளை நேரே கண்டு கொள்வீர்கள். எமது ஆசிரியர்களின் கற்பித்தலையும் அதை கற்கும் எமது ஆர்வத்தையும் நீங்கள் புரிந்து கொள்வீர் கள். பல பிள்ளைகள் பெற்றவரின் கட்டளைக் காக படிக்க வந்தாலும் 60% பிள்ளைகள் தமிழ் மீதான பற்றுடனே வருகிறோம். மொழி மட்டுமல்ல எமது கலையும் கலாச்சாரமும் அங்கே முன்னிறுத்தப்படு வதை நீங்கள் உணர்வீர்கள். கூறி முடித்தவளாய் ஒரு முகவரி அட்டையை தந்து செல்கிறாள் அவள்.

புன்னகையும் எமது தேசியத் தலைவரது தூர தர்ஷனமும் என் மனதில் குளிர்மையை விதைத்தது. எனது பயணம் தமிழை சுற்றியே தொடர்ந்து கொண்டிருந்தது. மொழி என்பதுவே எங்கள் இனத்தின் அடையாளம். எமது இனத்துக்கு மொழி தான் உயிர். மொழியை காப்பதனூடாக எமது இறைமையையும் இருப்பையும் காத்துக்கொள்ள முடியும். அந்த வகையில் தான் எமது விடுதலை அமைப்பு பல கிளை அமைப்புக்களை தாயகத்திலும் புலத்து நாடுகளிலும் உருவாக்கி தமிழ் மொழியின் பற்றுதலை அதிகரிக்க முனைப்புக் கொண்டிருந்தது. அந்த இடத்தில் வெற்றியையும் கண்டிருக்கின்றது என்பதை இது போன்ற பலர் மூலம் நாங்கள் உறுதிபடுத்த முடியும்.

எம் மொழியின் வரலாற்று பக்கத்தை நோக்கும் போது, தமிழறிஞர்களும் மொழியாளர்களும் தமிழ் இலக்கியத்தினதும் தமிழ் மொழியினதும் வரலாற்றை ஐந்து காலப்பகுதிகளாக வகைப்படுத்தியுள்ளனர். இவை:

சங்க காலம் (கி.மு 300 – கி.பி 300)

சங்கம் மருவிய காலம் (கிபி 300 - கிபி 700)

பக்தி இலக்கிய காலம் (கிபி 700 - கிபி 1200)

மையக் காலம் (கிபி 1200 - கிபி 1800)

தற்காலம் (கிபி 1800 - இன்று வரை)

இவ்வாறாக பிரிக்கப்பட்ட எமது மொழிக் காலத்தில் சங்க காலத்தில் கடைச்சங்கம் இருந்ததாக சான்று படுத்தப்பட்டன மற்றைய சங்கங்கள் இருந்ததோ இல்லையோ என்பது பற்றி பல்வேறு ஐயங்கள் வினாக்கள் தொடுக்கின்ற போதும் கடைச் சங்கத்தின் இலக்கியங்கள் இன்று எமக்கு கடைச்சங்கம் சிறப்பாக இருந்ததற்கு சான்றாக அமைகின்றது. அதிலும் கடைச்சங்க இலக்கியங்களை நோக்கும் போது முற்று முழுதான வேற்று மொழி கலக்கப்படாத தூய தமிழ் நடை முறைப்படுத்தப்பட்டிருந்ததை நாம் உணரக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் பிற்பாடு எமது மொழியில் பக்தி இலக்கிய காலம். மையக் காலம் என்பவற்றில் ஏறத்தாழ மணிப்பிரவாள நடையுடன் ஐம்பதிற்கு மேற்பட்ட பிறமொழி சொற்கள் கலந்து எமது மொழியின் தனித்துவம் இழக்க தொடங்கியது.

சங்க காலத்து இலக்கியங்கள் எமக்கு இன்னும் ஒன்றை உணர்த்தி நிற்கின்றன மொழிகளுக்கெல்லாம் அதிபதியாய் வீற்றிருந்த எமது தமிழில் அன்று முன்னவர்களால் ஆக்கித் தரப்பட்டிருந்த மொழிக்களஞ்சியமானது உலகின் வேறு எந்த மொழியிலும் அது இருக்காத அளவுக்கு மிகவும் தொன்மையான 90,000-க்கும் மேற்பட்ட சொற்களை களஞ்சியமாக கொண்டு படைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வகையில் அக்காலத்தில் அத்தகைய வளம் கொண்ட மொழி இருந்ததில்லை அதற்குப் பின்னர் உருவான பல மொழிகள் தமது மொழிக்களஞ்சியத்தை வளர்த்து கொண்டு உலகின் தேவைக்கேற்ப வளர்ந்து கொண்டிருக்கின்ற சூழலில் எமது மொழி அறிஞர்கள் தனித்துவமான சொற்களஞ்சியத்தை வளர்க்க முனைய வில்லை. மாறாக பிற மொழிகளில் இருந்து சொற்களை கடன்வாங்கி தமிழ் மொழியின் இறைமையை தொலைக்கத் தொடங்கி இருந்தோம்.


அதை விட எம்மை அழிக்க துடித்து கொண்டிருந்த ஒவ்வொரு அந்நிய படைகளும் எம்மை விட எம் மொழியிலையே முன்னிலை கொண்டிருந்தனர். மொழியை அழிப்பதன் மூலம் இனத்தின் இருப்பை அளித்து விடலாம் என்று சிங்கள தேசமும் முனைப்புக் கொண்டது. அப்போது தான் தொலைந்து கொண்டிருக்கும் எமது இறையாண்மைகளை காத்திட வேண்டிய கடப்பை எமது விடுதலை அமைப்பு உணர்ந்து கொள்கிறது. மொழி அழிந்தால் அந்த இனமே அழியும் என்பதன் உண்மை உணரத் தொடங்கிய நாளில் இருந்து எமது ஈழ தேசத்திலே பல முனைப்புக்களை எமது விடுதலை அமைப்பு மேற்கொண்டிருந்தது. இதற்கான பல கிளை அமைப்புக்கள் உருவாக்கம் கண்டன. ஈழத்தில் மட்டுமல்ல புலம்பெயர் தேசங்களிலும் தமிழ் மொழி வளர்ச்சி செயற்பாடுகள் தொடக்கப்பட்டு முன்னேற்றம் காண தொடங்கின. அவற்றில் முக்கியத்துவம் பெறுவது தமிழ் கல்வி வளர்ச்சி கழகம்.

இந்த தமிழ் கல்விக் கழகத்தின் முதல் செயற்பாடுதான் தமிழ் பள்ளிகள் உருவாக்கம். இந்த பள்ளிகளின் வரலாற்றில் திரு. நாகலிங்கம் என்ற ஆசிரியர் முக்கியத்துவம் பெறுகின்றார். மாமனிதராகி விட்ட அந்த மனிதன் தனது முயற்சியால் ஜேர்மனியில் உள்ள ேகன் நகரில் 1986ல் தமிழ் பாடசாலைகளை ஒன்றை நிறுவினார். ஆரம்பத்தில் அதில் 10 மாணவர்கள் மட்டுமே கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த பணி இன்று சர்வதேசம் முழுவதும் வளர்ச்சி கண்டு நிமிர்ந்து நிற்கின்றது என்றால் அது நியமே. தொடர்ந்து வந்த மூன்றே வருடத்தில் தன் அயராத உழைப்பினால் ஜேர்மனியில் 1989ஆம் வருடத்தில் 13 பாடசாலை நிறுவியிருந்தார். இவர் தான் முதல் முதலில் தமிழ் பாடசாலைகளுக்கு பொது தேர்வினை யேர்மனியில் 1989ல் செயல்படுத்தினார். திரு.நாகலிங்கம் அவர்களை ஜேர்மனிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழு தமிழ் கல்விப் பிரிவின் பொறுப்பாளராக இக்கால கட்டத்தில் அறிவித்தது. 1990களில் இருந்து திரு. நாகலிங்கம் அவர்களின் முழு வழிகாட்டலில் தமிழ் மற்றும் கலாச்சார பாடசாலைகளை ஒன்றிணைத்து "தமிழாலையம்" உருவாக்கம் கண்டது.

மொழியை வளர்க்கின்ற பணியையும் எமது கலை கலாச்சார விழுமியங்களையும் காக்க வேண்டிய பணிகள் முன்னெடுக்க வேண்டிய முக்கிய குறிக்கோளுடன் இயங்கத் தொடங்கியது.

அந்த வகையில் தமிழாலையம் தனது முன்னேற்ற வழிகளில் தடம்பதித்து ஜேர்மனியில் 134 மேற்பட்ட தமிழ் ஆலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன அதில் 6500 ற்கு மேற்பட்ட மாணவர்கள் கற்றலில் ஈடுபடுகிறார்கள் 350 நிர்வாகிகளும் 650 ஆசிரியர்களும் பணியாற்றுகின்றனர். அதிலும் மகிழ்விக்கும் விடயம் அங்கு கற்று தரம் 12ல் நடாத்தப்பட்ட பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்கள் இப்போது ஆசிரியர்களாகக் கடமையில் இருந்து அடுத்த தலைமுறைக்கான வழிகாட்டிகளாக மாறி நிற்கின்றார்கள். அது மட்டுமன்றி பல்கலைக்கழகத்தின் தமிழ் மொழி டிப்ளோமா கற்கையை உருவாக்கி அதில் மாணவர்கள் தேர்ச்சி பெறுவதற்கான முயற்சிகளும் இப்போது வெற்றி நிலையில் உள்ளன.

இவ்வாறான கலை கலாச்சார மொழிப் பற்றோடு மாணவர்களை உருவாக்கிப் பெருமிதம் கொண்டு " தமிழால் உலகில் ஒன்றிணைவோம்" என்ற நிலை கொண்டு இருபத்தைந்து ஆண்டு நிறைவைக் கண்டு நிமிர்ந்து நிற்கின்றது. ஜேர்மனிய தமி ழாலையங்கள்.



# எல்லாம் எண்ணத்தின் உருவாக்கமே!

■ சிவகார்த்திகேயன்

நேர்மறை எண்ணம் எது? அதை எப்படிக் கண்டுபிடிப்பது? அதே போல எதிர்மறை எண்ணம் வருகிறது என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது? மிக எளிய வழி ஒன்று உள்ளது. எண்ணத்தைக் கண்காணிப் பதைவிட உணர்ச்சியைக் கண்காணிப்பது சுலபம். நேர்மறை உணர்வுகள் நேர்மறை எண்ணங்களின் விளைவு. எதிர்மறை உணர்வுகள் எதிர்மறை எண்ணங்களின் விளைவு.

## பதற்றமும் உற்சாகமும்

மேடைப் பேச்சுக்குத் தயார் செய்கிறார் ஓர் இளைஞர். அவர் மனம் படபடப்பாக இருக்கி றது. "என்னால் மேடையில் பேச முடியுமா? சொதப்பினா கேவலமாயிடும்" என்ற எண் ணம் பின்னணியில் படபடப்பை இயக்குகிறது.

அதே மேடைப் பேச்சுக்கு இன்னோர் இளை ஞரும் தயார் செய்கிறார். அவர் மனம் உற்சாகமாக இருக்கிறது. "கடைசியில் அந்த ஜோக்கைச் சொல்லி ஒரு பெரிய அப் ளாஸ் வாங்கணும்" என்று எண்ணுகிறார். அந்த எண்ணம் அவருக்கு உற்சாகம் தருகிறது.

"ஏற்கெனவே ஒரு தோல்வியை அடைந் திருந்தால் எதிர்மறை எண்ணம் தானே வரும்? நிறைய ஜெயித்தால் நேர்மறை எண்ணம் தானாக வரும்" என்று நீங்கள் வாதிடலாம். அப்படியானால் எண்ணங்களும் உணர்வுகளும் நம் செயல்களின் விளைவுகளா? இது பாதி நிஜம்.

## எண்ணம் - உணர்வு - செயல்

எண்ணம் - உணர்வு - செயல் மூன்றும் ஒன்றை ஒன்று பாதிக்கக் கூடியவை. "என்னால் முடியாது" என்ற எண்ணம் பதற்றம் என்ற உணர்வைக் கொடுக்கிறது. பதற்றம் என்ற உணர்வு வாய் குழறுதல் என்ற செயலை நிகழ்த்துகிறது.

அதே போல வாய் குழறும் போது பதற்றம் வரும். பதற்றம் வந்தால் 'நம்மால் முடியாது' என்ற எண்ணம் வருகிறது. இதே போல நேர்மறையாகவும் நடக்கலாம். "என்னால் முடியும்" என்ற எண்ணம் நிதானம் என்ற உணர்வைக் கொடுக்கிறது. நிதானம் கணீரென்ற குரலில் பேச வைக்கும்.

அதே போலக் கணீரென்று பேசும் போது நிதானம் வரும். நிதானம் நம்மால் முடியும் என்ற எண்ணத்தைக் கொடுக்கும். இந்த எண்ணம் - உணர்வு - செயல் என ஒரு வளையம் போலச் சுற்றிச் சுற்றி வருவது தான் நம் வாழ்க்கையில் அனைத்தையும் நிகழ்த்துகிறது.

உங்கள் வாழ்க்கையில் நடந்த அனைத்து முக்கிய நிகழ்வுகளிலும் இந்த மூன்று விஷயங்களையும் அலசுங்கள். எது அதிகம் பாதித்தது என்று யோசியுங்கள். பெரும்பாலும் எண்ணம்தான் பிரதான காரணமாக இருக்கும்.

## எண்ணத்தின் உருவாக்கமே

உலகில் உருவாக்கப்பட்டுள்ள ஒவ்வொன்றும் முதலில் யாரோ ஒருவர் தன் உள்ளத் தில் உருவாக்கியதே. நாடுகள், எல்லைகள், கட்சிகள், கட்டிடங்கள், கொள்கைகள், பதவிகள், சாதிகள், குற்றங்கள் என அனைத்தும் யார் எண்ணத்திலோ தோன்றியவை தான்.

நம் செயல்கள் அனைத்துக்கும் நம் எண்ணங்கள் தான் காரணம் என்று ஒப்புக்கொள்வதில் நம்மில் பலருக்குச் சிக்கல் இருக்கிறது. நம் முடிவுகளும் செயல்களும் தானே வாழ்க்கை? அப்படியானால் நம் வாழ்க்கை யைப் பெரிதும் நிர்ணயிப்பது நம் எண் ணங்கள் தானே? "என் வாழ்க்கை இப்படி இருக்க என் எண்ணங்கள் தான் காரணமா?" என்று நம்ப முடியாமல் கேட்பவர்களுக்கு என் பதில்: ஆம்.

## எந்த மனநிலை?

எண்ணம் போலத் தான் எல்லாம் நடக்கும் என்று பெரியவர்கள் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை. அப்படி என்றால் தோல்வி அடைபவர்கள் தோல்வி வேண்டும் என்றா எண்ணுகிறார்கள்? அவர்கள் தோல்வி வேண்டும் என்று எண்ணுவதில்லை. ஆனால் தோற்கக் கூடாது என்ற எண்ணத் தில் தோல்வியின் விளைவுகள் பற்றி அதிகம் யோசித்திருப் பார்கள்.

வெற்றி பற்றி யோசிப்பதை விடத் தோல்வி அடையக் கூடாது என்று அதிகம் யோசித்திருப்பார் கள். நம் மனம் எந்த மன நிலையில் இருக்கிறதோ அதற்கேற்ற நிகழ்வுகள்தான் நம்மைத் தொடரும்.

## அப்பாவும் மகனும்

ஒரு சின்ன உதாரணத்தைப் பார்ப்போம். அப்பாவுக்குத் தன் மகனின் திறமை மேல் நம்பிக்கை இல்லை. பொறுப்பில்லாதவன் என்ற எண்ணம். நண்பரிடம் குறை படுகிறார். "ஒரு வேலையைக் கூடச் சரியா செய்ய மாட்டான்!" கடைக்குப் போகும் வேலை வருகிறது. "நீங்க வேணா பாருங்க, எப்படி சொதப்புவான்னு" என்று மகனின் முன்பாகவே சொல்லி நூறு ரூபாய் கொடுத்துச் சில பொருட்கள் வாங்கி வரச்சொல்கிறார்.

அப்பாவின் எண்ணமும் மனப்பான்மையும் மகனின் தன்னம் பிக்கையைக் குறைக்கிறது. பயம் வருகிறது. சொதப்பக் கூடாது என்ற எண்ணம் வலுவடைகிறது. எரிச்சலும் வருகிறது. பயந்தது போலவே மீதம் தரப்பட்ட சில்லறையில் ஒரு ரூபாயைக் குறைத்துவாங்கி வருகிறான்.

எண்ணிப்பார்த்த அப்பா தன் நண்பரிடம், " நான் சொன்னேன்ல சொதப்புவான்னு. சரியாத்தானே சொன்னேன். பாருங்க ஒரு சில்லறையைக்கூட சரியா எண்ணி வாங்க முடியலை! இவன் எல்லாம் என்ன பண்ணப் போறானோ?"

இப்பொழுது அப்பாவுக்கு இருக்கிற தன் மகன் பற்றிய எண்ணம் சான்றோடு ஊர்ஜிதப்படுகிறது. மகனும் அதை மெல்ல நம்ப ஆரம்பிக்கிறான். "சரி தான். நான் மற்றவர்கள் போலச் சாமர்த்தியம் குறைவு தான்!"

> "எண்ணம் – உணர்வு – செயல் மூன்றும் ஒன்றை ஒன்று பாதிக்கக் கூடியவை. "என்னால் முடியாது" என்ற எண்ணம் பதற்றம் என்ற உணர்வைக் கொடுக்கிறது. பதற்றம் என்ற உணர்வு வாய் குழறுதல் என்ற செயலை நிகழ்த்துகிறது.

## பெரும் பிரச்சினை

முன்கூட்டியே தீர்மானிக்கும் எண்ணங்கள் நாம் நம்பும் விளைவுகளைத் தந்து அந்த எண்ணங்களை வலுப்படுத்தும். காலப்போக்கில் அந்த எண்ணங்கள் அனுபவத்தால் வந்தால் அபிப்பிராயங்களாய் மனம் பதிவு செய்து கொள்ளும். இது தான் மனம் செய்யும் தந்திரம்.

நம் வாழ்க்கையின் சகல விஷயங்களிலும் இது தான் நடக்கிறது. ஆங்கிலத்தில் Self Fulfilling Prophecy என்று ஒன்று உண்டு. அதை விரிவாக விவாதிப்பதற்குள் உங்கள் வாழ்க்கையின் பெரும் பிரச்சினை எது என்று யோசியுங்கள். அது பற்றிய உங்கள் எண்ணங்களை எழுதுங்கள். அவற்றில் ஏதாவது (முறை) தெரிகிறதா என்று பாருங்கள். உங்கள் வாழ்வைத் திருப்பிப் போடும் விசையில் நீங்கள் கை வைத்து விட்டீர்கள்!

# தாயாகப் போகும் உங்களுக்கு - 9

# பிள்ளை வயிற்றிலே மாண்டிருந்தால் துடிப்பு அறவே தெரியாது!

டாக்டர் எம்.கே.முருகானந்தன்

**பிள்ளை வயிற்றிலே மாண்டிருந்தால் துடிப்பு அறவே இருக்காது. வைத்தியருக்கும் அதன் இதயத்துடிப்பு கேட்காது. ஆனால் மிக அரிய சந்தர்ப்பங்களிலேயே குழந்தை கர்ப்பப் பையிலேயே இறந்துவிடுகின்றது. மிகவும் துர்ப்பாக்கியமான, மனதுக்கு வேதனை அளிக்கும் நிகழ்ச்சிதான் இது.**

### பேறுகாலத்திற்கு முன்னரே பன்னீர்க்குடம் உடைதல்

பொதுவாகப் பன்னீர்க்குடம் பிரசவ வேதனை ஆரம்பித்த பின்னரேதான் உடையும். ஆயினும் சில வேளைகளில் பிரசவ வேதனை ஆரம்பிக்க முன்னரே இது நிகழக்கூடும். பிரசவ காலம் நெருங்கிய நேரத்தில் இது உடைந்தால் அது பெரும்பாலும் பிரசவ வேதனை ஆரம்பிப்பதற்கான அறிகுறியாக இருக்கலாம்.

பிரசவ காலத்திற்கு பல நாட்களுக்கு முன்னரே இது நிகழ்ந்தால், அது பல்வேறு காரணங்களினால் இருக்கலாம். எனவே வைத்திய ஆலோசனையைப் பெறுவது அவசியம். பூரண ஓய்வு தேவை. அத்துடன் உங்கள் பாலுறுப்பின் சுத்தத்தில் மிக அதிக கவனம் செலுத்த வேண்டும். உடல் உறவும் தவிர்க்கப்படவேண்டும்.

பன்னீர்க்குடம் உடைந்தால் பெருமளவு நீர் போன்ற திரவம் உங்கள் பாலுறுப்பிலிருந்து வெளியேறும். இது உங்கள் தொடைகளை நனைக்குமளவு அதிகமாக இருக்கலாம். அல்லது சிறிதளவே கசிவது போல் வெளியேறக் கூடும்.

இதை வெள்ளைபடுதலிலிருந்து பிரித்தறிவது அவசியம். வெள்ளை படுதலில் சிறிதளவு திரவமே வெளியேறும். அத்துடன் இத்திரவம் தடித்த சளி அல்லது பாலாடை போல் இருக்கும்.

இவற்றை வேறுபடுத்தி அறிய உங்களுக்கு முடியுமானால், வைத்தியருக்கு விளக்கமாகச் சொல்லக் கூடியதாக இருக்கும்.

### கர்ப்பகாலத்தில் இருக்கும் குழந்தையின் துடிப்பு குறைதல் அல்லது முற்றாக நின்று விடுதல்

கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையின் துடிப்பை நீங்கள் 18 முதல் 20 வாரங்களில் உணரக் கூடியதாக இருக்கும். ஏற்கனவே நீங்கள் வேறு குழந்தைக்குத் தாயாக இருந்தால் பழக்க தோசம் காரணமாக குழந்தையின் துடிப்பை ஓரிரு வாரங்கள் முன்னதாகவே உணரக் கூடியதாக இருக்கும்.

பின் மாதங்களில் இத் துடிப்பு மேலும் அதிகரிக்கும். குழந்தையின் இதமான உதை உங்களுக்கு வேதனை அளிக்காமல் ஆனந்தப்படவைக்கும். பின் மாதங்களில் திடீரென இத்துடிப்பு மறைந்து, உங்கள் கர்ப்பப்பை ஆரவாரமற்று இருந்தால் வைத்தியரிடம் காட்டி ஆலோசனை பெறுவது அவசியம். அவர் கருப்பையில் இருக்கும் குழந்தையின் இதயத்துடிப்பை அதற்கான கருவி (Foetal Stethescope) மூலம் கவனித் தும், கணக்கிட்டும் பார்ப்பார். அதன் மூலம் உங்களுக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறுவார்.

சில வேளைகளில் உங்களுக்கு குழந்தையின் துடிப்பு. உணரக் கூடியதாக இல்லாவிடினும், அல்லது அதை நீங்கள் சரியாக அவதானிக்காமல் விட்டாலும்கூட, வைத்தியருக்கு அதன் இதயத்துடிப்பு துல்லியமாகக் கேட்கும். எனவே நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. மறுநாளோ, அடுத்தநாளோ உங்கள் சோர்ந்த மனது பூரிக்கும் வண்ணம், குழந்தையின் துடிப்பை நீங்களே உணர்வீர்கள்.

ஒருவேளை அவருக்கும் குழந்தையின் இதயத்துடிப்பில் குறைவு தென்பட்டால், குழந்தை உடனடியாகப் பிறப்பிக்க வேண்டியது அவசியமா என ஆராயக் கூடும். சில வேளைகளில் குழந்தையைக் காப்பாற்றுவதற்காக ‘சிசேரியன்’ சத்திர சிகிச்சை செய்யவும் கூடும்.

பிள்ளை வயிற்றிலே மாண்டிருந்தால் துடிப்பு அறவே இருக்காது. வைத்தியருக்கும் அதன் இதயத்துடிப்பு கேட்காது. ஆனால் மிக அரிய சந்தர்ப்பங்களிலேயே குழந்தை கர்ப்பப் பையிலேயே இறந்துவிடுகின்றது. மிகவும் துர்ப்பாக்கியமான, மனதுக்கு வேதனை அளிக்கும் நிகழ்ச்சிதான் இது.

குழந்தை வயிற்றினுள் இறந்துவிட்டாலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பிரசவ வேதனை உடனேயே ஏற்படுவதில்லை. இதனால் உயிரற்ற குழந்தையைச் சுமக்கும் அபாக்கியமான நிலைக்கு அவள் ஆளாகிறாள். அத்துடன் அறிவற்ற சில உறவினர்கள், மரணமடைந்த குழந்தை வயிற்றினுள் இருப்பதால் அதன் நஞ்சு தாய்க்கு ஊறி அவளது உடலுக்கும் தீங்கு விளைவிக்கும் என்ற பீதியையும் கிளப்பி விடுகிறார்கள்.

இதில் எவ்வித உண்மையும் இல்லை. தாய்க்கு மனோ ரீதியான குழப்பத்தைத் தவிர உடல் ரீதியான எவ்வித ஆபத்தும் ஏற்பட்டுவிடாது. உயிரற்ற குழந்தையை வெளியேற்றவே அவளது உடல் எத்தனிக்கும். பெரும்பாலும் இரண்டு வாரங்களுக்கிடையில் பிரசவ வேதனை ஏற்பட்டு அக்குழந்தை பிறந்துவிடும்.

அதற்கிடையில் உயிரற்ற அக்குழந்தையை உடனடியாகப் பிறப்பிக்கவேண்டும் என்று உங்கள் வைத்தியரை நிர்ப்பந்திக்க வேண்டாம். நிர்ப்பந்தித்தாலும் அவர் அதற்கு உடன்படப்போவதில்லை. ஏனெனில் இயற்கைக்கு எதிராக அதை அவசரப்பட்டு பிறப்பிக்க எத்தனித்தால் தாய்க்கு தீங்கு ஏற்படக் கூடும்.

### இரட்டைக் குழந்தைகள்

உங்கள் வயிறு பெரிதாக இருக்கிறது. மற்றைய கர்ப்பிணிகளுக்கு இருப்பதை விடப் பெரிதாக இருக்கிறது. அத்துடன் குழந்தையின் துடிப்புக்கூட மிக அதிகமாக இருக்கிறது. மிக எளிதில் களைப்படைகிறீர்கள். நீங்கள் ஏற்கனவே தாயாகி இருந்தால் இந்த வித்தியாசங்களை இலகுவில் உணர்ந்து கொள்வீர்கள். உங்கள் உறவினர்கள் கூட மிகையாகப் பருத்த வயிற்றைக் கவனித்து உங்களுக்குத் தெரிவிக்கக்கூடும்.

இரட்டைக் குழந்தையாக இருக்குமோ என்ற சந்தேகம் எழுகிறது. உங்களது அல்லது உங்களது கணவரின் நெருங்கிய உறவினர்களுக்கு இரட்டைக் குழந்தைகள் முன்பே பிறந்திருப்பதை யாராவது நினைவுபடுத்தக்கூடும். இதனால் சந்தேகம் வலுப்பெறுகிறது.


*(தொடரும்)*



# தமிழ்த் தேசிய அரசியலுக்கான சவால்களும் வாய்ப்புக்களும் 3

மாமனிதர் சிவனேசன் ஞாபகார்த்த நினைவுப் பேருரை

■ சி.அ.யோதிலிங்கம்



தமிழ் மக்களது தியாகம் நிறைந்த ஆயுதப்போராட்டத்தை சர்வதேச வல்லரசுகளினதும் பிராந்திய வல்லரசுகளினதும் உதவியோடுதான் அழிக்க முடிந்தது. ஒருவகையில் அவை கையையும், காலையும் கட்டிவிட பேரினவாத அரசு மூர்க்கத்தனமாக அழித்தது.

சர்வதேச வல்லரசுகளும் பிராந்திய வல்லரசும் அழிக்கத் துணை புரிந்தமைக்கு இலங்கையை மையப்படுத்திய புவிசார் அரசியல்தான் காரணம். அவற்றிற்கு முழு இலங்கைத்தீவும் தேவை. தமிழரது தாயகம் தனி நாடாகச் சென்றால் இலங்கைத்தீவின் மறுதுண்டு சீனாவிற்கு சார்பாக முழுமையாகச் சாய்ந்துவிடும் என்ற அச்சம் அவற்றிற்கிருந்தன.

இந்த அச்சத்தைப் போக்கும் வகையில் புலிகள் நாடுகளின் கூட்டாட்சி என்ற சம்மேளன முறைக்கு இறங்கி வருவதற்குத் தயாராக இருந்தனர். தமது இடைக்கால யோசனைகள் மூலம் அதற்கான சைகைகளையும் அவர்கள் தெளிவாகக் காட்டியிருந்தனர். ஆனால் அதைவிடக் குறைந்த மாகாணசபை முறை தீர்வினை ஏற்பதற்கு சம்பந்தன் தலைமை தயாராக இருந்தது.

எனவே புலிகளை அழித்துவிட்டால் சிங்களத் தரப்பின் எதிர்ப்பு இல்லாமல் இலகுவாக பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என பிராந்திய வல்லரசும் சர்வதேச வல்லரசுகளும் கருதியிருந்தன. சம்பந்தன் தலைமை புலிகள் முன்வைத்த தீர்வில் உறுதியாக நின்றிருப்பின் புலிகள் அழிக்கப்பட்டாலும் நிலைமை மாறப்போவதில்லை எனக் கருதி புலிகளை வைத்துக் கொண்டே பிரச்சினையைத் தீர்க்க வல்லரசுகள் முயன்றிருக்கும். இங்கு எம்மவர்தான் கோடரிக் காம்பாக இருந்திருக்கின்றனர். எனவே ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்டமைக்கு சம்பந்தன் தலைமையும் ஒரு காரணம்.

இவை அனைத்தும் இணைந்து ஆயுதப்போராட்டத்தை அழித்தனவே தவிர தமிழ்த்தேசிய அரசியலை அழிக்க அவர்களால் முடியவில்லை.

ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்டாலும் போராட்டத்தலைமை தமிழ் மக்களுக்குச் சார்பான புவிசார் அரசியல் நிலைமையை உருவாக்கிவிட்டிருந்தது. சீனாவின் அதிகரித்த பிரசன்னத்தால் இலங்கைத் தீவினை மையமாக வைத்து அமெரிக்கா தலைமையிலான மேற்குலக - இந்தியக் கூட்டிற்கும் சீனாவிற்கும் இடையே புவிசார் அரசியல் போட்டி ஒன்று உருவாகியிருந்தது.

இது 2015 ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று ஆட்சிமாற்றம் வரும்வரை வலுவான நிலையில் இருந்தது. இந்தப் போட்டியினால்தான் சர்வதேச விசாரணை என்பதும் வந்தது. பிராந்திய வல்லரசும், சர்வதேச வல்லரசுகளும் தொடர்ச்சியாக அழுத்தங்களைக் கொடுத்து வந்தன. சீன நீர்மூழ்கிகளின் வருகை இந்தியாவின் அச்சத்தை உச்சநிலைக்குக் கொண்டு சென்றது.

ஆனாலும் ஆட்சிமாற்றம் ஒன்றைக் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கையில் வல்லரசுகள் இருந்தன. இதன் காரணமாக வலுவான அழுத்தங்களைக் கொடுக்கவில்லை. ஒருவகையிலான காது திருகல் அழுத்தங்களாகவே அவை இருந்தன. ஜனாதிபதி தேர்தல் வந்தபோது தமிழ்த் தரப்பிற்கு பேரம் பேசலுக்கான அதிக வாய்ப்பு இருந்தது. கடைசி நேரத்தில் தமிழ் மக்களின் வாக்குகள்தான் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் என்பது தெளிவாகத் தெரிந்திருந்தது.

> “புலிகள் தாம் அழிந்தாலும் தமிழ் அரசியலை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு சென்றுவிட்டமை, விலை போகாத கொள்கை, அளவற்ற தியாகம் என்கின்ற அருங்கொடை-களை வழங்கிவிட்டுச்சென்றிருந்தனர். இந்த அருங்கொடைகளின் அடித்தளத்தில் நின்று கொண்டு நீண்ட தூரம் எம்மால் முன்னேறியிருக்கமுடியும். கூட்டமைப்பின் தலைமை அதற்கான இடத்தைக் கொடுக்கவில்லை.”



இந்நிலையில் பிராந்திய வல்லரசுகளுடனும், சர்வதேச வல்லரசுகளுடனும் வலுவான பேரம் பேசலை தமிழ்த் தலைமை மேற்கொண்டிருக்கலாம். அரசியல் தீர்வு, இயல்பு நிலையினைக் கொண்டு வருதல் என இப்பேரம் பேசலை நடத்தியிருக்கலாம். ஆனால் தமிழ்த் தலைமை இதற்கெல்லாம் இடம் வைக்காமல் வெற்றுக் காசோலையில் கையெழுத்திடுவது போல ஆட்சி மாற்றத்திற்கு உதவியது. எமக்கு சாதகமாக இருந்தவற்றையெல்லாம் கவிழ்த்துக் கொட்டியது.

புலிகள் தாம் அழிந்தாலும் தமிழ் அரசியலை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு சென்றுவிட்டமை, விலை போகாத கொள்கை, அளவற்ற தியாகம் என்கின்ற அருங்கொடைகளை வழங்கிவிட்டுச்சென்றிருந்தனர். இந்த அருங்கொடைகளின் அடித்தளத்தில் நின்று கொண்டு நீண்ட தூரம் எம்மால் முன்னேறியிருக்கமுடியும். கூட்டமைப்பின் தலைமை அதற்கான இடத்தைக் கொடுக்கவில்லை.

கூட்டமைப்பிடம் சொந்த நிகழ்ச்சி நிரல் எதுவும் இருக்கவில்லை. பிராந்திய வல்லரசிற்கு எந்தவித நிபந்தனையுமல்லாமல் சேவகம் செய்யும் கூட்டமாகவே அது மாறியது. அதன் நிகழ்ச்சி நிரலிற்குப் பின்னால் இழுபட்டுச் சென்றது. இவ்வாறு இழுபட்டுச் செல்வது வெறும் மந்தைக் கூட்டம் செய்யும் வேலையே தவிர ஒரு மக்கள் கூட்டத்தின் விடுதலைக்காக போராடும் அரசியல் இயக்கம் செய்யும் வேலையல்ல.

இங்கு நான் பிராந்திய வல்லரசினையோ, சர்வதேச வல்லரசுகளையோ எதிரியாகக் கருத வேண்டும் எனக் கூறவில்லை. அவற்றைக் கையாளுவதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்றே கூறுகின்றேன்.

தமிழ் மக்களைப் பயன்படுத்தி, பிராந்திய வல்லரசும், சர்வதேச வல்லரசுகளும் தமது நலன்களை அடைய முயற்சிக்கும்போது எங்களது நலன்களையும் நாம் பேணவேண்டும். அவர்களது நிகழ்ச்சி நிரலிற்குள் எங்களது நிகழ்ச்சி நிரலையும் சேர்க்கவேண்டும் எனக் கேட்கும் உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு. இந்தப் பேரம் பேசும் ஆற்றல் சொந்தப் பலத்தில் சொந்த நிகழ்ச்சி நிரலில் நிற்கும்போது தான் சாத்தியமாகும். இரவல் பலத்தில், இரவல் நிகழ்ச்சி நிரலில் நிற்கும்போது ஒருபோதும் சாத்தியமாகப் போவதில்லை.

2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை எங்களுக்குப் பின்னால் திரிந்த பிராந்திய வல்லரசுக்கும், சர்வதேச வல்லரசுகளுக்கும் நாம் தற்போது கணக்கெடுக்க விரும்பாத இரண்டாம் பட்ச மனிதர்களானோம். அரசியல் தீர்வு, இயல்பு நிலையைக் கொண்டு வருதல் என்பன நீண்ட காலம் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது. தாம் உருவாக்கிய ஆட்சி மாற்றத்தைப் பாதுகாப்பதற்காகத் தமிழ் மக்களது இதுவரைகால அரசியலைக் கைவிடுமாறு பிராந்திய, சர்வதேச வல்லரசுகள் வற்புறுத்துகின்றன. இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அரசாங்கத்திற்கு எதுவித கரைச்சலும் கொடுக்க வேண்டாம் என நேரடியாகவே கூறிவிட்டுச் சென்றிருக்கின்றார்.


சம்பந்தன் தலைமையும் அவற்றின் வேண்டுகோளுக்கேற்ப தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்கின்ற தமிழ் அரசியலின் அடிப்படைக் கோட்பாடுகளை முழுமையாகக் கைவிட்டு அரசாங்கத்தின் பங்காளிக்கட்சியாக மாறிவிட்டது. இதுவரை கால பிரக்ஞைபூர்வ அரசியலுக்குப் பதிலாக சுகபோக அரசியலைக் கட்டி வளர்க்க முயற்சிக்கின்றது. இதனால் எமது அரசியல் வாழ்க்கை என்பது தியாகம் நிறைந்த, வலி நிறைந்த வாழ்க்கை என்ற மரபை மாற்றி பொருள் சேர்க்கும் சுகபோக வாழ்க்கை என்பதை நோக்கி நகர்கின்றது.

ஆனாலும் பிரக்ஞைபூர்வ சக்திகள் இந்நிலைமைகளுக்குப் பின்னால் இழுபட்டுச் செல்ல முடியாது. எமக்கு எமது மக்களின் விடுதலை முக்கியம், போராளிகளின் கனவுகள் முக்கியம். எப்பாடுபட்டாவது தற்போதைய நிலைமையை நாம் மாற்றியாகவேண்டும். எமக்குப் பல சவால்களும், வாய்ப்புகளும் உள்ளன. அவற்றை அடையாளம் கண்டு முன்னேறிச் செல்ல முயற்சிக்க வேண்டும்.

(தொடரும்)

■ நேர்கண்டவர் : செல்வநாயகம் - ரவிசாந்

# இலங்கையில் இணக்க அரசியல் தோல்வியடைந்துள்ளது



## சமூக ஆய்வாளர் நிலாந்தனுடன் ஒரு நேர்காணல்

**கேள்வி:- ஆட்சி மாற்றத்திற்குப் பின்னரான தென்னிலங்கை அரசியல் சூழலையும் தமிழர் அரசியல் சூழலையும் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

பதில்:- தென்னிலங்கை அரசியல் சூழல் ஸ்திரமற்றதாக மாறியிருக்கின்றது. அதேநேரம் அது அதிகம் வெளிச் சக்திகளுக்குத் திறந்து விடப்பட்டதாகவும் மாறியிருக்கின்றது. ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்படும் 2009 மே மாதத்திற்கு முன் வரையிலும் இலங்கையில் தமிழ் அரசியல் ஒரு வகையில் மூடப்பட்டதாகவிருந்தது. அதாவது வெளிச்சக்திகள் எளிதில் கையாள முடியாததொன்றாகவும், வெளிச்சக்திகளால் கையாளப்பட முடியாததொன்றாகவும் வெளிச்சக்திகளின் தலையீடுகளுக்கு வரையறுக்கப்பட்ட ஒரு பரப்பாகவும் காணப்பட்டது. 2009 மே மாதத்திற்குப் பின்னர் அது முற்றுமுழுதாக வெளிச்சக்திகளிற்கென்றே திறக்கப்பட்டு விட்டது. ஆனாலும், வெளிச்சக்திகள் நினைத்தபடி நிலைமையைக் கையாள முடியாத கள யதார்த்தம் அங்கே காணப்படுகின்றது. எவ்வாறெனில் சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் ராஜபக்ஷ குடும்பம் என்பது நவீன துட்டகைமுனுவைப் போன்றவர்கள். வெல்ல முடியாது எனக் கருதப்பட்ட எதிரியை அவர்கள் வென்று கொடுத்திருக்கிறார்கள். அந்த வகையில் பார்த்தால் சிங்கள மக்கள் ராஜபக்ஷ குடும்பத்தை எப்போதுமே மறக்கப் போவது கிடையாது.

நடந்து முடிந்த தேர்தலைப் பொறுத்தவரையிலும் ராஜபக்ஷக்கள் பலமான நிலையிலேயே காணப்படுகின்றார்கள். அவர்களைத் தோற்கடித்தது தமிழ்மக்களும், முஸ்லீம்களும், மலையகத்தமிழர்களும் தான். இதன்படி பெரும்பான்மையினரால் தெரிவு செய்யப்பட்டதொரு ஜனாதிபதியை சிறுபான்மையினர் தோற்கடித்த நிகழ்ச்சிதான் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல். ராஜபக்ஷவுக்கு தற்பொழுதும் சிங்களக் கடும் போக்காளர்களின் மத்தியில் ஆதரவுத்தளம் உடையாமலேயிருக்கின்றது. அதேநேரம் தமிழ்மக்களைப் பொறுத்தவரையிலும் அவர்கள் ராஜபக்ஷக்களுக்கு எதிரான மனநிலையோடு தான் தொடர்ந்தும் காணப்படுகின்றார்கள். ஏனெனில் இதற்கு முன்னிருந்த சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களிற்கு எதிராகப் படை நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறான படை நடவடிக்கைகளின்போது தமிழ் மக்கள் இடம்பெயரவோ, சேதங்களிற்குள்ளாகவோ, தோற்கடிக்கப்படவோ கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் பிந்திய நிலைமைகளில் தமிழ் மக்கள் தமக்குத் துன்பத்தை விளைவித்த சிங்களத் தலைமைகளிற்கெதிராக யுத்தகாலங்களில் வெற்றிகளைப் பெற்றிருக்கின்றார்கள். இதன் மூலம் குறிப்பிட்ட அரசாங்கத்தை யுத்த களத்தில் மட்டுமல்ல தேர்தலிலும் தோற்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளார்கள். முன்னர் ஆட்சியில் இருந்த அனைத்துச் சிங்கள ஆட்சியாளர்களையும் தமிழ்மக்கள் தரப்பிலிருந்த ஆயுதப் போராட்டம் காரணமாக யுத்தகளங்களில் எதிர்கொண்டு வெற்றிகொள்ளவோ, முறியடிக்கவோ கூடிய சூழ்நிலையிருந்தது.

ஆனால், ராஜபக்ஷக்களைப் பொறுத்தவரை அவர்கள் தமிழ்மக்கள் தரப்பில் ஆயுத எதிர்ப்பு என்று காணப்பட்ட தரப்பையே இல்லாமல் செய்து விட்டார்கள். ராஜபக்ஷ குடும்பத்துக்கெதிரான கோபம் என்பது தமிழ்மக்கள் தரப்பின் மீது பல தசாப்த காலம் நீடிக்கும். சில வேளைகளில் அவர் மீதுள்ள கோபம் தலைமுறைகள் தோறும் நீடிக்கும். இந்த நிலையில் தமிழ்மக்கள் எப்போதும் ராஜபக்ஷக்களிற்கு எதிராகத் தான் சிந்திப்பார்கள், வாக்களிப்பார்கள். சிங்களக் கடும் போக்காளர்கள் எப்பொழுதும் ராஜபக்ஷக்களிற்கு ஆதரவாகவே செயற்படுவார்கள். இந்த இரு மாறா நிலைமைகளும் இலங்கைத் தீவின் அரசியலில் செல்வாக்குச் செலுத்தப்போகின்றன.

இந்த நிலையில் ராஜபக்ஷவுக்கிருக்கும் சிங்களக் கடும் போக்காளர்கள் மத்தியிலான ஆதரவுத் தளத்தை உடைப்பது, தமிழ்மக்கள் மத்தியிலிருக்கக் கூடிய கோபத்தைத் தணிப்பது. இந்த விடயங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தாத வரையில் இலங்கைத்தீவின் அரசியலில் மாற்றத்தைக் கொண்டு வருவது கடினம்.

மாற்றத்தை உருவாக்கித் தத்தெடுத்த மேற்கத்தைய தரப்புகள் தற்போது கடும் போக்காளர்கள் ஒரு தரப்பிலும் எழுச்சி பெறக்கூடாது என்று சிந்திப்பதாகத் தெரிகின்றது. சிங்களத்தரப்பைப் பொறுத்தவரை ராஜபக்ஷாக்களின் கட்சியை உடைப்பது ஆதரவாளர்களைக் கழட்டுவது, உள்ளூரிலேயே அவருக்குக் கவசமாகவிருக்கக் கூடியவர்களை விலைக்கு வாங்குவது இது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் போர்க்குற்றம் தொடர்பாக அவருடைய நெருங்கிய வட்டத்திலுள்ளவர்களின் இரட்டைப் பிரஜாவுரிமையைப் பயன்படுத்தி அவர்கள் மீது அச்சுறுத்தல்களைக் கொண்டு வருவது இது போன்ற நடவடிக்கைகள் மூலம் சிங்களக் கடும் போக்காளர்களுக்கு அவர் தலைமை தாங்கும் நிலைமையிலிருந்து அவரை பின்னுக்குக் கொண்டு செல்லும் செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடுகின்றார்கள்.

அதேவேளை தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலும் விடுதலைப்புலிகள் மீதான தடையைத் தொடர்ந்தும் ஐரோப்பிய நாடுகளில் நீடிக்கிறார்கள். புலிகளிற்கெதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. கடும் போக்காளர்களை ஏதாவதொரு விதத்தில் தணியச் செய்யும் வகையிலான செயற்பாடுகள் புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் உள்நாட்டிலும் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ் மக்களது நலன்களில் எவ்வித அக்கறையுமில்லாத தமிழ் மிதவாதிகளாலேயே தமிழ் மக்களின் அரசியல் முன்னெடுக்கப்படுவதை மேற்கத்தைய நாடுகளும் இந்தியாவும் விரும்புகின்றன.

தமிழ் மக்கள் மத்தியில் ராஜபக்ஷ குடும்பத்துக்கெதிரான மாறாக்கோபம் காணப்படுகின்றது. அதே நேரம் சிங்களக் கடும் போக்காளர்கள் மத்தியில் ராஜபக்ஷ மீதான மாறாத அனுதாபம் காணப்படுகின்றது. இந்த இரண்டுக்குமிடையில் தான் இலங்கைத் தீவின் அரசியல் இருக்கப் போகின்றது.

**கேள்வி:- ஆட்சி மாற்றத்திற்கு முன்னர் தமிழர் அரசியல் சூழல் பலவீனமாக இருந்தபோதும் சர்வதேச ரீதியான புறச்சூழல் மட்டும் சாதகமாக இருந்தது. தற்போது அந்த புறச்சூழலும் இல்லாத நிலையில் தமிழ் அரசியலை எவ்வாறு முன்நோக்கிக் கொண்டு செல்வது?**

பதில்:- ஆட்சி மாற்றத்திற்கு முன்னரும் தமிழ்மக்களின் அரசியல் பலவீனமாகவிருந்தது என்று கூறமுடியாது. ஏனெனில் உள்நாட்டில் தமிழ் மக்களின் அரசியல் தேக்க நிலையிலிருந்தது உண்மை. ஆனால், அனைத்துலகத் தரப்பில் தமிழர் அரசியல் பலமாகவிருந்தது. பேசுபொருளாகவிருந்தது. தமிழ்மக்களிற்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள் பெருமளவில் வெளியில் கொண்டு வரப்பட்டன. அதுமட்டுமன்றி அவை பற்றியெல்லாம் ஆவணப்படுத்தப்பட்டன. இதனை அவர்கள் தமிழ் மக்களுக்காகச் செய்யவில்லை. ஆட்சி மாற்றத்திற்காகச் செய்தார்கள். ஏற்கனவே ஆட்சியிலிருந்த அரசாங்கத்திற்கு அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்காக அவர்கள் செய்தார்கள். அவர்கள், தங்களுடைய நோக்கு நிலையில் நின்று செய்தாலும் தமிழ் மக்களுக்குச் சாதகமானதொரு புறச்சூழல் காணப்பட்டது. ஆட்சி மாற்றத்திற்கு முன்னர் தமிழ் மக்களுக்குச் சாதகமான சூழ்நிலைகள் நிலவினாலும் ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் தமிழ் மக்களுக்குச் சாதகமான விடயங்களில் தளம்பல் நிலை காணப்படுகின்றது. தமிழ் மக்களின் வெளிப் பேரம் பேசும் சக்தி ஒப்பீட்டளவில் குறைந்திருக்கின்றது.


இருந்தாலும் அதனை முழுமையாகக் குறைந்து விட்டது எனக் கருதமுடியாது. ஏனெனில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்களையும் இணைத்துக் கொள்ளாமல் பொது எதிரணி வெற்றிபெற முடியாது. வெளிச்சக்திகளின் ஆதரவையும் பெறுகின்ற ஒரு கூட்டரசாங்கம் தான் இதில் வெற்றிபெற முடியும். ராஜபக்ஷ தற்போதும் பலமாகவேயிருக்கின்றார். நடந்து முடிந்த அவருக்குச் சார்பான மூன்று கூட்டங்களிலும் இதுதான் வெளிக்கொணரப்பட்டுள்ளது. ஆகவே ராஜபக்ஷக்களை இனியும் தோற்கடிக்க முடியாது.

இந்தச் சூழ் நிலையில் இனிவரும் காலங்களிலும் மகிந்த ராஜபக்ஷவுக்கெதிராகத் தமிழ் மக்களைப் பயன்படுத்த வேண்டிய தேவை மேற்கு நாடுகளிற்கும் இந்தியாவிற்கும் இருக்கின்றது.

இலங்கைத் தீவிலே தற்போது இரு மாறா அம்சங்கள் காணப்படுகின்றன. ஒன்று சிங்களக்கடும் போக்காளர்கள் எப்போதும் மகிந்தவிற்கு ஆதரவாகவே சிந்திப்பார்கள். தமிழ் மக்கள் பெரும்பாலும் மகிந்தருக்கு எதிராகவே

“

தமிழ் மக்கள்
யில் ராஜபக்ஷ
பத்துக்கெதிரான
கோபம் கா
கின்றது. அதே
சிங்களக் கடும்
காளர்கள் மத்
ராஜபக்ஷ
மாறாத அனு
காணப்படு கி
இந்த இரண
மிடையில் தான்
கைத் தீவின் அ
இருக்கப் போகி



சிந்திப்பார்கள். தமிழ் மக்கள் மகிந்தருக்கு எதிராகச் சிந்திப்பார்கள் என்கிற மாறாக் காரணியை வைத்துக்கொண்டு மேற்குலக நாடுகளும் இந்தியாவும் எப்போதும் தமிழ்மக்களை மகிந்தருக்கு எதிராகப் பயன்படுத்த முடியும் என நம்புகின்றது. ஆனால், அவ்வாறில்லாமல் மகிந்தருக்கெதிராகவுள்ள தமிழ் மக்களின் கோபத்தைத் தமிழ்த் தரப்பு சரியான வகையில் பயன்படுத்தவேண்டும். அதனையொரு பேரம் பேசும் சக்தியாக மாற்றவேண்டும். அவ்வாறு செயற்பட்டால் மாத்திரம் தான் தமிழர் தரப்பு இந்தியாவுடனும், மேற்குலக நாடுகளுடனும் பேரம்பேசி தங்களுக்குக் கிடைக்கக் கூடிய உச்சபட்ச தீர்வினைப்பெறலாம்.

இதற்கு மாறாகத் தான் கடந்த ஆறு ஆண்டு காலங்கள் கடந்து சென்றிருக்கின்றன. தமிழ்மக்களின் கோபம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. இதற்குத் தமிழ்த் தரப்பிலுள்ளவர்களே பொறுப்பாளிகள்.

கேள்வி:- இந்தியாவும், அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமும் தாம் உருவாக்கிய ஆட்சிமாற்றத்தைப் பாதுகாப்பதிலேயே அக்கறையாக உள்ளன. தமிழ் அரசியலின் எந்த முன்னெடுப்பையும் சகித்துக் கொள்ளாத போக்கேயுள்ளது. இதற்கு எவ்வாறு முகம் கொடுப்பது?

பதில்:- ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் இலங்கைத்தீவில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி விட்டோமென நம்புகிறார்கள். ஆனால் முன்னிருந்த நிலைமையை விடவும் தற்போது ஸ்திரத்தன்மையற்ற நிலைஏற்பட்டிருக்கின்றது என்பதே உண்மை. ஆனாலும் அது மேற்குக்குச் சாதகமான வலுச்சமநிலையை ஏற்படுத்தக் கூடிய தளம்பல் நிலையில் காணப்படுகின்றது.

இந்த நிலையில் இந்தத் தளம்பல் நிலையைப் பயன்படுத்தி மேற்குக்கும், இந்தியாவுக்கும் சார்பான வலுச் சமநிலையை உருவாக்குவதற்கு அவர்கள் விரும்புகின்றனர். இந்த வலுச்சமநிலையைக் குழப்பும் வகையில் தமிழ்மக்கள் எதுவும் செய்யக் கூடாது என அவர்கள் எண்ணுகின்றனர். இதற்காகத்தான் அவர்கள் தமிழ்மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் புலிகள் மீதான தடையை நீடிக்க வைக்கின்றனர். அத்துடன் முன்னிருந்த இறுக்கமான சில நடைமுறைகளைச் செயற்படுத்துவதன் மூலம் தமிழ்மக்கள் மத்தியில் தீவிரமான சக்திகள் எழுச்சி பெறக்கூடாது என்பதில் கவனம் செலுத்துகின்றார்கள். அதே வேளை உள்நாட்டிலும் கூட தீவிரமான சக்திகளைத் தலையெடுக்க விடாது மிதவாதிகளிடமே அரசியல் காணப்பட வேண்டுமென்பதில் குறியாகச் செயற்படுவதாகச் தெரிகிறது.

இந்த நிலைமையில் அவர்கள் ஆட்சி மாற்றத்தின் பங்காளிகளாகத் தமிழ்மக்களைத் தொடர்ந்தும் வைத்திருக்கவே விரும்புவர். இந்தச் சூழ்நிலையிலும் தமிழர் தரப்பு செய்ய வேண்டியது என்னவெனில் அவர்கள் எங்களை ஆட்சி மாற்றத்தின் பங்காளிகளாகத் தொடர்ந்தும் வைத்திருக்க விரும்புகின்றனர் என்கிற உண்மையைப் புரிந்து கொண்டு தமிழ் மக்கள் தங்களது பேரம் பேசும் சக்தியை உணர்ந்து செயற்படவேண்டும். பேரம்பேசும் சக்தியை வளர்த்துக் கொள்வதற்கான உபாயத்தைக் கண்டு பிடிக்க வேண்டும்.

கேள்வி:- இதுவரை காலமும் ஈ.பி.டி.பி செய்த இணக்க அரசியலைத் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்ய ஆரம்பித்துள்ளது. இந்த இணக்க அரசியல் சாத்தியமானது எனக் கருதுகிறீர்களா?

பதில் : இலங்கைத் தீவின் அரசாட்சியைப் பொறுத்தவரையில் இணக்க அரசியல் சாத்தியமாகாது. தமிழ்மக்களுடன் மட்டுமல்ல முஸ்லீம்களுடனும் சரி வராது. மலையகத் தமிழர்களுடனும் சரிவராது. முஸ்லிம்களின் இணக்க அரசியல் தோல்வியுற்றதன் விளைவுதான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லீம்கள் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்களித் தது. மலையகத்தில் இணக்க அரசியல் தோல்வியுற்றதன் விளைவுதான் கொஸ்லந்த மண்சரிவின் பின்னர் மக்கள் நடுத்தெருவில் விடப்பட்டமை. மலையகத்தில் நடந்த கோரமான அந்த மண்சரிவு இணக்க அரசியலின் இயலாமையை கையாலாகாத்தனத்தை வெளிப்படுத்துதாக அமைந்திருந்தது. கையாலாகாத்தனம் நிரூபிக்கப்பட்டதன் விளைவாகத் தான் மலையக மக்கள் சற்றும் எதிர்பாராத வகையில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்களித்தார்கள். இந்த நிலையில் இணக்க அரசியல் வடக்கு கிழக்குத் தமிழ் பேசும் மக்களிடம் மாத்திரம்தான் செயலற்றுப் போனது என்றில்லை. இலங்கைத் தீவு முழுவதுமே இணக்க அரசியலுக்குச் சாதகமற்றதொரு சூழ்நிலையே காணப்படுகின்றது. ஏனெனில் சிங்கள பௌத்த மேலாதிக்கவாதமென்பது தனக்குப் புறத்தியானவர்களின் அச்சத்தின் மீதே எப்பொழுதும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இந்த அச்சம் துட்டகைமுனு காலை மடக்கிக் கொண்டு உறங்கியதாகக் கூறப்படும் கதையிலிருந்து ஆரம்பிக்கின்றது. ஒரு பக்கம் தமிழர் மறுபக்கம் கடல். தான் எவ்வாறு காலை நீட்டி உறங்க முடியும் என்று கேட்டானாம். அந்தக் காலை மடக்கிக் கொண்டு உறங்கும் அரசியல் இன்றுவரை காணப்படுகிறது. குரோன்டிக்கொண்டு படுக்கின்ற மனநிலை இப்பொழுதும் காணப்படுகிறது. அது வெளியாருக்கு அஞ்சுகிறது. இந்த அச்சத்தின் பிரதான காரணம் இந்தியாதான். தனக்கு அருகிலிருக்கும் ஒரு பெரிய பனிப்பாறை எந்த வேளையிலும் உருகித் தம்மை மூழ்கடித்து விடும் என்ற அச்சத்தில் சிங்கள மக்கள் வாழ்கின்றார்கள் என சேர்.ஐவர் ஜெனின்ஸ் கூறியுள்ளார். அதேபோலத்தான் மற்றொரு மேற்கத்தைய புலமையாளர் இலங்கைத் தீவில் சிறுபான்மையினர், பெரும்பான்மையினருக்குரிய மனச்சிக்கலுடனும், பெரும்பான்மையினர் சிறுபான்மையினருக்குரிய உளச் சிக்கலுடனும் வாழ்ந்து வருகின்றனர் என்றார்.

இது எவ்வாறு உருவாகிறது என்றால் சிங்கள மக்கள் தமிழர்களை இந்தியாவுடன் சேர்த்துப் பார்க்கிறார்கள். இந்தியாவின் ஒரு பகுதிதான் தமிழ் மக்கள் என்கிற எண்ணத் தோற்றப்பாடு காரணமாக அதற்காக அச்சப்படுகிறார்கள். அந்தப் பயம்தான் அவர்களைப் பிறர் மீதான அச்சமாக மாற்றுகிறது. சிங்கள, பௌத்த மேலாதிக்கவாதமென்பது எப்பொழுதுமே இந்தச் சிறிய தீவை தன்னுடையதாக எண்ணுகிறது. இதனால் அது மற்றைய அனைத்தையும் எதிரியாகப் பார்க்கிறது. முன்னர் தமிழ் - சிங்களத் தரப்பினரிடையே ஆயுத ரீதியான மோதல்கள் இருந்து வந்தன. அதிலே தமிழ் மக்களின் ஆயுதம் ஏந்திய போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் எதிரியாக முஸ்லீம்களை அவர்கள் கருதினார்கள். தமிழ் மக்கள் தங்களுக்குள்ளேயே ஆயுதம் ஏந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வந்த காலப்பகுதியில் முஸ்லீம்கள் தென்னிலங்கையில் பெருமளவு நகரங்களில் வர்த்தக ரீதியாக ஆதிக்கம் செலுத்தியதொரு நிலை காணப்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில் முதலில் நிலத்தை மீட்பதற்காகத் தமிழ் மக்களைத் தோற்கடித்தார்கள்.

பின்னர் சந்தை வாய்ப்பை மீட்பதற்கு போரை முஸ்லீம்களுக்கு எதிராக நடாத்தினார்கள். மொத்தத்திலேயே சிங்கள பௌத்த மேலாதிக்க வாதமென்பது எப்பொழுதும் வெளியாருக்கு அஞ்சுகிற போக்கே காணப்படுகிறது. அந்த அச்சத்தின் மீதே சிங்கள பௌத்த மேலாதிக்க வாதம் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.


இவ்வாறான சூழ்நிலையில் இந்த அரச கட்டமைப்பை வைத்துக் கொண்டு இணக்க அரசியல் செய்ய முடியாது. இணக்க அரசியலென்பது இரு தரப்பும் தங்களது பலங்களை பரஸ்பரம் ஒப்புக் கொள்ள வேண்டும். பலவீனங்களை ஒப்புக்கொள்ளவேண்டும். இணக்கமென்பது விட்டுக் கொடுத்தல். எனவே விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டும். தோற்கடிக்கப்பட்ட தரப்பு அல்லது சிறிய தரப்பு விட்டுக் கொடுக்க வேண்டும் என்றில்லை. இதிலே வென்ற தரப்பு தோற்கடிக்கப்பட்ட தரப்பு, சிறிய தரப்பு , பெரிய தரப்பு என்பதை விடவும் உயர்வான இலட்சியத்துக்காக இரு தரப்பும் விட்டுக் கொடுக்க வேண்டியது அவசியம்.

இலங்கைத் தீவில் ஆயுதமோதல் முடிவுக்கு வந்து ஆறு ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட வென்றவர்களும் தோற்றவர்களும் பிளவுண்டு தான் காணப்படுகிறார்கள். ஆகவே நான் பெரியவன் நீ சிறியவன் என்ற பேதம் பார்த்தால் அங்கே இணக்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அரசியலில் பலம், பலவீனம் என்று வரும்போது அது சரணாகதி அரசியல் தான். இலங்கைத் தீவின் அரசியல் கட்டமைப்பு என்பது இணக்க அரசியலுக்கு ஏற்றதாகத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே இணக்க அரசியல் என்பது வடக்குக் கிழக்கில் மட்டுமல்ல முஸ்லீம்கள் மத்தியிலும் தோற்றுவிட்டது. மலையக மக்கள் மத்தி யிலும் தோற்றுவிட்டது. ஆகவே இணக்க அரசியல் என்ற சொல்லுக்குப் பதிலாக நாம் சரணாகதி

(தொடரும்)

“

சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் ராஜபக்ஷ குடும்பம் என்பது நவீன துட்டகைமுனு வைப் போன்றவர்கள். வெல்ல முடியாது எனக் கருதப்பட்ட எதிரியை அவர்கள் வென்று கொடுத்திருக்கிறார்கள். அந்த வகையில் பார்த்தால் சிங்கள மக்கள் ராஜபக்ஷ குடும்பத்தை எப்போதுமே மறக்கப் போவது கிடையாது.



இலங்கைத் தீவிலே தற்போது இரு மாறா அம்சங்கள் காணப்படுகின்றன. ஒன்று சிங்களக் கடும் போக்காளர்கள் எப்போதும் மகிந்தவிற்கு ஆதரவாகவே சிந்திப்பார்கள். தமிழ் மக்கள் பெரும்பாலும் மகிந்தருக்கு எதிராகவே சிந்திப்பார்கள். தமிழ் மக்கள் மகிந்தருக்கு எதிராகச் சிந்திப்பார்கள் என்கிற மாறாக் காரணியை வைத்துக்கொண்டு மேற்குலக நாடுகளும் இந்தியாவும் எப்போதும் தமிழ்மக்களை மகிந்தருக்கு எதிராகப் பயன்படுத்த முடியும் என நம்புகின்றது.

“


ழ் மக்கள் மத்தி
ராஜபக்ஷ குடும்
க்கெதிரான மாறாக்
பம் காணப்படு
றது. அதே நேரம்
ளக் கடும் போக்
ர்கள் மத்தியில்
பக்ஷ மீதான
ாத அனுதாபம்
னப்படு கின்றது.
த இரண்டுக்கு
டயில் தான் இலங்
த் தீவின் அரசியல்
க்கப் போகின்றது.

# 19 நிறைவேற்று அதிகாரம் நாட்டை முற்று முழுதாக சீர்குலைத்தது

நன்றி - ராவய
தொகுப்பு - நிமல் அபயசிங்க
இதுநம் தேசத்திற்காக தமிழில் - நட்டாஷா ராஜ்குமார்

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் பொது வேட்பாளராகிய மைத்திரிபால சிறிசேன மற்றும் அவரிற்கு ஆதரவு அளித்த அனைத்துத் தரப்பினரும் நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறையினை முற்றாக ஒழிப்பதனையே தங்களுடைய பிரதான உறுதிமொழியாகக் கொண்டிருந்தனர். வரையறுக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் மற்றும் அரசியல் அமைப்பு திருத்தங்கள் உள்ளடங்கிய 19ம் திருத்தச் சட்டம் தொடர்பாக சிங்கள கல்விமான் களினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களே தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

## நிறைவேற்று அதிகாரம் காரணமாக நாடு சீர்குலைந்துள்ளது – பேராசிரியர் லியனகே அமரகீர்த்தி



நிறைவேற்று அதிகாரம் இந்நாட்டை முற்றும் முழுதாக சீர்குலைத்துவிட்டது என்பதே என்னுடைய கருத்தாகும். அண்மைய காலத்தில் நிறைவேற்று அதிகாரம் மிகவும் மோசமான முறையில் பயன்படுத்தப்பட்டமைக்குப் பல்வேறுப்பட்ட உதாரணங்களைச் சுட்டிக்காட்டலாம். எனவே தை மாதம் 8ம் திகதியளவில் இந்நாட்டிலுள்ள மக்கள் ஏதேனுமொரு மாற்றத்தை அல்லது நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிற்கு வந்துவிட்டனர். இதன் காரணமாக மக்கள் எவ்வித வேறுபாடுகளுமின்றி அரசியலமைப்பு மாற்றத்திற்கு உடன்படுகின்றனர்.

இவ்வாறானதோர் மாற்றம் அரசியல் ஸ்திரத்தன்மையினை குறைக்குமென ஒரு சிலரால் சுட்டிக்காட்டப்படுகிறது. இனவாதிகள் சிங்களமற்ற பிறிதொருவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டு விடுவாரோ என்ற அச்சத்தில் இருந்தனர். சிங்கள பௌத்தனாக இருந்த போதிலும் லிபரல் வாதத்தை ஆதரிக்கும் ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுவிடுவாரோ என்ற அச்சம் பிரிதொரு பிரிவிடம் காணப்பட்டது. எது எவ்வாறாயினும் சம்பிரதாய பூர்வமான அரசியல் யாப்பு முறையினை மாற்றியமைத்து அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்கக் கூடிய அரசியல் அமைப்பு முறையினை முன் மொழி வதே காலத்தின் தேவையாக உள்ளது. முன்னைய யாப்பிலும் பல்வேறுபட்டவர் கள் உள்வாங்கப்பட்ட போதிலும் அதிகார மானது முற்றும் முழுதாக ஒருவரிடமே குவிக்கப்பட்டிருந்தது. தனி நபர் ஒருவரின் வார்த்தைகள் மாத்திரமே செல்வாக்குச் செலுத்தியது.

ஆனால் இன்று ஜனநாயக ரீதியிலான சிறிய குழுக்களினாலும் பலம் பொருந்திய முடிவுகளை எட்டக்கூடிய வகையிலான அரசியல் யாப்பினை முன்மொழியும் மாற்றமே தேவையாக உள்ளது. நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறையினை மாத்திரமன்றி 17ம் திருத்தச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுக்களை நியமித்தலும் அவசியமாகின்றது. விசேடமாக அரச சேவையில் அரசியல் தலையீடுகளை இல்லாதொழிக்க இந்நியமனங்கள் முக்கியமானதாகின்றன. கடந்த காலங்களில் இலங்கை விமான சேவையில் கனிம எண்ணெய் ஸ்தாபனத்தில் பெயரளவிற்கு மாத்திரம் சேவையாற்றிய அரசியல் தலைமைகளிற்கு அர்ப்பணிப்புடன் கூடிய சேவையாற்றிய உயரிய வருமானம் ஈட்டியவர்களும் இருந்தார்கள் என்பது தற்பொழுது உறுதிசெய்யப்பட்டுள்ளது. அரச சேவையாளன் என்பது அரசாங்கத்தின் சேவையாளன் அல்ல.

ஜனாதிபதி தேர்தல் நிறைவடைந்த பின்னர் இந்நாட்டு அரசியலில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஜனாதிபதியும் பிரதமரும் ஒரே கட்சியினை பிரதிநிதித்துவப்படுத்தினாலும் அவர்களிடையே அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும் என இச்சீர்திருத்தத்தில் குறிப்பிடப்படவில்லை. மகிந்த ராஜபக்சவின் கீழ், ஒரு அரசியல் கட்சியின் கீழ் அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்கே இவர்கள் முயல்கின்றார்கள். எதிர்வரும் பொதுத்தேர்தலில் வலுவான எதிர்க் கட்சியொன்றை உருவாக்குவதற்கே இவர்கள் முற்றும் முழுதாக முயல்கின்றார் கள்.

இங்கே நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதிக்குப் பதிலாக நிறைவேற்று அதிகாரங்கொண்ட பிரதமர் ஒருவர் நியமிக்கப்படுவாரென எனக்கு தோன்றவில்லை. நிறைவேற்று அதிகாரங்கொண்ட பிரதமர் தொடர்பாக விவாதிக்கும் அதிகாரம் அமைச்சரவைக்கு உள்ளது. பல்வேறுப்பட்ட வழிகளில் பிரதமரிற்கு எதிராக நடவடிக்கையெடுக்கும் அதிகாரம் பாராளுமன்றிற்கு உள்ளது.

ஆனால், ஜனாதிபதி அவ்வாறான தொன்றல்ல. புதிய திருத்தச்சட்டத்தின் படிஇந்தியாவின் ஜனாதிபதி முறையினைக் காட்டிலும் பலம் பொருந்திய பிரதமர் ஒருவரினால் ஜனாதிபதியை வெறுமனே கைபொம் மையாக ஆட்டுவிக்க இயலாது. தைமாதம் எட்டாம் திகதி நடைபெற்ற மக்கள் போராட்டத்தில் பிரதானமாக இலஞ்ச ஊழல்கள் நிரம்பப்பெற்ற இந் நிறை வேற்று அதிகாரத்தை இல்லாதொழிக்க வேண்டுமென்றே கோரப்பட்டது. இது காட்டிக்கொடுக்காதிருக்க வேண்டிய சட்ட கோட்பாடாகும்.

## 19ம் திருத்தச் சட்டத்தில் 26ம் பந்தி வேண்டாம் - விஜயானந்த ஜயவீர



19ம் திருத்தச் சட்டத்திலுள்ள 26ம் பந்தியை முற்றும் முழுதாக நீக்க வேண்டும் என்பதுவே என்னுடைய கருத்தாகும். இது என்னுடைய பிரதான வாதமும் ஆகும். வானொலி மற்றும் தொலைக் காட்சி அனுமதிப்பத்திரங்களை தனியாருக்கு வழங்கிய பொழுதிலும் அவை பொதுச் சொத்துக்களாகும். அவற்றை அனைவராலும் பெற்றுக்கொள்ள இயலாது. அனுமதிப்பத்திர முறையின் கீழே இவை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். யார் வேண்டுமானலும் பத்திரிகையை தொடக்கி நடாத்தலாம். மக்களிற்குரிய பொது சொத்துக்களை இவர்கள் தங்கள் விருப்பத்தின் அடிப்படையில் உபயோகிப்பதற்கு ஒரு போதும் அனுமதிக்கப்படுவதில்லை.

தேர்தல் காலத்தில் நாம் குறித்த ஒருதரப்பினருக்கு மாத்திரம் வேலை செய்வோமென அவர்களால் கூறவியலாது. அவர்கள் பக்கச்சார்பற்ற முறையில் செய்திகளை வெளியிட வேண்டும். தனியாருக்கு வழங்கப்பட்ட போதிலும் இது பொது சேவை என்பதனாலே இதற்கான தனியான ஆணைக்குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. பத்திரிகைகளுக்கு அவ்வாறு இல்லை.

தேர்தல் காலங்களில் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டு ஏழு நாட்களிற்குள் இக்குறிப்பிட்ட இணைய அல்லது அச்சு ஊடக உரிமையாளர் அல்லது வெளியீட்டாளர் தான் விரும்பும் அபேட்சகருக்கு ஆதரவளித்தல் தேர்தல் விதிமுறைகளிற்கு அமைவாக இல்லாமையானது சுயாதீனமான தேர்தல் முறையினை விமர்சிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. இதன் காரணமாக மக்களின் பணத்தில் தங்கியிருக்கும் அரச ஊடக நிறுவனங்களிற்கும் பக்கச்சார்பான முறையில் செயற்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இணைய ஊடகங்களிற்கு இவ்வாறு சந்தாப்பம் வழங்குவது அசாதாரணச் செயலாகும் ஏனெனில் அவர்கள் பொதுச் சொத்தாகிய ஆகாய பரப்பினையே உபயோகிக்கின்றார்கள். இதன் காரணமாக நாங்கள் பொது நலனின் பொருட்டு செயற்படுவதற்கு கடமைப்பட்டுள்ளோம். அமெரிக்காவில் இணைய ஊடகங்களிற்காகவும்தனியானதொரு ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது.

## சட்டமூலங்களே உரிமைகளை உறுதிப்படுத்தப்படுகின்றது – பேராசிரியர் ரொஹான் சமரஜீவ


19ம் திருத்தச்சட்டமானது தேர்தல்கள் சட்ட மூலத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் மிகவும் கரிசனைகொண்டுள்ளனர் என்பது எனக்கு விளங்கினாலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் ஒரு சில கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. தேர்தல் கால உறுதி மொழிகளின் பொழுது மக்களது கருதுக் கணிப்பின்றி தேர்தல்கள் முறைமையில் மாற்றங்கள் மேற்கொள்வதாகவே குறிப்பிடப்பட்டது. அப்படியாயின் மக்கள் கருத்துக்கணிப்பின்றி ஜனாதிபதியையும் பதவி நீக்க இயலாது. 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட வேலைகளைச் செய்யலாம். ஜனாதிபதி தேர்தல்களின் மூலமாக தெரிவுசெய்யப்பட்ட நபராவார். எனவே அவரை பதவி நீக்கம் செய்யும் பொழுது மக்களின் கருத்துக்கணிப்பு அத்தியாவசியமாகின்றது.

ஜனாதிபதியொருவரை நியமிப்பதற்கு அதிக செலவுடன் கூடிய ஜனாதிபதி தேர்தல்கள் தேவையில்லை என்பதுவே என்னுடைய கருத்தாகும். குறைந்த செலவில் " இலெக்டோரல் கொலேஜஸ்" (Electoral Collages) தேர்தல்கள் முறைமையின் கீழ் மாகாணங்களிற்கும் பாராளுமன்றிற்கும் தெரிவுசெய்யப்படுகின்ற உறுப்பினர்களைக் கொண்டு ஜனாதிபதியைத் தேர்வு செய்வது சிறப்பான முறை என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். மக்கள் கருத்துக்கணிப்பின்றி இதனை நடைமுறைப்படுத்த இயலாது. எங்கள் மனதுள் உள்ள முழுமையான மாற்றங்களை இந்நேரத்தில் எம்மால் மேற்கொள்ள இயலாது ஏனெனில் இத்திருத்தச் சட்டத்தில் சட்ட வரைமுறைகள் உள்ளன. பாராளுமன்றினை உரிய காலத்தில் கலைத்தல் என்பன மிகவும் வரவேற்கதத்தக்க ஏற்பாடுகளாகும்.

(23 ஆம் பக்கம் பார்க்க)

# கிராமிய உழைப்பாளர்களுக்கு தலைவர்கள் இல்லை!

**கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் இன்பம்**





கிராமிய உழைப்பாளர்களான நாங்கள் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள், ஒரே வகையான தொழில்களைச் செய்கின்றவர்கள். ஆனாலும் எங்களுக்குத் தலைவர்களில்லை. ஆசிரியர்கள், வர்த்தகர்கள், மீனவர்கள் எனப் பல்வேறு பிரிவினர்களுக்கும் அவர்களின் பிரச்சினைகளை உரிய அரங்குகளில் ஒலிக்கத் தலைவர்கள் இருக்கின்றனர். ஆனால் எமக்கு மட்டும் தலைவர்கள் இல்லை. இதனால் எவரும் எம்மைப் பயன்படுத்தக் கூடியவர்களாக உள்ளனர். கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் குறிப்பிட்டார். யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் கிராமிய உழைப்பாளர்களுக்கென இடம்பெற்ற தலைமைத்துவ பயிற்சியின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கிராமிய உழைப்பாளர்களாக உள்ளவர்கள் ஒரே நேரத்தில் தமிழராகவும், ஒரே சமூகத்தவராகவும் உள்ளனர். இந்த கிராமிய உழைப்பாளர்கள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தவர்களாக உள்ளனர் என்பதும் இங்கு முக்கியம். இங்கு விவசாயப் பிரதேசத்தில் கூலிகளாக உள்ளவர்களையே நாம் கிராமிய உழைப்பாளர்கள் என்கின்றோம். இதற்குக் கூலி விவசாயிகள், வறிய விவசாயிகள், மேசன் கூலிகள், கல் உடைப்பவர்கள், சிறு வியாபாரிகள், சிறிய மீன் வியாபாரிகள், அரிசி ஆலைத் தொழிலாளர்கள் வேறு உதிரித் தொழிலாளர்கள் என்போர் உள்ளடங்குகின்றனர்.

நான் முன்னரே கூறியது போல இவர்கள் அனைவரும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அதுவும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கும் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், இந்த நிலை திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. யாழ்.குடாநாட்டின் சைவ வேளாளரே இத்திட்டமிட்டு உருவாக்கலின் பின்னணியில் நின்றனர். அரசியல், பொருளாதாரம், கலாசாரம், நிர்வாகம், கல்வி, சித்தாந்தம், சடங்குகள், மதம் என்பவற்றின் மூலம் தமது கட்டுப்பாட்டின் கீழ் மேலெழாதவாறு வைத்திருந்தனர். இந்தத் தாக்கத்திலிருந்து முழுமையாக நாம் வெளிவராததினால் இன்று நாம் யார் யாரையோயெல்லாம் எதிர்பார்த்து நிற்கின்றோம். எமது சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பலர் கல்வி அறிவினை பெருமளவு பெற்ற போதும் எமக்கான அரசியல் தலைமை இன்றும் வெறுமையாக உள்ளது.

முன்னர் கூறியது போல நாம் வரலாற்று ரீதியாக நீண்டகாலம் ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்பட்டிருந்தோம். ஆரம்பத்தில் நாம் சந்தித்த ஒடுக்குமுறைகள் மனித குலமே வெட்கித் தலைகுனியும் அளவிற்கு மோசமானவை.

பொருளாதார ஒடுக்குமுறைக்கு அப்பால் தீண்டத்தகாதவர்களாக நாங்கள் கணிக்கப்பட்டமைதான் சகிக்க முடியாததாக இருந்தது.

ஒரே நேரத்தில் பொருளாதார ஒடுக்குமுறைக்கும் சித்தாந்த ஒடுக்குமுறைக்கும் நாம் உள்ளானோம். எமக்குச் சொந்தமாக நிலமிருக்கவில்லை. சைவ வேளாளரின் நிலத்திலேயே நாம் குடியிருந்தோம். அவர்கள் நிலங்களிலேயே கூலி உழைப்பையும் மேற்கொண்டோம். உற்பத்தி உறவு அடிப்படையிலான ஒடுக்குமுறை இருந்தது.

அதேவேளை சித்தாந்த ரீதியான ஒடுக்குமுறையாக தீண்டாமை இருந்தது. இந்த ஒடுக்குமுறைக்கெதிராக எம்மவர்கள் நீண்ட போராட்டங்களை நடாத்தினர். தீண்டாமைக்கெதிரான போராட்டம் அவற்றில் முக்கியமானதாக இருந்தது. இப்போராட்டங்களின் வெற்றிகள் தீண்டாமையைப் பொறுத்தவரை சில நெகிழ்ச்சிகளை உருவாக்கின. இலவசக் கல்வி, தாய்மொழிக் கல்வி என்பன எமது மேல் நிலையாக்கத்திற்கு உதவின.

தேசிய ஒடுக்குமுறை ஆரம்பத்தில் சைவ வேளாளரையே அதிகம் பாதித்தது. தனிச் சிங்களச் சட்டம், அரச வேலை வாய்ப்பில் பாரபட்சம், பல்கலைக்கழக அனுமதியில் பாரபட்சம் என்பன அவர்களையே அதிகம் பாதித்தன. சிங்களக் குடியேற்றத்திட்டங்கள் எல்லைப்புறங்களிலுள்ள வறிய விவசாயிகளைப் பாதித்தது என்பதும் உண்மைதான்.

1983 ஆம் ஆண்டின் பின்னர் தேசிய ஒடுக்குமுறை அழித்தொழிப்பு நடவடிக்கையாக மாறிய போது கிராமிய உழைப்பாளர்கள் அதிகம் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டது. ஒட்டுமொத்த தமிழின அழிப்பை சிங்கள அரசு செய்த போது இதற்கு முகம் கொடுப்பதற்காக சைவ வேளாளரும், உழைக்கும் மக்களும் பொதுப் புள்ளியில் இணைய வேண்டியேற்பட்டது.

இந்த மாற்றம் கிராமிய உழைப்பாளர்கள் சந்தித்த ஒடுக்குமுறைகளில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியதோடு கிராமிய உழைப்பாளர்கள் மேல் நிலையாக்கம் பெறுவதற்கான வழிகளையும் திறந்துவிட்டது. விடுதலைப் போராட்டத்தை கிராமிய உழைப்பாளர்களே தாங்கிப் பிடித்தனர். விடுதலை இயக்கத்தின் முக்கிய பொறுப்புகளும் அவர்களுக்குக் கிடைத்தன. கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றிலும் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டன. யாழ்ப்பாணத்தின் தலை சிறந்த பாடசாலைகளில் எமது பிள்ளைகளும் கல்வி கற்கக் கூடிய நிலை ஏற்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைந்தது. உள்ளூர் பொருளாதார வாய்ப்புகளும் எமக்குக் கிடைத்தன. வெளிநாட்டு வேலைவாய்ப்புகளும் பல முன்னேற்றங்களை உருவாக்கியது. அரசியல் பொருளாதாரம், நிர்வாகம், கலாசாரம், போன்ற தளங்களில் குறித்த சமூகம் முன்னேறுவதற்கான வாய்ப்பை கடந்த 30 வருடமாக இடம்பெற்ற ஆயுதப் போராட்டம் வழங்கியது. இந்த வாய்ப்புக்களை எமது மக்கள் போதியளவு பயன்படுத்தினார்கள் என்றும் கூறமுடியாது.



தற்போது ஆயுதப் போராட்டம் முடிவடைந்துவிட்டது. மீண்டும் தமிழ்த் தேசிய அரசியல் தொடர்ச்சியாக முன்னோக்கி நகர்த்தப்படும்போது சமூகத்தளங்களில் மாற்றங்களும் விடுதலையை வென்றெடுப்பதற்கான வாய்ப்புகளும் உருவாகலாம். வரலாற்று அனுபவங்களும் இதனை வெளிப்படுத்துகின்றன.

தற்போது பிற்போக்கு மிதவாத தலைமையே தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கின்றது. இதனால் தேசிய அரசியலை வென்றெடுக்கும் செயற்பாடுகளும் தேக்கமடைந்துள்ளன. எமது மக்களுக்கு எதிரான நிர்வாகச் செயற்பாடுகளும் ஒரு பக்கத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 30 வருடகாலமாக ஏற்பட்ட மாற்றங்களைப் பின்தள்ளி சமூக ஆதிக்க சக்திகள் தங்களுக்குச் சார்பான வகையில் அரசியல், பொருளாதாரம், நிர்வாகம், கலாசாரம் என்பவற்றைக் கட்டமைத்து வருகின்றனர். எம்மை திட்டமிட்டு புறக்கணிக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கின்றன. சிங்கள முதலீட்டாளர்களினதும், தொழிலாளர்களினது படையெடுப்பு எமக்கென இருந்த பொருளாதார வலுவை அழிப்பதோடு வேலையின்மைப் பிரச்சினையையும் உருவாக்கியுள்ளன. வட- கிழக்கில் தற்போது 89,000 விதவைகள் உள்ளனர். இவர்களில்பெரும்பாலானவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வசிப்பவர்கள். யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை சைவ வேளாளரைவிட எமது சமூகம்தான் எண்ணிக்கையில் அதிகம். ஆனாலும் எங்களிடம் தீர்மானிக்கும் அதிகாரம் எதுவுமில்லை.

*(23 ஆம் பக்கம பார்க்க)*



**ஒரே நேரத்தில் பொருளாதார ஒடுக்குமுறைக்கும் சித்தாந்த ஒடுக்குமுறைக்கும் நாம் உள்ளானோம். எமக்கு சொந்தமாக நிலமிருக்கவில்லை. சைவ வேளாளரின் நிலத்திலேயே நாம் குடியிருந்தோம். அவர்கள் நிலங்களிலேயே கூலி உழைப்பையும் மேற்கொண்டோம்.**

நேர்கண்டவர் :
அனுதர்ஷி லிங்கநாதன்

சீனா சார்ந்த ராஜபக்ஷவின் ஆட்சியை வீழ்த்தித் தான் விரும்பிய ஆட்சியொன்றைக் கொண்டுவர வேண்டுமென்பதே இந்தியாவுடைய ஒரேயொரு நோக்கம். புதிய ஆட்சியின் மூலம் இந்தியாவிற்கு இருக்கக் கூடிய பிரச்சினை தீர்க்கப் பட்டுவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவிற்கு எடுபிடியாக இருக்கின்ற ஒரு கட்சி.



# கூட்டமைப்புக்கும் ஈ.பி.டி.பிக்கும் வேறுபாடு இல்லை

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் ஒரு நேர்காணல்**

கேள்வி:- உள்ளக விசாரணை மூலம் நீதியான தீர்வு எட்டப்படுமா?

பதில்:- உள்ளக விசாரணையை தமிழ்த்தரப்புக்கள் முற்றுமுழுதாக நிராகரித்துவிட்டன. காரணம் இன்று இனப் பிரச்சினை விவகாரத்தில் இரண்டு தரப்புக்கள் உள்ளன. ஒன்று அரசாங்கத் தரப்பு மற்றயது தமிழ்த் தரப்பு, உள்நாட்டு யுத்தத்தை எடுத்துக் கொண்டாலும். அரசாங்கத் தரப்பு, விடுதலைப்புலிகள் அமைப்பு என இரண்டு தரப்பு இருந்தது. இருதரப்புக்கும் இடையில் இடம்பெற்ற யுத்தத்தில் அரசாங்கம் வெற்றி பெற்றது. கடந்த காலத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்த போராளிகள் பலர் எந்த விசாரணையும் இன்றி இலங்கை அரசாங்கத்தால் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அது சம்பந்தமான சாட்சியங்கள் ஏற்கனவே வெளியாகியுள்ளன. ஏனைய முன்னாள் போராளிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சிலருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது மற்றும் பலர் புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப்புலி அமைப்பிலிருந்த எத்தனையோ நபர்கள் எத்தனையோ வருடங்களாக 10 அல்லது 15 வருடங்களுக்கு முன் அவ்வியக்கத்தை விட்டு வெளியேறி விலகி இருந்தவர்களைக் கூட யுத்தத்தின் பின் இலங்கை அரசாங்கம் கைது செய்து வருடக்கணக்காகத் தடுப்பில் வைத்திருந்து பின் புனர்வாழ்வுக்கு அனுப்பி விடுவித்தது. இப்படிப்பட்ட சூழ் நிலையில் யுத்தத்தில் ஒரு தரப்புக்கு எதிராக வெற்றிகண்ட தரப்பு விசாரணையுடனும் விசாரணையின்றியும் தண்டனை வழங்கியுள்ளது. இச் சூழ்நிலையில் விசாரிக்கப்பட வேண்டிய தரப்பு அரச தரப்பாகும். அரச தரப்பு உள்ளக விசாரணையை நடத்துவது என்று கூறுவதானது எந்த அடிப்படையில் ஏற்றுக் கொள்வதென்பதே கேள்வியாகும்.

யுத்தம் நடைபெற்ற இறுதிப்பகுதியில் போர்க்குற்றங்கள் நிகழ்த்தியதாக அரச தரப்பிற்கு எதிராக மிகப் பெரிய குற்றச்சாட்டுக்கள் உள்ளன. தானே தன்னை விசாரித்து நீதி நியாயமான தீர்வு வழங்கும் என்று நாங்கள் கடைசிவரைக்கும் நம்பமுடியாது. எங்களைப் பொறுத்தவரை உள்ளக விசாரணை நடத்துவது சர்வதேச விசாரணைக்கு முரணானதாகத்தான் இருக்கும். தமிழ்த் தரப்பால் ஏற்றுக் கொள்ளக்கூடியது சர்வதேச விசாரணையே!

கேள்வி:- மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கத்தில் கடந்த அரசாங்கத்தில் காணப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்கின்றனவா?

பதில்:- நிச்சயமாகக் காணப்படுகின்றன. ஜனவரி 8 ஆம் திகதி புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் ராஜபக்ஷ அரசாங்கம் முன்னெடுத்த அத்தனை விடயங்களையும் இந்த அரசாங்கம் முன்னெடுத்துச் செல்கின்றது. காணிகள் பறிக்கப்படுகின்றன, நபர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். கடந்த காலத்தில் எந்தவித குற்றச்சாட்டும் இன்றிக் கைது செய்யப்பட்ட நபர்கள் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். காணாமல் போனோர் தொடர்பில் ஆக்கபூர்வமான எந்தவித அறிவித்தல்களும் செய்யப்படவில்லை. புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டு வெளியில் வந்த முன்னாள் போராளிகள் எந்தவித குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட முடியாத நிலையில் இருந்தாலும் கூட இலங்கை இராணுவத்தினரின் புலனாய்வுப்பிரிவினரால் அச்சுறுத்தப்படுகின்றனர். அவர்கள் வெளியிடங்களில் கதைக்க முடியாதவாறு எச்சரிக்கின்றனர். மேலும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இந்த அடிப்படையில் ஒரு கூட்டம் நடத்த முடியாத நிலை காணப்படுகின்றது. அங்கு இராணுவத்தின் புலனாய்வுப்பிரிவினர் ஒட்டுக் கேட்கிறார்கள். குடும்ப விழாக்களை நடத்துவதற்குக் கூட இராணுவத்தினரிடம் அனுமதி பெற வேண்டிய தேவை உள்ளது. எனவே என்ன அடிப்படையில் மாற்றம் நிகழ்ந்துள்ளது. பெயர்தான் மாற்றப்பட்டிருக்கே தவிர ஆட்சி மாறவில்லை.

கேள்வி:- தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழுத்தங்களைப் பிரயோகிக்க வில்லை? புதிய அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வு சாத்தியமா?

பதில்:- நாங்கள் தேர்தலுக்கு முன்னரே கூறினோம் தமிழ் மக்களுடைய வாக்குகள் வெறுமனே ராஜபக்ஷ என்ற பெயரில் இருப்பவரை வீழ்த்தி வேறொரு பெயரில் இருக்கும் ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்காகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சி செய்கின்றது என்று. இன்று புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்கள் கடந்த நிலையில் ஏமாற்றப்பட்ட மக்களுக்கு அப்பட்டமாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்திருக்கும்.

உண்மையிலேயே ராஜபக்ஷ என்ற பெயர்தான் மாற்றப்பட்டுள்ளதே தவிர ராஜபக்ஷ ஆட்சியில் நடந்த விடயங்கள் தான் இன்றும் நடைபெறுகின்றது. அதில் எந்த மாற்றமும் நிகழவில்லை.

அதுமட்டுமல்ல 19 ஆம் திருத்தம் 20 ஆம் திருத்தம் என அரசியலமைப்புத் திருத்தங்கள் எல்லாம் செயற்படுத்தப்படுகின்றன. ஆனால் அடிப்படைப்பிரச்சினையாக இருக்கக்கூடிய இனப்பிரச்சினை பற்றிப் பேசப்படவும் இல்லை. பேசுவதாக குறிப்பிடப்படவும் இல்லை. மாறாக 13 ஆம் திருத்தம் தான் தீர்வு என்றவாறாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் தங்களுடைய எஜமான்கள் விஷேடமாக இந்தியா போன்ற நாடுகள் விரும்பிய படிதான் செயற்பட வேண்டும் என்பதைப் பகிரங்கமாகவே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தியாவிற்கு சீனா சார்ந்த ராஜபக்ஷவின் ஆட்சியை வீழ்த்தித் தான் விரும்பிய ஆட்சியொன்றைக் கொண்டு வர வேண்டுமென்பதே இந்தியாவுடைய ஒரேயொரு நோக்கம். புதிய ஆட்சியின் மூலம் இந்தியாவிற்கு இருக்கக்கூடிய பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவிற்கு எடுபிடியாக இருக்கின்ற ஒரு கட்சி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவித அழுத்தங்களும் கொடுக்காமல் தமிழ் மக்களை ஏமாற்றி வருவதுதான் ஒரேயொரு வழி. இனியும் எதையும் கேட்கப் போவதும் இல்லை. அதற்காகத்தான் இன்றைக்கு இணக்க அரசியல் நோக்கத்தோடு பதவிகளைப் பெற்று எதிர்கட்சித்தலைவர், மாகாண அமைச்சர்கள் போன்ற பதவிகளைப் பெற்று சமதை அரசியலுக்கு மாறிப் போகின்ற ஒரு நிலைதான் காணப்படுகின்றது.

நடைமுறையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கும் ஈ.பி.டி.பி போன்ற அமைப்புக்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லாத நிலைமை. வரவர மக்களுக்குத் தெரியக் கூடியதாக இருக்கும்.

கேள்வி:- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமக்குத் தர வேண்டும் எனக் கேட்டிருப்பது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்:- அதில் என்ன பிழை இருக்கின்றது. தமிழ்த் தேசியம் என்ற உறுதியான கொள்கையுடன் இருப்பவர்களுக்குத்தான் தமிழ் மக்களை அடக்கு முறைக்கு உள்ளாக்கி இருக்கின்ற இலங்கை அரசாங்கத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவர் பதவி எடுப்பது ஒரு பிரச்சினையாக இருக்கும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கொடுத்தாலும் அதை ஏற்கப் போவதில்லை. அது அடிப்படைக் கொள்கைக்கு முரணான விடயம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசியத்தை முற்று முழுதாகக் கைவிட்டு விட்டது. 2009 இன் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை பேருக்குத்தான் பேசியதேயொழிய நடைமுறையில் ஈ.பி.டி.பியின் அதே அரசியற் செயற்பாடுகள் போல் தான் உள்ளது. ஈ.பி.டி. பியின் தலைவர்கள் எப்படி அமைச்சுப் பதவிக்காகச் செயற்பட்டார்களோ அதே போல் தான் கூட்டமைப்புச் செயற்பட வேண்டும். அது தான் ஒரே வழி. அந்த வகையில் சம்பந்தன் ஐயா தமிழ்த் தேசியத்தைக் கைவிட்ட நபர் என்ற ரீதியில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோருவதை ஒரு வகையில் ஏற்றுக் கொள்ளலாம். அதைத்தவிர வேறு வழியில்லை. அவரின் அரசியல் எதிர்காலம்' அவ்வாறுதான் இருக்கப் போகின்றது. அக்கட்சியின் அரசியல் எதிர்காலமும் அவ்வாறுதான் இருக்கப் போகின்றது.

(தொடரும்)

(நன்றி : தமிழ்த்தந்தி)

# அழிக்கப்பட்ட கிராமம்

## வலையிறவு

எஸ்.ஜெயானந்தமூர்த்தி

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் விமான நிலைய விஸ்தரிப்பு என்ற போர்வையில் திட்டமிட்ட முறையில் வலையிறவு கிராமம் முற்றாக அழிக்கப்பட்டும் புதூர், சேத்துக்குடா ஆகிய கிராமங்களின் சில பகுதிகளை அழித்தும் விமானப்படைத் தளம் அமைக்கப்பட்டு இன்று அது பெரும் விஸ்தீரணத்தைக் கொண்ட தளமாக இயங்கி வருகின்றது.

வலையிறவு, புதூர், சேத்துக்குடா ஆகிய கிராமங்கள் மட்டக்களப்பு நகரிலிருந்து மேற்காக வவுணதீவு ஊடாக படுவான்கரைக்குச் செல்லும் வீதியில் சுமார் இரு கிலோ மீற்றரில் அமைந்துள்ளன. முன்னர் இப்பகுதி பெரும் கலகலப்பாகவும் செல்வம் நிறைந்த பூமியாகவும் இருந்துள்ளது. ஆனால் இக்கிராமங்களை விமானப் படையினர் விமான நிலைய விஸ்தரிப்பு என்ற கோதாவில் கறையான் அரிப்பது போல் மெல்ல மெல்ல அழித்துவிட்டனர்.

வலையிறவுச் சந்தியை மையமாக வைத்து ஆயிரத்துத் தொளாயிரமாம் ஆண்டுக்கு முன்னரே சில குடும்பங்கள் வாழத் தொடங்கிவிட்டன. இக்காலகட்டத்தில் தற்போது புதூர் என்று அழைக்கப்படும் பகுதி பெரும் காடாக இருந்துள்ளது. வலையிறவுக்கு வடக்காக திருப்பெருந்துறைக் கிராமம் உள்ளது. இந்த இரு கிராமங்களுக்குமிடைப்பட்ட பகுதியும் காடு, வயல் நிலங்களும் நிறைந்த பகுதியாக இருந்துள்ளன. இக்கிராமங்களுக்கு கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் மட்டக்களப்பு வாவி ஓடுகின்றது. மிகவும் வளம் நிறைந்த பகுதி இது.

1938ம் ஆண்டு மட்டக்களப்பு வைத்திய சாலை கட்டுவதற்காக அப்பகுதி தெரிவு செய்யப்பட்டு நிலங்கள் சுவீகரிக்கப்பட்டன. அந்த வைத்தியசாலை தான் தற்போது பல கட்டிடங்களைக் கொண்டு இயங்கிவரும் போதனா வைத்தியசாலை. இந்த வைத்தியசாலை கட்டுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட பகுதியில் வாழ்ந்த 12 குடும்பங்களின் நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு அவர்களுக்கு வலையிறவுக்கு அருகில் நிலம் வழங்கப்பட்டது. இக்குடும்பங்களுக்கு நிலம் வழங்கப்பட்ட பகுதிக்கு காலப் போக்கில் புதூர் என்ற பெயர் வழங்கப்படலாயிற்று.

இப்பன்னிரண்டு குடும்பங்களையும் அங்கு குடியமர்த்தும் போது வீடு, குடிநீர் வசதி, நட்டஈடு போன்ற வசதிகள் செய்து தரப்படும் என அரசாங்க அதிபரினால் உறுதி மொழி வழங்கப்பட்டது. இதை நம்பியே தமது வீடுவாசல்களை இழந்து ஒரு பொதுத் தேவைக்காக இவர்கள் வெளியேறினர். வெளியேறிய இவர்கள் புதூரில் காணியைப் பெற்று வீடுகளை அமைத்து வாழத் தொடங்கினர். பின்னர் வைத்தியசாலை அமைப்புக்கென காணியைப் பெறும்போது மேலும் பல குடும்பங்களை அங்கிருந்து அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டதால் அரசாங்க அதிபர் அக்குடும்பங்களையும் புதூரில் குடியேற்றினார். இவ்வாறு நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் அங்கு குடியேறி ஒரு வசதியான கிராமமாக மாறத் தொடங்கி இருந்தது.

இதில் இன்னுமொரு விடயம் என்னவெனில் சுமார் இருநூற்று ஐம்பது வருடங்களிற்கு முன்னரே சடலம் அடக்கம் செய்யப்பட்ட ஆலையடிச்சோலை என்றழைக்கப்படும் பொது மயானமும் இப்பகுதியிலேயே உள்ளது. இந்த ஆலையடிச் சோலை மயானத்தில் தமிழ், முஸ்ஸீம், பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களைச் சேர்ந் தவர்களின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டு வந்தன. இதற்கென அங்கு தனித் தனியான இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இக்காலகட்டத்தில் வலையிறவு, புதூர் மற்றும் சேத்துக்குடாவில் கணிசமான குடும்பங்கள் வாழ்ந்தன.



வாகரையில் அழிக்கப்பட்ட வீடு

இங்கு வாழ்ந்த குடும்பங்கள் மீன்பிடி மற்றும் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டதுடன் வேளாண்மைச் செய்கையிலும் ஈடுபட்டனர். நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல்வயல்கள் இங்கிருந்தன. இதைவிட கால்நடை வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு போன்ற தொழில்களிலும் பலர் ஈடுபட்டனர். இவற்றையெல்லாம் செய்யக்கூடிய வளங்கள் அங்கிருந்தன. இத்தொழில்களைச் செய்யக்கூடிய வசதிகள் நிறைந்த இடம் மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் இருந்ததென்றால் அக்கிராமங்களேதான்.

> “அவர்களின் வீடுகள் அனைத்தும் உடைத்துத் தரைமட்டமாக்கப்பட்டு விமான நிலையம் அமைக்கப்பட்டது. வலையிறவு பிள்ளையார் ஆலயம் முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்டது.”

1956 ஆம் ஆண்டு இக்காலப்பகுதியில் மட்டக்களப்பில் ஒரு விமான நிலையம் அமைக்க வேண்டும் என்ற முன்னெடுப்பு ஏற்படலாயிற்று. அப்போது செல்லையா இராஜதுரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலம். இந்த விமான நிலையம் அமைப்பதற்கு கல்லடி, கருவேப்பங்கேணி, வலையிறவு ஆகிய மூன்று இடங்கள் தெரிவு செய்யப்பட்டன. இந்த இடங்களில் இறுதியாக வலையிறவு தெரிவு செய்யப்பட்டது. அப்போது அரசாங்க அதிபராக இருந்தவர் ஏ.வி.எஸ். என்.புள்ளநாயகம், கொழும்பிலிருந்து சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழு வந்தபோது திருப்பெருந்துறையை அண்டிய காட்டுப்பகுதியை அவர்களிடம் காட்டியபோது அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. வலையிறவு, புதூரை அண்டிய பகுதியே இதற்குப் பொருத்தமானது எனவும் அதில் வசிக்கும் குடும்பங்கள் இடம்பெயர வேண்டும் எனவும் கூறிவிட்டனர்.

இதற்கு எவரும் எந்தவித மறுப்பும் தெரிவிக்கமுடியாது போய்விட்டது. வைத்தியசாலை அமைப்புக்கு தமது நிலங்களைத் தாரை வார்த்து விட்டு இடம்பெயர்ந்தவர்கள் விமான நிலைய அமைப்புக்கும் தமது வீடுவளவை விட்டுக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் புதூரில் வேறிடத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இடங்களில் குடியமர்ந்தனர்.

ஆனால் இந்த விமான நிலையம் அமைக்கும் முயற்சிக்கு அப்போதே இப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் இது ஒரு சர்வதேச விமான நிலையம் என்றும் இதனால் இப்பகுதி அபிவிருத்தி அடையு மென்றும் அரசியல் வாதிகளும் அரச அதிகாரிகளும் மக்களிடம் கூறியதால் அவர்களால் எதுவும் செய்ய முடியாது போய்விட்டது. 1957 இல் ஆரம்பிக்கப்பட்ட விமான நிலைய வேலைகள் பூர்த்தியடைந்து 1958 இல் திறந்து வைக்கப்பட்டது.

பின்னர் இந்த விமான நிலையத்தை 1983 இல் விமானப்படையினர் பொறுப்பேற்று விமானப் படை முகாம் விஸ்தரிப்பு வேலைகள் ஆரம்பமாகின. இதனால் முதற்கட்டமாக விமான நிலையத்தை அண்மித்திருந்த குடும்பங்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டன.

பின்னர் ஒவ்வொரு கட்டம் கட்டமாக விஸ்தரிப்பு வேலைகள் இடம்பெற்றன. இதனால் வலையிறவு கிராமத்திலிருந்த அத்தனை குடும்பங்களும் வெளியேற்றப்பட்டு அவர்களின் நிலங்கள் சுவீகரிக்கப்பட்டன. அத்துடன் புதூர், சேத்துக்குடா ஆகிய கிராமங்களில் இருந்தவர்களின் கணிசமான பகுதிகள் சுவீகரிக்கப்பட்டன. இவ்வாறு சுமார் 365 குடும்பங்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டு அவர்களின் வீடுகள் அனைத்தும் உடைத்து தரைமட்டமாக்கப்பட்டு விமான நிலையம் அமைக்கப்பட்டது.

(22 ஆம் பக்கம் பார்க்க)



## எத்தனை நாளி துயின்றிருப்பாய் என் அருமை தாய்மண்ணே!

# மலையகத் தேசியம்:

## சிதைக்கப்படும் தமிழ்மொழி




■ வோல்டர் டெரி

மக்களால் பேச்சு மூலமாகவும் எழுத்து மூலமாகவும் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு முறைமை மொழி ஆகும்'' என ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி "மொழி" என்பதற்கு விளக்கம் கொடுக்கின்றது. இதற்காக சத்தங்களும் சொற்களும் பயன்படுத்தப்படுகின்றன. இதனூடாக கருத்துக்களும், உணர்வுகளும் பரிமா றிக் கொள்ளப்படுகின்றன.

மொழி என்பது வெறுமனே தொடர்பு சாதன ஊடகம் மட்டுமல்ல. ஒரு சமூகம், இனம் அல்லது இனக்குழுமத்தை அடையாளப்படுத்துவதில் மொழி பிரதான பங்கு வகிக்கின்றது. அதாவது மொழி ஊடாகத்தான் ஒரு சமூகம் அடையாளப்படுத்தப்படுகின்றது. நாம் மொழியை பேசுகின்றோம் என்பதைவிட நாம் எப்படிப்பட்டவர்கள் என மொழி நம்மை பற்றிப் பேசுகிறது.

இன்று உலகில் கிட்டத்தட்ட 6.912 மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றில் இரண்டாயிரம் மொழிகளை ஆயிரத்துக்கு குறைவானவர்களே பேசுகின்றனர். அதிகூடிய மக்களால் பேசப்படுகின்ற மொழியாக சீனாவின் மென்டரின் மொழி காணப்படுகின்றது. அடுத்ததாக ஸ்பெனிஷ் மற்றும் ஆங்கில மொழிகள் விளங்குகின்றன. தமிழ் மொழியானது இருபதாவது இடத்தில் உள்ளது. இருப்பினும் இங்கு ஒரு விமர்சனமும் வைக்கப்படுகின்றது. அதாவது தமிழ் மொழி பேசுவோரின் எண்ணிக்கையை குறிப்பிடுகின்ற போது இந்தியாவின் தமிழ் நாட்டிற்கு வெளியில் பிற மாநிலங்களில் பல இலட்சம் தமிழ் மொழி பேசுவோர் (தாய்மொழியாக கொண்டவர்கள்) இருக்கின்ற போதிலும் அவர்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதாகும்.

**ஒரு சமூகத்தினுடைய எழுச்சிக்கு பிரதேசம் கடந்து ஒரு பொது அடையாளத்தை நோக்கிப் பயணிக்க வேண்டும். அப்பொழுது தன்னளவில் உள்ள முரண்பாடுகளுக்குத் தீர்வுகளையும் காணுதல் வேண்டும். இந்நிலையில்தான் மொழி வழி சார்ந்து தேசியத்தை கட்டமைத்தல் முக்கியத்துவம் பெறுகின்றது.**

உலகின் தொன்மையான மொழிகளாக சமஸ்கிருதம் (Sanskrit), தமிழ் (Tamil), சீனம் (Chinese), லத்தீன் (Latin), ஹிப்ரூ (Hebrew), க்ரீக் (Greek), பேர்சியன் (Persian), அரேபிக் (Arabic), என்பன விளங்குகின்றன. இவற்றில் சமஸ்கிருதம், லத்தீன் ஆகிய மொழிகள் இன்று பாவனையில் இல்லாத இறந்த மொழிகளாகவே கணிக்கப்படுகின்றன.

இன்று உலகில் உயிருடன் உள்ள மொழிகளில் பெரும்பாலானவற்றுக்கு எழுத்து வடிவம் கிடையாது. பேச்சு மொழி போல் எழுத்து மொழியும் உண்டு. எழுத்து மொழியானது அறிவை உருவாக்குகின்ற, பகிர்ந்து கொள்ளுகின்ற மொழியுமாகும்.

ஒரு சமூகம் உயிர்ப்பாக வாழ்கின்றது என்றால் அங்கு மொழியினூடாக அந்த சமூகம் சிந்தனைகளை உள்வாங்கி பகிர்ந்து கொள்ளும். இதன் மூலம் அந்த சமூகம் நாகரீக சமூகமாக மாறுகின்றது.

ஒரு சமூகமானது மொழியை செம்மையாகக் கையாளுகின்ற போதுதான் நாகரீக சமூகமாக மாறுகின்றது. நாகரீக சமூகம் எனும் போது அங்கு சமூகம் சமத்துவம், சமூக நீதி என்பன சிறப்பாகக் காணப்படும். மேலும் நாகரீகம் எனும் போது இயற்கையை சுரண்டாது அதனை நேசித்து மனிதன் மனிதனாக மனித நேயத்துடன் வாழ்வதாகும்.

### மொழியும் தேசியமும்


மொழியும் இயற்கை சார்ந்த ஒரு விடயம்தான். இங்கு மனிதன் இயங்கினால்தான் மொழியும் இயங்கும். மேலும் மொழியை பயன்படுத்துவதற்கு இருக்கும் வாய்ப்பைப் பொறுத்தே மொழி வளரும். இதன் தொடர்ச்சியாகத்தான் ஒரு சமூகத்தை தேசிய இனமாக அடையாளப்படுத்துவதில் மொழி பிரதான இடம் வகிக்கின்றது. எனவே, இங்கு மனிதன் பிரதான இடம் வகிக்கின்றபடியால் மனிதனையும் மொழியையும் பிரிக்க முடியாது. ஒரு தேசிய இனத்தை தாங்கும் தூண்களான நிலம், பொருளாதாரம், கலாசாரம், மக்கள் கூட்டம் என்பவற்றுடன் மொழியும் ஒன்றாக இணைந்திருக்கிறது.

மேலும் மொழி என்பது எப்பொழுதும் ஒற்றை பரிமாணம் கொண்டதல்லல. பன்முகத் தன்மை கொண்டது. மொழியை பிரதேசம் சார்ந்து பேசுதல், பிரதேச வேறுபாடுகளைக் கடந்து பொது மொழி சார்ந்து அடையாளப்படுத்தல் என்பன முக்கியமானதாகும். கிராமம், நகரம், பிரதேசம், நாடு கடந்து பொது மொழி சார்ந்த அடையாளப்படுத்தலும் இன்றியமையாததாகும். தேசிய இன அடையாளத்திற்கு இது முக்கியமாகும்.

ஒரு சமூகத்தினுடைய எழுச்சிக்கு பிரதேசம் கடந்து ஒரு பொது அடையாளத்தை நோக்கிப் பயணிக்க வேண்டும். அப்பொழுது தன்னளவில் உள்ள முரண்பாடுகளுக்குத் தீர்வுகளையும் காணுதல் வேண்டும். இந்நிலையில்தான் மொழி வழி சார்ந்து தேசியத்தை கட்டமைத்தல் முக்கியத்துவம் பெறுகின்றது. இதற்காக தாய் மொழியின் முக்கியத்துவம், தமிழ் மொழியின் தனித்துவம், தமிழ் மொழியை பிறமொழி கலப்பிலி ருந்து பாதுகாத்தல் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

"ஒரு சமூகம் தன்னை எவ்வாறு உணர்கின்றது என்பதுதான் தேசியம் ஆகும்" எனவே மொழி வழி சார்ந்து தேசியத்தை கட்டமைத்தல் எனும் போது அது வேறு எந்த மொழியையும் வெறுப்பதல்ல. எப்பொழுது மொழி சார்ந்த வெளிப்பாடுகளுக்கான தளங்கள் அதிகரிக்கின்றதோ அப்பொழுது அந்த சமூகத்தின் முழுமை (உயர்ச்சி/தாழ்ச்சி) வெளிப்படுத்தப்படுகின்றது. ஒரு மொழியை பாதுகாப்பதூடாக ஒரு இனத்தைப் பாதுகாக்கலாம் என்பதும் இதன் வெளிப் பாடாகவே உள்ளது. இதுதான் ஒரு மொழியை அழிப்பதூடாக ஒரு இனத்தை அழிக்கலாம் என நம்பப்படுகின்றது.

*(தொடரும்)*






# மாதொருபாகன்



பெருமாள் முருகன்

8

(நாவல்)

கைகளும் கால்களும் திரண்ட அடிமரமாய்த் தோன்றின. உருண்டை முகம். விழித்த கண்கள் நேருக்கு நேர் மோதின. கண்களை விலக்கிக் கொண்டாலும் அவை தன்னையே துளைப்பது போல உணர்ந்தான்.

'என்ன சாமிடா மச்சான் இது?' என்றான், வனந் தரும் பயத்தைப் போக்கிக் கொள்ளும் குரலில். 'இவதான் எங் கம்மா பாவாத்தா' என்று குரல் கேட்டது.

வனம் அனிச்சையாய்ப் பேசுவது போலிருந்தது. ஒற்றையடித் தடத்தில் இக்கத்தில் குடத்தோடு கிழவி ஒருத்தியும் இரண்டு குழந்தைகளும் வந்து கொண்டிருந்தனர். பதில் சொன்னது கிழவிதான். பெண் தெய்வத்தின் உருவத்தைச் சுற்றிலும் மண்ணோடு இணைந்திருக்கும்படி நடப்பட்ட கற்கள். அதற்கும் கீழே கல் மறைவில் இரண்டு மூன்று சட்டிகளும் பைகளும் இருந்தன. பாட்டி இந்த சாமிக்குப் பொங்கல் வைக்க வந்திருப்பவள் என்று தெரிந்தது. காதுகள் நிறைய நகைகளோடு இருந்த அந்தக் கிழவி அவளாகவே பேசினாள்.

'குளுகுளுன்னு மரத்து நெவலும் பக்கத்துலயே சொனயும் வெச்சிக்கிட்டு எங்க பாவாத்தா இங்கதான் இருக்கறா. இவளக் கொண்டுகிட்டுப் போயிக் கோயிலுக்குள்ள அடச்சு வெச்சுக் கிட்டுப் பூச பண்றாங்க. வனத்துல தங்குண்டியாத் திரியறவள செவுத்துக்குள்ள புடுச்சு வெக்க முடியுமா? எங்கம்மா இங்கதான் இருக்கறா. அவுங்க வெறும் கல்லுக்குப் பூச பண்றாங்க.'

'நீங்க எந்த ஊரும்மா?' என்றான் காளி .

குழந்தைகள் வனத்திற்குள் ஓடி விளை யாடின. மரம் ஏறுவதும் குதிப்பதும் என உற்சாகமான விளையாட்டு. குழந்தைகளின் பேச்சும் சிரிப்பும் புது விதப் பறவைகளின் குரலொலியாத் தோன்றின. கிழவி பொங்கல் வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டே பேசினாள். ' எங்களுக்கு அக்கரப் பக்கம் தம்பி. இந்தப் பக்கத்திலிருந்து தான் எப்பவோ குடி போனவங்க. வவுத்துப் பொழப்புக்கு நாங்க போனாலும் எங் கம்மா வரமாட்டாம்னுட்டா. நான் தேவையின்னா இங்க வந்து பார்த்துட்டுப் போங்கன்னு புடிவாதமாச் சொல்லிட்டா. ஏதோ வருசத்துக்கு ஒரு தரம் இப்படி வந்து அம்மாளுக்கு ஒரு பூச போட்டுட்டுப் பொங்கல் வெச்சுச் சாப்பிட்டுப் போவம். எங்க சனமெல்லாம் இந்த மலயச் சுத்தியிருந்த வனத்துல தான் வெகுகாலம் இருந்தாங்களாம். வனமழிஞ்சு ஊடும் காடுமா ஆனதுக்கப்பறம் திக்காலுக்கு ஒன்னாச் செதறிப் போயிட்டாங்க. வைகாசித் தேரப்ப முடிஞ்சவுங்க சேர்ந்து வருவாங்க. இல்லீனா எங்களாட்டம் எப்ப வேண்ணாலும் வர்றது தான் எல்லாம் பத்துப் பாஞ்சு பேரு வந்திருக் கிறம் . கோயிலப் பாத்துட்டு வர்றமுன்னு போயிருக்கறாங்க. எங்கம்மா இங்கிருக்கிறப்ப அங்க பாக்க என்ன இருக்குது. அதான் இந்த ஏற்பாடெல்லாம் பண்ணலாமுன்னு வந்திட்டன்'.

காளியின் மனதில் இந்தச் சாமிக்குத் தான் பூசை போட்டுப் பொங்கல் வைக்க வேண்டும் என்று தோன்றியது. செம்பாறைகளாய்க் கிடக்கும் மலைக்கு நடுவில் தனக்கென வனம் ஒன்றை அமைத்துக்கொண்டு மண்ணில் படுத்திருக்கும் இவள்தான் பாவாத்தா. ஏதோ ஒரு காலத்தில் காட்டுவாசிப் பெண் இறைஞ்சிச் சாபம் கொடுத்தாளே, அவள் சொன்ன குலசாமி இன்னும் மெருகழியாமல் வாழ்கிறது. பாவாத்தாளின் காலடியில் உட்கார்ந்து கொண்டான். லேசாக் காலை அசைத்தால் மூஞ்சியில் ஓங்கி உதைவிழும் என்று பட்டது. உதைக்குப் பயந்து தலையைப் பின்னிழுத்துச் சிலிர்த்துக் கொண்டான்.

"இந்த சாமிக்குப் பூச பண்றது யாரும்மா?" என்றான்.

"எங்க சாமிக்கு வேற ஆரப் பூசபண்ண உடுவம்? அம்மாளுக்கு வேணுங்கற தெல்லாம் நாங்களே பண்ணுவம். எங்க சனத்தைச் சேர்ந்த குடும்பம் இந்தூர்லயே சிலபேரு இருக்கறாங்கள். அவுங்கள்ள ஒருத்தரு வாரம் ஒருக்காப் பூச பண்ணுவாரு எங்கிருந்தாலும் எங்க சனம் வருசத்துக்கு அஞ்சு ரூவான்னு சேத்தி அவுங்களுக்குக் குடுத்துருவம்" என்றாள் கிழவி.

'நான் ஒரு பூச போடோனுமே அம்மா'

'நல்லாச் செய்யி சாமி. ஒரு மத்தியானமா வாங்க. பூசக்காரரு வருவாரு. அவுருகிட்டக் கேட்டு என்ன வேணுமோ செய்யிங்க. ஒரு வேலெடுத்து வெக்கோனும். சாவக்கோழி அறுத்து ரத்தம் உடோனும். அதுதான் முக்கியம்.'

மலைக்கோயிலில் அய்யர் செய்யும் பூசையில் அவன் மனம் ஈடுபடவில்லை. மேலே செலவானாலும் பரவாயில்லை, வனம் வாழும் இந்தப் பாவாத்தாவிற்குத் தான் பூசை என்று முடிவு செய்து கொண்டான். வருசம் முழுக்கக் காடுகரைகளில் படும்பாடு முழுக்கவும் இப்படி வேண்டுதலுக்கே செலவாகிப் போகிறது. போகட்டும். கட்டிச் சேர்த்து வைத்திருந்து எந்தப் பிள்ளைகளுக்குப் பங்கு போடுவது?


' செரிம்மா. மத்தியானம் வர்றம்' என்று புறப்பட்டான். "அதுக்குள்ள பொங்கல் தயாராயிருக்கும். சாப்பிட்டுப் போறாப்பல வாங்க தம்பி" என்றாள்.

தலையசைத்து வெளியேறும் போது மரத்தின் மேலே குரங்கோடு அந்தச் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருப்பது தெரிந்தது யார் எதைச் சொன்னாலும் செய்து தொலைக்க வேண்டியிருக் கும்.நிலையில், வனப்பாவாத்தாவுக்குச் செய்த பூசை உண்மையாகவே மன நிறைவாக இருந்தது.

> குழந்தைகள் வனத்திற்குள் ஓடி விளையாடின. மரம் ஏறுவதும் குதிப்பதும் என உற்சாகமான விளையாட்டு. குழந்தைகளின் பேச்சும் சிரிப்பும் புது விதப் பறவைகளின் குரலொலியாத் தோன்றின.

வனப் பாவாத்தாவுக்குப் பூசை செய்தவர் மண்டியில் மூட்டை தூக்கும் வேலை செய்து கொண்டிருந்தவர். பூசைக்கெனப் பெரிய பட்டியல் எதையும் அவர் தரவில்லை. பணமும் வாங்கவில்லை. வழக்கமான பூசைப் பொருட்களுக்கு மேல் எட்டணாவுக்குச் சிவப்பு வாங்கச் சொன்னார். கீழே இறக்கத்துக் கோயில் சந்தில் இருந்த முதலியார் கடை ஒன்றைச் சொல்லி அங்கே துணி எடுத்துவரச் சொன்னார். பலியிடச் சேவல் ஒன்று. பொன்னாவும் அவள் தங்கையும் பொங்கல் வைத்தார்கள்.

பாவாத்தாவை அலங்காரம் செய்து கொண்டிருந்தார் பூசாரி. முதல் நாள் பார்த்தபோது ஏற்பட்ட பயம் அன்றைக்கு இல்லை. மெல்லிய துணியில் பொறுமையாகப் பூசாரி துடைத்துக் கொண்டிருந்தார். அப்போது பார்க்க நம் வீட்டுப் பெண்ணொருத்தி அசதியில் மல்லாக்கப் படுத்துக் கொண்டிருப்பதைப் போலத் தோன்றியது. காளியும் முத்துவும் அந்தச் சிறு வனத்துக்குள் சுற்றி வந்தார்கள்.



(தொடரும்)

உலகப் புகழ்பெற்ற சினிமா




# WATER (வாட்டர்)

## விதவைகளின் வாழ்வுரிமையைப் பேசும் படம்

திருமணமான பெண் கணவனின் பாதி. கணவன் இறந்து விட்டால் பெண்ணும் பாதி இறந்தவளாகின்றாள். கணவனின் மரணத்திற்குப் பிறகு மனைவி என்பவளுக்கு மூன்று வழிகள். தகனம் செய்யப்படும் கணவனின் சிதையில் தானும் விழுந்து உயிரை விடுவது ஒன்று...! கணவனின் சகோதரனை மறுமணம் முடிப்பது மற்றொரு வழி. மொட்டையடித்துக் கொண்டு, வெள்ளைப் புடவை அணிந்து ஏதாவதொரு மடத்தில் தன் மிச்ச நாட்களைக் கழிப்பது மூன்றாவது வழி. இதன்படி விதவைக் கோலம் பூண்டு மடத்தில் வாழும் அவளுக்கு, இறந்த தன் கணவனின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்வதே வாழ் நாள் பணி!

பெண்களை இதைவிட வேறு வகையில் சிறுமைப்படுத்தவே முடியாது என்று சொல்லத்தக்க மேற்கொண்ட விசயங்களை நானோ, நீங்களோ சொன்னால் பெண்களிடமிருந்து எத்தகைய எதிர்ப்புக்குரலை, கண்டனத்தை எதிர்கொள்ள நேரிடும் என்பதைக் கூறத் தேவையில்லை. ஆனால் இதைச் சொல்வது சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் எழுதப்பட்டதாக சொல்லப்படும் 'மனுசாஸ்திரம்' என்ற இந்து மதநூல். மனுவின் கூற்றுப்படி விதவைப் பெண்களின் வாழ்வுரிமை வலுக்கட்டாயமாகப் பறிக்கப்படுகிறது.

தீபாமேத்தாவின் 'வாட்டர்' திரைப்படம் வெளியான போது உலக அளவில் விவாதத்துக்கு உள்ளாக்கியது இந்த விசயத்தைத் தான். ஃபயர், எர்த் படங்களைத் தொடர்ந்து தீபாமேத்தா இயக்கியிருக்கும் படம் இது. கணவன்களின் அன்பும் கவனிப்பும் மறுக்கப்பட்ட இரண்டு பெண்களுக்குள் ஏற்படும் ஓரின பாலியல் உறவைச் சொன்ன படம்-ஃபயர். இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின் போது இந்து, முஸ்லீம், சீக்கியர்களிடம் நிலவிய உறவைச் சொன்ன படம்-எர்த்.

முந்தைய இவ்விரு படங்களின் வரிசையில் அவற்றிலிருந்து மாறுபட்ட தளத்தில் உருவாக்கப்பட்ட படம்-வாட்டர். 2001 இல் வாரணாசியில் வாட்டர் படத்தின் படப்பிடிப்பு துவக்கப்பட்டபோது, அதை நடத்தவிடாமல் இந்து மத அடிப்படைவாதிகளும், இந்து மத அமைப்புக்களும் செய்த அழிச்சாட்டியம் கொஞ்ச நஞ்சமல்ல. படப்பிடிப்புக்குழுவினரை அடித்து உதைத்தார்கள். படப்பிடிப்புக் கருவிகளை கங்கை ஆற்றில் வீசினார்கள். அதனால் வாட்டர் படத்தின் படப்பிடிப்பு பாதியோடு நிறுத்தப்பட்டது. இத்தனைக்கும் வாட்டர் படத்தின் முழு திரைக்கதை வடிவத்தையும் இந்திய அரசிடம் சமர்ப்பித்து முறைப்படி அனுமதியும் பெற்றிருந்தார் தீபாமேத்தா. படப்பிடிப்பை நிறுத்தியும் ஆத்திரம் அடங்காத இந்து மத அடிப்படைவாதிகள் தொடர்ந்து, தீபாமேத்தாவுக்கு கொலை மிரட்டல்களும் விடுத்த நிலையில், வேறு வழியில்லாமல் இலங்கையில் படப்பிடிப்பை நடத்தி, ஆறு வருடப் போராட்டத்துக்குப் பிறகு, 2007 ஆம் ஆண்டில் வாட்டர் திரைப்படத்தை வெற்றிகரமாக மக்களின் பார்வைக்குக் கொண்டு வந்தார்.

இந்தியாவில் வாட்டர் திரைப்படத்துக்கான எதிர்ப்பு கனன்று கொண்டிருந்த நிலையில், இங்கே படத்தைத் திரையிடும் சூழல் ஏற்படாததால், முதலில் வெளிநாடுகளில் வெளியிடப்பட்டதோடு, ஆஸ்கார் உலகப்பட விழாவிலும் வெளிநாட்டுப்பட பிரிவில் கனடா நாட்டின் சார்பில் நாமினேட் செய்யப்பட்டது மட்டுமல்ல, இந்தப்பிரிவில் விருதை வெல்லப் போவது வாட்டர் படம் தான் என்ற நம்பிக்கைக் குரல்களையும் அப்போது சர்வதேச திரைப்பட பார்வையாளர்கள் மத்தியில் ஒலிக்க வைத்தது. இன்னொரு பக்கம், சர்ச்சைகளின் மூலம் வாட்டர் படத்துக்குக் கிடைத்த விளம்பரமே இப்படத்துக்கு உலக அளவிலான வரவேற்பையும், ஆஸ்கர் விருதுப் போட்டிக்குள் நுழையும் தகுதியையும் கொடுத்திருப்பதாக ஒரு கருத்து உருவானது. அதில் உண்மை இருக்கலாம். அதே நேரம், வாட்டர் படத்திற்காக தீபாமேத்தா எடுத்துக் கொண்ட விஷயமே அப்படத்தை இந்தளவுக்குப் பேச வைத்தது என்பதையும் மனச்சாட்சி உள்ளவர்கள் ஒப்புக் கொள்வார்கள்.

வாட்டர் திரைப்படத்தின் கதை மனுசாஸ்திரத்தின் அடிப்படையை மையப்புள்ளியாகக் கொண்டிருந்தாலும், அதன் கதை பால்ய விவாகம் பின்பற்றப்பட்டு வந்த 1930 ஆம் ஆண்டில் நிகழ்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படத்தின் கதை நாயகி சுய்யாவுக்கு வயது எட்டு. தனக்கு செய்து வைக்கப்பட்ட திருமணம் கூட நினைவில் இல்லாத வயசு. வயதான கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு, விதவையான சுய்யாவும் விதவைகள் வாழும் மடத்திற்கு அனுப்பப்படுகிறாள். எல்லா விதவைகளையும் போலவே அவளுக்கும் தலை மழிக்கப்பட்டு, மொட்டை அடிக்கப்பட்டு, வெள்ளை உடைக்கோலம்! துறவற வாழ்க்கை திணிக்கப்பட்ட சிறுமி சுய்யா, மற்ற வயதான விதவைகளுடன் பக்திப்பாடல்களைப் பாடியபடி, வரனாசி தெருக்களில் பிச்சை எடுக்கிறாள்.

அந்த வாழ்க்கையும், விதவைகள் அருகில் வந்தால் அபசகுணம் என்கிற இந்து மத நம்பிக்கையின் காரணமாக மற்றவர்கள் காட்டும் துவேஷமும் அந்தப் பிஞ்சு மனதை விம்ம வைக்கிறது. இன்னும் எத்தனை நாட்களுக்கு இங்கே தங்கியிருக்க வேண்டும்? எவ்வளவு நாட்களுக்கு இந்தக் கோலம் என்ற விடைதெரியாத கேள்விகளுடன் தவிக்கிறாள் சுய்யா. ஒரு நாள் உங்கம்மா வந்து உன்னைக் கூட்டிட்டுப் போவாங்க என்று பொய்யாச் சொல்லப்பட்ட ஒற்றை வரி ஆறுதல், நிகழ்கால நரகத்தை மறக்கவும், அதை அவள் ஏற்றுக் கொள்ளவும் வைக்கிறது.

அங்கே கல்யாணி என்ற இளம் விதவையை சந்திக்கிறாள் சுய்யா. அந்த மடத்தின் தலைமை விதவை மதுமதியால் விபச்சாரத்தில் தள்ளப்பட்டவள் கல்யாணி. மொட்டையடித்துக் கொள்வதிலிருந்து கல்யாணிக்கு மட்டும் விதிவிலக்கு! காரணம் விபச்சாரத்தின் மூலம் அவள் ஈட்டித்தரும் பணம்!

சுய்யாவுக்கும் கல்யாணிக்கும் இடையில் அன்பு மலர்ந்து தோழிகளாகிறார்கள். சுய்யா மூலம் கல்யாணிக்கு நாராயணன் அறிமுகமாகிறான். பணக்கார இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த இவன், காந்தீயக் கொள்கை கொண்டவன். விதவைகளின் நிலை கண்டு குமுறும் நாராயணன், பெண்களுக்கு எதிரான கொடுமைகளையும், விதவைகளின் வாழ்வு நிலை துயரத்திற்கு எதிராகவும் பேசுகிறான். இந்து மதக் கோட்பாடுகளின் மீது கண்மூடித்தனமான நம்பிக்கை வைத்திருக்கும் அடிப்படைவாதிகளால் இதை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

இன்னொரு பக்கம் நாராயணனுக்கும், கல்யாணிக்குமிடையில் நேசம் பிறக்கிறது. இவர்களின் உறவு, விதவைகள் மறு மணம் செய்து கொள்ளலாம் என்ற கருத்தை பிற விதவைகளின் மனதிலும் ஏற்படுத்துகிறது. சுய்யாவின் அன்புக்குரிய சகுந்தலா என்ற பெண்மணி, சுய்யாவுக்கு நல்ல எதிர்காலம் கிடைக்கும் என்று நம்புகிறாள். கவலைப்படுகிறாள்.

சரி அது என்ன வாட்டர்? தீபாமேத்தாவின் முந்தைய படங்களான ஃபயர், எர்த் வரிசையில் சூட்டப்பட்ட வெறும் தலைப்பு மட்டுமே அல்ல-வாட்டர். அப்புறம்?

"நீர் என்பது பாயும் அல்லது தேங்கி நிற்கும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் விதவைகள் குறித்து சொல்லப்பட்ட இந்த விஷயம் இன்றும் தொடர்கிறது. இன்றைக்கு இந்தியாவிலுள்ள 33 மில்லியன் விதவைகளே அதன் சாட்சி! இது தான் தேங்கி நிற்கும் நீர். பண்பாடு, கலாச்சாரம், மதக்கோட்பாடு எதுவாக இருந்தாலும் இத்தனை கட்டுப்பாடுகளுடன் தேங்கிய நீராக இருக்கக்கூடாது. ஓடும் நீராக இருக்க வேண்டும்." வாட்டர் என்ற தலைப்புக்கு தீபாமேத்தா சொல்லும் விளக்கம் இது.

உண்மை தான். தேங்கிக் கிடக்கும் நீரில் தான் நாளடைவில் புழு, பூச்சி கிருமிகள் உருவாகும். அதை உட்கொண்டால் நோய் தொற்றும். ஓடும் நீரில் இந்த ஆபத்து இருப்பதில்லை....!

# நித்திய கல்யாணி

-வசந்தி

கவனித்திருக்கிறேன் உன்னை
பச்சை விளக்கிற்காய் காத்திருக்கும்-
கணங்களில்
கௌரவக் கணவனுடன் காரிலே
போகையிலே

குரோதம்- உன் கண்களில்
பார்வை பட உணர்ந்தேன்


எதற்காக?
காரின்பெறுமதிக்கா
வேடிக்கை பார்ப்பதாலா
கணவன் உடமைக்கா?

உனக்குத் தெரியுமா
என் பொறாமைப் பட்டியலில்
நீயும் இருப்பது.

# கவிதை படைப்போம்

# ஐந்து தலைப் பாம்பும் ஆயிரத்தெட்டு விரல்களும்

- மைதிலி




ஒவ்வொன்றாய் நுழைந்தன
ஐந்து தலைப் பாம்புகள்
வாசல் சிராய்ப்புகளினூடு
வழிந்தொழுகும் குருதியும் நீரும்
குழைந்து
தலை மேலே தலை கீழே
அசுர வேகமாக உய்த்துணர்தல்
பீய்ச்சியடிக்கிற நீரில்
இறுமாப்பாய்
இயங்குகின்றன
முன்னும் பின்னும், பின்னும்
முன்னும் விட்டு விடு

கூட்டிற்குள் குருவியை
பரிவுடன் கத்தரிக்கப்படும்
அதன் இறகுகளை
நீரைத் துறந்து ஆடை புனைய
அவளிற்குப் பிரியமில்லை
உங்களுடன் அவளைப் பகிர
எனக்கும் சம்மதமில்லை
குருதிக்கும் கூச்சலிற்கும்
உங்கள் குதூகலக் கொடும்
பார்வைக்கும்
அப்பாற்பட்டவள் அவள்

இரை மீது வேட்கை
கொண்டு
பாம்புகளோ
விடுவதாயில்லை
அரைகுறை மயக்கமாய்
திரும்பிப் பார்க்கிறேன்
நம்ப முடியாதபடி
ஏதோவொன்று
அவள் புருவங்களின் கீழ்
தேங்கிப் போயிருக்கிறது.

# மீண்டும் தொடங்கும் மிடுக்கு

- மகாகவி



மப்பன்றிக் காலமழை காணா மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது.
ஏர்
ஏறாது, காளை இழுக்காது.
எனினும் அந்தப்
பாறை பிளந்து பயன்விளைப்பான்
என் ஊரான்.

ஆழத்து நீருக்ககழ்வான் அவன்.
நாற்று
வாழத்தன் ஆவி வழங்குவான், ஆதலால்
பொங்கி வளர்ந்து பொலிந்ததுபார்
நன்னெல்லு.

தங்க நகைகளைத் தலைக்கணிந்த பெண்களே
கூடிக் குனிந்து கும்மி கொட்டுவதும்,
காதினிக்கப்

பாடிக்கவலை பறக்கச் செய்கின்றதும் போல்,
முற்றி, மனிதன் முயற்சிக்கு
இறை கொடுக்கும்
பொற்காசாம் நெல்லுப்பொதி சுமந்து
கூத்தாடும்

அந்தப் பயிரின் அழகை அளந்தெழுத
எந்தச்சொல் உண்டாம் எமக்கு?

அவ்வுழைப்பாளி
உள்ளம் நெகிழ்ந்தான்.
ஒரு கதிரைக் கொத்தாகக்
கிள்ளி முகர்ந்தான்

கிறுகிறுத்துப் போகின்றான்.

வாடும் வயலுக்கு வார்க்காமுகில்,
கதிர்கள்
ஜடும் சிறுபயிர்மேல்
"சோ" வென்று நள்ளிரவிற்
கொட்டும். உடன் கூடும்
கொலைக்காற்றும் தானுமாய்
எட்டுத்திசையும் நடுங்க முழங்கி எழும்.
ஆட்டத்து மங்கையர் போல்
அங்கு மொய்த்து நின்றபயிர்
பாட்டத்தில் வீழ்ந்தழிந்து பாழாகிப்
போய்விடவே
கொள்ளை போல் வந்து கொடுமை
விளைவித்து
வெள்ளம் வயலை விழுங்கிற்று.....
பின்னர் அது

வற்றியதும், ஓயா வலக்கரத்தில்
மண்வெட்டி
பற்றி, அதோபார், பழையபடி
கிண்டுகிறான்.
சேர்த்தவற்றை
முற்றும் சிதற வைக்கும் வானத்தைப்
பார்த்தயன்று நிற்கும்
பழக்கமற்றோன்
வாழி, அவன்
ஈண்டு முதலில் இருந்தும்
முன்னேறுதற்கு
மீண்டும்
தொடங்கும் மிடுக்கு!





போர்க்கால சிறுகதைகள்

# பிறந்த மண்

- ராணிசீதன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

"ஏனணை?"

"ஏனோ நாங்கள் படலையை எடுத்துப் போட்டம் எண்டு தான்."

"பிறகு விடியப்பார்த்தால் ஆறுமுகத்தின்ர வாசலில இரண்டு படலை கட்டிவிட்டிருக்கு. அவனுக்கு எங்களில தான் சந்தேகம். இப்ப அவருக்கு இந்தக் கதையைச் சொல்ல வேணும்."

"சொல்லி என்னணை செய்ய? மனுசனுக்கு ஆணவமும் இரத்தமும் செய்யிற வேலை. வளவு முழுக்கத் தென்னையும், மாவும், முருக்கும் எவ்வளவு வரும்படி? எல்லாத்தையும் விட்டுப்போட்டு சனங்கள் குழி நிலத்துக்கு லட்சம் கொடுத்து வாங்கி, மூச்சுவிட முடியாமல் அடைபட்டுக்கிடக்கிறதை சந்தோசமாய் நினைக்கேல்லயே?."

ஒவ்வொரு மரத்தையும், இலையையும் பாக்கியம் ஆசையாய்த் தடவிக் கொடுத்தாள்.

"என்ன இருந்தாலும் பிறந்த மண்ணில கிடந்து உருண்டாலும் தகும். பச்சைத் தண்ணியைக் குடித்தாலும் மரியாதையோட இருக்கலாம்."

இடம்பெயர்ந்த அனுபவம் இப்படிப்பேச வைக்கிறது என சாந்தி நினைத்தாள். கனகம்மா குழற்புட்டு அவித்து இறால் வறை வறுத்துக் கொண்டு வந்து பாக்கியத்துக்குக் கொடுத்தாள்.

"கனகாலத்துக்குப் பிறகு எனக்கு விருப்பமான புட்டும் இறால் வறையும் கொண்டு வந்திருக்கிறாய்!"

பாக்கியத்திற்கு வாயில் நீர் ஊறியது.

"சாப்பிடணை இரவில் என்ன சத்தம் கேட்டாலும் வெளியில வராதயணை."

"சாமம் சாமமாய் வயலுக்குப் போய், பாத்திகட்டி, தண்ணி இறைச்சு எரு வைச்சு..."

பாக்கியத்திடமிருந்து பெருமூச்சு வெளிப்பட்டது. புதினங்கள் பல பரிமாறப்பட்டன. இடையில் கனகம்மாவின் பேச்சுத்தடைப்பட்டதும் அவள் நித்திரையில் என்பதை ஊகித்துக் கொண்டாள் பாக்கியம். தூரத்தில் நாய்கள் குரைத்தன. வெடிச்சத்தமும் கேட்டது. நித்திரை கண்களைத் தழுவ மறுத்தது. அவளின் கட்டில் நினைவில் நிழலாடியது. எழுந்து போய் வீட்டுக்குப் பின்புறத்தில், ஒருகால் முறிந்தபடி, பழைய சாமான்களுடன் போடப்பட்டிருந்த கட்டிலைத் தடவிப்பார்த்தாள். நினைவுகள் தொடர அருகில் இருந்த செவ்விரத்தை மரத்தடியில் குந்தி இருந்தாள் பாக்கியம். கொம்புகளிற்கிடையில் தலை நீட்டிய பூரணச்சந்திரன் ஒளியில் பூமி பொன் மயமான பொலிவு பெற்றுத் திகழ்ந்தது. நிலாக்காலங்களில் பொன்னம்பலத்தாரும் பாக்கியமும் இதே பூமரத்தின் கீழே இருந்து எத்தனை எத்தனையோ இன்பக் கதைகள்.... எதிர்காலத் திட்டங்கள்... ஊடல் கூடல் அனைத்திற்கும் பொருத்தமாய் அமைந்த இந்த இடத்தில் தன்னை மறந்திருந்தபோது...பின்பக்கத்தில் யாரோ திடும் திடும் என ஓடிவரும் சத்தம் கேட்டு, பின்னால் திரும்பிப் பார்த்தபோது,

"டுமீல் டுமீல்" .... துப்பாக்கி வேட்டுக்கள் பாக்கியத்தின் உடலை சல்லடையாக்கியது. ஒரு கணம் துடித்த உடலிலிருந்து உயிர் பிரிந்துவிட, உடல் நிலத்தில் சாய்ந்தது. செவ்விரத்தையடியில் அநாதையாய்கிடந்த பாக்கியத்தின் பிணத்தருகே எவரும் வரவில்லை. பிறந்த மண்ணில் இறந்து கிடப்பதும் சுகமே என்பது போல ஒரு திருப்தியும் நிறைவும் உயிரற்ற உடலிற்கு புதுப் பொலிவைக் கொடுத்தது.

> "என்ன இருந்தாலும் பிறந்த மண்ணில் கிடந்து உருண்டாலும் தகும். பச்சைத் தண்ணியைக் குடித்தாலும் மரியாதையோட இருக்கலாம்."

# அழிக்கப்பட்ட கிராமம்....

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வலையிறவு பிள்ளையார் ஆலயம் முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்டது. வலையிறவு கிராமசபைக் கட்டடம், வாசிகசாலைக் கட்டடம் என்பனவும் தரைமட்டமாக்கப் பட்டன. புதூர் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம், சனசமூக நிலையக் கட்டடம் என்பனவும் உடைக்கப்பட்டன. இவை தற்போது வேறிடங்களில் தற்காலிகமாக இயங்கி வருகின்றன.

வலையிறவு மெதடிஸ்த மிசன் வித்தியாலயம், புதூர் விக்கினேஸ்வரா வித்தியாலயம், புதூர் விநாயகர் ஆலயம் என்பன தற்போதும் விமான நிலைய எல்லையினுள் அமைந்துள்ளன. இதனால் மாணவர்கள் கல்வி கற்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் 1985 ஆம் ஆண்டுக்குப் பின் இப்பாடசாலைகளில் எந்தவித அபிவிருத்தி வேலைகளும் இடம்பெறவில்லை. கட்டிடம் அமைப்பதற்குக் கூட விமானப் படையினர் அனுமதி மறுத்து வந்தனர். இப்பாடசாலைகளுக்குப் பல இலட்சம் ரூபாவில் கட்டடம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் கட்டடம் அமைப்பதற்கு விமானப்படையினர் அனுமதி மறுத்துவிட்டனர்.

ஆலையடிச்சோலை மயானம் விமானப்படையினரின் எல்லையில் உள்ளதால் அங்கு சடலம் அடக்கம் செய்வதாயின் விமானப் படையினரின் அனுமதியைப் பெற்றே அடக்கம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

"இக்கிராமங்களில் வாழ்ந்தவர்களின் பூர்வீகக் காணிகள் சுவீகரிக்கப்பட்டபோதிலும் அவர்களுக்கு உரிய முறைப்படி நஷ்டஈடு வழங்கப்படவில்லை. காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் 1990 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டதால் இந்நிலை ஏற்பட்டது" எனக் கூறுகின்றார் விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டவர்களின் சங்கத்தின் தலைவர் ஜோர்ஜ் பிள்ளை (55வயது).

# நிறைவேற்று அதிகாரம்....

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனை 2004ம் ஆண்டு சிறந்த முறையில் பயன்படுத்தினார்கள்.

பலருடைய கவனத்தை வென்ற தகவல்கள் பெற்றுக்கொள்ளல் ஆணைக்குழு தொடர்பான முழுமையான தகவல்கள் அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட வேண்டிய தில்லை. தகவல்கள் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக இவ்வாறானதொரு முழுமையான விளக்கங்கள் அரசியல் யாப்பில் தேவையில்லை என்பது தவறானதாகும். இதற்கான முழுமையான உரிமைகள் உள்ளன. அதன் விளக்கவுரைகள் கீழே குறிப்பிடப்பட வேண்டும். அரசியல் யாப்பொன்றினை வரையும் பொழுது பின்பற்றப்படும் பிரதான கொள்கை இதுவாகும். தகவல் தொடர்பாடல் ஆணைக்குழுவை அரசியல் அமைப்பிற்கு ஏற்றவாறு உருவாக்கினால் நன்மைபயக்கும். அதன் ஏற்பாடுகள் அனைத்தும் சட்டமூலத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். அரசியல் யாப்பு என்பது பிரதான சட்ட வரையறைகளை மாத்திரமே உள்ளடக்கும். அதனுள் அனைத்து காரணிகளும் உள்ள டங்கப்படாது. விசேட சட்டமூலங்களின் உள்ளேயே பிற காரணிகள் உள்ளடங்கப்படுகின்றன.

**எதிர்ப்பவர்கள் நாட்டின் எதிரிகளே – சட்டத்தரணி எஸ்.ஜி.புஞ்சிஹேவா**



முன்மொழியப்பட்டுள்ள 19ம் திருத்தச் சட்டத்தில் குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் இது ஆட்சிமுறையிலுள்ள ஏகாதிபத்தியத்தில் மாற்றங்களைச் செய்வதாகவே உள்ளது. எனவே குறைபாடுகள் பிரச்சினைகள் காணப்பட்ட போதிலும் அவற்றை முன்மொழிந்து ஆராய்வதன் மூலமாக சட்டமூலமாக்கலாம்.

இதனை எதிர்ப்பதன் மூலமாக புலப்படுவது யாதெனில் ஏகாதிபத்திய முறைமைக்கு நாட்டின் மீது கொண்டுள்ள அன்பினால் எதிர்க்கவில்லை மாறாக தங்கள் அதிகாரத்தின் மீதுள்ள விருப்பத்தினாலேயே எதிர்க்கின்றார்கள். நாட்டின் மீது அன்பு செலுத்த வேண்டுமென்ற தேவை அவர்களிடத்தே இல்லை.

ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படும் பொழுது அவை பிரதமருக்கே வழங்கப்படுகின்றது. ரணில் வந்துவிடுவாரோ என்ற பயமே இவர்களை ஆட்கொண்டுள்ளது. ரணிலிற்கு அதிகாரம் கிடைத்ததும் தாங்கள் விரும்பிய முறையில் அதிகாரத்தை பயன்படுத்தலாம் என்று எண்ணுகின்றனர். அவர்கள் இதனையே முன்பும் செய்தார்கள். 1978ம் ஆண்டில் இதற்கு எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவிக்கப்படவில்லை. சந்திரிக்காவின் காலத்தில் அனைவருக்கும் நன்மை பயக்கும் பிரேரணையொன்று முன்மொழியப்பட்டது. ஆனால் அதனை ஒருவரும் ஆதரிக்கவில்லை. அப்போதும் எதிர்த்தார்கள். எது எவ்வாறாயினும் 19ம் திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றாகும். மக்கள் அரசியல் விழிப்புணர்வுடனேயே தை மாதம் 8ம் நாள் தங்களிடையே வாக்கினை உபயோகித்தார்கள்.


தமிழ், முஸ்லிம் மக்களைப் போன்றே சிங்கள மக்களும் அரசியல் விழிப்புணர்வுடனேயே தங்களுடைய வாக்குகளை பயன்படுத்தினார்கள். இத்திருத்தச்சட்டத்தை எதிப்பவர்கள் இன்றும் ஒவ்வொரு விகாரைகளிற்கும் விஜயம் செய்து மீண்டும் கள்வர்களையும் மற்றும் மோசடிக்காரர்களையும் தேர்வுசெய்யுமாறு தெய்வத்திடம் மன்றாடுகின்றார்கள். நடைமுறை அரசியல் யாப்பில் மேற்கொள்கின்ற திருத்தம் நன்மை பயக்கும் திருத்தச்சட்டமாகும். குறைப்பாடுகள் இருக்குமாயின் அவற்றை திருத்திக் கொள்ள சந்தர்ப்பங்கள் உள்ளன. சமூக அரசியல் அறிவு இருக்குமாயின் பின்னரும் இப்பிரேரணையில் திருத்தங்களை மேற்கொள்ளலாம். அரசியல் குளறுபடிகளை மேற்கொள்ள முயல்வார்களாயின் பாராளுமன்றை கலைத்து பாராளுமன்றத் தேர்தல் ஒன்றினை நடாத்துவது சிறந்ததாகும். இச்செயற்பாட்டின் பொழுது மக்கள் அரசியல் அறிவு படைத்தவர்களாக ஏனெனில் மீண்டுமொருமுறை இக்கள்வர்களை நியமிப்பதா இல்லையா என மக்களே இறுதி முடிவை எடுக்க வேண்டும்.

# நூல் அறிமுகம்

## மாற்று அரசியல் இயக்கமே இன்றைய தேவை

**அரசியல் ஆய்வாளர்**
**சி.அ.யோதிலிங்கத்துடன்**
**ஒரு நேர்காணல்**
**நேர்கண்டவர் நந்தன்**

வெளியீடு - குமரன் புத்தக இல்லம்
விலை - 180 ரூபா




அரசியல் சி.அ.யோதிலிங்கத்துடன் ஒன்பது நேர்காணல்கள் "மாற்று அரசியல் இயக்கமே இன்றைய தேவை" என்ற பெயரில் நூலாக வெளிவந்திருக்கின்து. லண்டன் உலகத் தமிழர் உயிரோடை வானொலிக்காக லண்டனில் வாழும் நந்தன் மேற்கொண்ட நேர்காணல்களே நூலாக வெளிவந்திருக்கின்றன. குமரன் புத்தக இல்லம் வெளியிட்டிருக்கின்றன. ஆயுதப் போராட்ட முடிவுக்குப் பின்னரான அரசியல் நிகழ்வுப் போக்குகள் தொடர்பாக யோதிலிங்கம் பல ஆணித்தரமான கருத்துக்களை நேர்காணலில் கூறியிருக்கின்றார்.

விக்கினேஸ்வரனின் முல்லைத்தீவு விஜயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தென்னாபிரிக்கா விஜயம், இந்தியத் தேர்தல் முடிவுகள், இந்தியப் பிரதமர் மோடியின் பதவி ஏற்பு வைபவம், ஜெனிவாவும் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானமும், பிரித்தானியப் பிரதமர் டேவிற் கமரூனின் யாழ்ப்பாண விஜயம், உள்ளூராட்சி சபைகளில் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுதல், மாற்று அரசியல் இயக்கமே இன்றைய தேவை, சிராணி பண்டாரநாயக்காவிற்கு எதிரான குற்றப்பிரேரணை என்கிற உப தலைப்புகளில் நேர்காணல் வெளிவந்திருக்கின்றது.

இந்த நேர்காணல்களில் மிகவும் கவனத்திற்குரியது மாற்று அரசியல் இயக்கமே இன்றைய தேவை என்கின்ற நேர்காணல்தான். இதில் யோதிலிங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசிய அரசியலை முன்னகர்த்தக்கூடிய தகுதியை இழந்துவிட்டது. எனவே மாற்று அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்ப வேண்டும் என வலியுறுத்துகின்றார்.

மாற்று அரசியல் இயக்கம் தேவை என்பதற்கு காரணங்களாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் அரசியலை பின்நோக்கி நகர்த்துகின்றமை, தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற தமிழ் அரசியலின் அடிப்படைக் கோட்பாடுகளைக் கைவிட்டமை, தமிழ் நாட்டையும் தமிழ் டயஸ் போறாவினையும் பலவீனப்படுத்துகின்றமை, தேசிய அரசியல் இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு பதிலாகத் தேர்தலில் கூத்தடிக்கின்ற அரசியல் இயக்கமாக இருக்கின்றமை என்பவற்றைக் குறிப்பிடுகின்றார்.

பல்வேறு விமர்சனங்களை அவரது கருத்துக்கள் வேண்டி நிற்கின்றபோதும் தான் வரித்துக் கொண்டஅரசியல் கொள்கை நிலைப்பட்டிலிருந்து அரசியல் நிகழ்வுகளை அவதானிக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. சமகால அரசியலில் அக்கறையுள்ள அனைவரும் இந்நூலை கட்டாயம் வாசிக்க வேண்டும்.

செல்வநாயகம் - சசிகாந், குப்பிழான்.

# கிராமிய தலைவர்களுக்கு....

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நலன்புரி நிலையங்களிலும் எம்மவர்களே அதிகமாக உள்ளனர்.

தமிழ் அரசியல் தற்போது கொழும்பை மையப்படுத்திய யாழ் சைவ வேளாளரின் தனித்த ஆதிக்கத்தின் கீழ் சென்றுள்ளது. யாழ்.மாவட்டத்தில் எண்ணிக்கையில் எமது சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கின்ற போதும் நமது சமூகத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் எவருமில்லை. மாகாண சபை உறுப்பினர்கள் இருவர் மட்டும் உள்ளனர். அவர்களும் நம்மை பிரதிநிதிப்படுத்துபவர்களாக இல்லை. போரில் பல இழப்புக்களைச் சந்தித்த சமூகம் திரும்பவும் கைவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கிராமிய உழைப்பாளர்களில் இருக்கும் விதவைகள், மாவீரர் குடும்பங்களின் கோரிக்கைகளை யார் வைப்பது? அவர்களின் அன்றாட நெருக்கடிகளை யார் முன்வைப்பது? உழைக்கும் மக்களுக்கு என ஒரு அமைப்பு அவசியம் என்ற கருத்து வளர்கின்றதா? கிராமிய மக்கள் ஸ்தாபனமயப்படாமல் உரிய அரங்குகளில் எமது விவகாரங்களை முன்வைக்க முடியுமா? மீனவர் சங்கங்கள் தமது கோரிக்கைகளை உரிய அரங்குகளில் தமிழ்த் தலைமை முன்வைக்கவில்லை என குற்றம் சாட்டியுள்ளன. எங்களால் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு வர முடியும். எங்கள் விவகாரத்தை முன்னெடுக்காவிட்டால் உங்களுக்கு வாக்களிக்காமல் விடுவோம் என அவை எச்சரித்திருந்தன. இதன் பின்னர்தான் கடற்றொழில் அமைச்சுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடாத்தியது.

நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்ற பயன்படுத்தப்படுகின்ற சமூகமாக இருக்க முடியாது. இந்தப் போக்கில் மாற்றங்களைக் கொண்டு வர நாம் முயற்சிக்க வேண்டும். உழைக்கும் கிராமிய மக்களகிய நாம் என்றென்றும் முற்போக்கான தலைமைகளினால் முன்னெடுக்கப்படும் தேசிய அரசியலை இனங்கண்டு இணைந்து கொள்ள வேண்டும்.

# யாரை ஏமாற்றுகிறார்....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே ஆட்சியாளர்கள் விரும்பினால் கூட எதுவும் செய்யமுடியாது என்ற நிலையே தென்னிலங்கையில் காணப்படுகின்றது. அரசியல் தீர்வு தொடர்பில் ஆட்சியாளர்களுக்கு விருப்பமும் இல்லை, இயலுமையும் இல்லை என்பதே உண்மையான நிலையாகும்.

மூன்றாவது கேள்வி சந்திரிக்கா தலைமையிலான ஜனாதிபதி செயலணி தமிழ் மக்களுக்குப் பயன்படக்கூடியதாக இருக்குமா? என்பதாகும். ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டமை காலம் கடத்துவதற்கே தவிர தமிழ் மக்களின் விவகாரங்களை தீர்ப்பதற்கல்ல ஆட்சி மாற்றம் வந்தவுடனேயே பல பிரச்சினைகளைத் தீர்த்திருக்க முடியும். இராணுவத்தை அகற்றல், காணிகளை விடுவித்தல், சிறையில் உள்ளவர்கள் விடுதலை போன்றவற்றை தீர்த்திருக்க முடியும். ஜனாதிபதியின் ஒரு உத்தரவு மூலம் இவற்றைச் செய்திருக்கலாம். சிறையிலுள்ளவர்களை ஒரு பொது மன்னிப்பு மூலம் வெளியே விட்டிருக்கலாம். முன்னரே கூறியது போல இதைச் செய்யும் விருப்பமும் ஆட்சியாளரிடம் இல்லை, இயலுமையும் இல்லை. சம்பந்தன் ஜனாதிபதிக்குத் தகவல் சேகரித்துக் கொடுக்கப் போகின்றாராம். அனைத்துத் தகவல்களுமே அரசாங்கத்திடம் இருக்கின்றது. புதிதாக எதனையும் பெற்றுக் கொடுக்கும் தேவை அரசாங்கத்திற்கு இல்லை.

இந்த உண்மைகளெல்லாம் சம்பந்தனுக்குத் தெரியாததல்ல. அவருக்கு அனைத்தும் தெரியும். அவர் தனது இந்திய எஜமானின் கட்டளைக்கிணங்க இணக்க அரசியல் என்ற பெயரில் சரணாகதி அரசியலை செய்து கொண்டிருக்கின்றார். அந்த சரணாகதி அரசியலை மக்களிடம் விற்க வேண்டும். அதற்கு அதனை பயன்படுத்த வேண்டும். அதற்காகத்தான் இந்த கதைகளை அவிழ்த்து விடுகின்றார். இவற்றையெல்லாம் நம்புவதற்கு தமிழ்மக்கள் முட்டாள்களல்லர்.








தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் மாவட்ட அலுவலகம் வவுனியாவில் கடந்த சனிக்கிழமை (18.04.2015) 4மணிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந் திரகுமார் பொன்னம்பலத்தினால் திறந்து வைக்கப்பட்டது.



கிராமிய உழைப்பாளர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட சமூக செயற்பாட்டாளர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி யாழ். மருதனார்மடம் விவசாயக் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் அரசியல் ஆய்வாளர் சி.அ. யோதிலிங்கம் வளவாளராகக் கலந்து கருத்துரை வழங்கினார்.



கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 7 ஏக்கர் காணியை இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ளமையை விடுவிக்கக் கோரி 5 பிள்ளைகளின் தாய் திருமதி இந்திரா யோகேந்திரன் (வயது - 65) உண்ணாவிரதம் இருந்தார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவு வழங்கியது.



பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நிதியுதவி வழங்கினார்.

**இது நம்தேசம் வார இதழாக வெளிவரத்தொடங்கியுள்ளது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருவதில் மகிழ்வடைகின்றோம். வாசகர்களே...! உங்கள் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், விமர்சனங்கள் போன்றவற்றை எங்களுக்கு அனுப்புங்கள்**

**அனுப்பவேண்டிய முகவரி: இல. 43, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

இவ்விதழ் இல. 43, 03ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் ஜெயஸ்ரீ பிறிண்டேஸ் (இல.83, கல்லூரி வீதி, நீராவியடி) இல் 15.04.2015 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.